# பொருளியல் நோக்கு

ஜனவரி
1988




## பெரெஸ்ட்ரொய்கா
### மாறிவரும் சோவியத் சமூக

க்கள் வங்கி வெளியீடு


# ஒரே பார்வையில்

**பசுமைப்புரட்சி**





மூலம்: சர்வதேச கோதுமை கவுன்சில்


**விவசாயத்தில் தொழிலாளர் உற்பத்தித்திறன், 1987**






**சோவியத் சமூக அமைப்பு (சதவீதம்)**





**அதள பாதாளம்**








**சோவியத் மசகெண்ணெய்யின் கொள்வனவுச்சகதி**




நூறு கோடி பீப்பா




மூலம்: எண்ணெய், வாயு சஞ்சிகை

* 50% தலையிடாப் பிரதேசம் உட்பட

# பொருளியல் நோக்கு

மலர் 13 இதழ் 10 ஜனவரி 1988



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## நிரல்கள்


நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 ஜனவரி – 1988

சுற்றுலாத்துறை 16 இலங்கை நிலைமையும் உலக வர்த்தகமும்

மாணவர் பக்கம் 32 பணத்தை பெறுமதியிறக்கம் செய்தல்


## விசேஷ அறிக்கை


3 சோவியத் யூனியனும் பெரொஸ்ட்ரொய்காவும்


## சிறப்புக் கட்டுரைகள்


ஜேவியர் எஸ்பினோசா 21 ஒபெக்: கட்டுப்பாடும் சந்தைப்பங்கும்

ஜேம்ஸ் செல்ஸ் 24 மசகு எண்ணெய்ப் பிரச்சினை

சரத் ராஜபத்திரன 25 கைத்தொழில்களைப் பெருக்குதலும் வெளிநாட்டு வர்த்தகமும்


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின்சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

★ தனியார்மயமாக்கல் – எண்பதுகளில் பிரதான அரசாங்க கொள்கையொன்றாக அது வளர்ச்சி கண்ட விதம் – அனுபவங்களும் பிரச்சினைகளும்

★ இலங்கையிலும் இந்தியாவிலும் பால் உற்பத்தி

★ பல்கலைக்கழக கல்வி – தற்போதைய நெருக்கடிகள்

★ அமெரிக்க சந்தைகளுக்கான இலங்கையின் உடுதுணி ஏற்றுமதிகள்

அட்டைப்படம்

சரத் விஜேரத்ன

# நிகழ்ச்சிக் குறிப்பேடு.

ஜனவரி

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் ஜனவரி 1988-ல் 714.3 புள்ளிகளாக இருந்ததென குடிசன கணிப்பீட்டு, புள்ளிவிவர திணைக்களம் அறிவித்தது. இது டிசம்பர் 1987-ல் 691.3 புள்ளிகளாகவும், ஜனவரி 1987-ல் 631.4 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங்களுக்கான சராசரி 659.7 புள்ளிகளாக இருந்ததுடன் இதற்கு முன்னைய 12 மாதங்களின் சராசரி 609.7 புள்ளிகளாக இருந்தது.

ஐக்கிய அமெரிக்க பீ எல் 480 ஒப்பந்தத்தின் கீழ் 1987/88 காலத்துக்கென உணவு ஆணையாளர் திணைக்களம் 105,000 மெட். தொன் மென் கோதுமைத் தானியத்தை வாங்கியிருக்கிறதென பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்தது. புதிய கோதுமைத்தானிய ஒப்பந்தத்தின் கீழ் ஐக்கிய அமெரிக்கா வால் வழங்கப்படும் முதல் தொகையான 1 கோடியே 20 இலட்சம் அ. டொலரினை இது உள்ளடக்குகின்றது. 1986/87 ஒப்பந்தத்தின் கீழ் 275,000 கோதுமைத் தானிய அலகுகளை கொள்வனவு செய்வதற்கென ஐக்கிய அமெரிக்கா 3 கோடியே 10 இலட்சம் டொலர்களை வழங்கியது.

4. இலக்ட்ரோனிக்ஸ் பொருட்களுக்கான உலக சந்தையில் 48 சதவீதத்தை ஜப்பானிய கம்பனிகள் பெற்றிருப்பதாக ஐக்கிய அமெரிக்க சந்தைப்பகுப்பாய்வு நிறுவனமொன்று நடாத்திய ஆய்வொன்று எடுத்துக் காட்டியது. உலக அளவில் டொஷிபா கம்பனி நிப்பன் எலக்ரிக் கம்பனிக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்று 1987 ல் பாரிய அளவில் வளர்ச்சி கண்டிருக்கிறது. நிப்பன் எலக்ரிக் கம்பனியின் வருமானங்கள் 319 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்தன. இது 1986-ஐ விடவும் 21 சதவீத அதிகரிப்பாகும். டொஷிபா கம்பனியின் வருமானம் 299 கோடி டொலர்களாகவும், மூன்றாவது இடத்தைப் பெற்ற ஹிட்டாச்சியின் வருமானம் 278 கோடி டொலர்களாகவும் இருந்தது.

6. சாதாரண கடன்களுக்கான வருட வட்டி வீதத்தை 7.03 சதவீதத்திலிருந்து 6.59 சதவீதமாக குறைத்திருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்தது.

7. மூன்று கடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது தொடர்பான நிதியமைச்சரின் மூன்று முன்மொழிவுகளுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. இரண்டாந்தர வலுப் பங்கீட்டுத் திட்டமொன்றுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் 27,020,000 எஸ். டி. ஆர். கடன் முதலாவதானதாகும். செய்திட்டப் பிரதேசத்தில் மின் விநியோக அமைப்பை புனருத்தாரணம் செய்வதற்கும், விஸ்தரிப்பதற்குமென இக்கடன் வழங்கப்படும். மேலும், தற்பொழுது 23 உள்ளூராட்சி சபைகளால் சேவைகளைப் பெற்று வரும் சுமார் 83,000 வாடிக்கையாளர்களுக்கான மின்சார சேவைகள் இதன் மூலம் விருத்தி செய்யப்படும். அடுத்தது, இரண்டாவது வீதி அபிவிருத்தி செய்திட்டத்துக்கென 28,340,000 எஸ். டி. ஆர். வழங்கப்படுகின்றது. இச் செய்திட்டம் வீதிப் புனருத்தாரணம், விருத்தி, பராமரிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். மூன்றாவது கடனான 15,580,000 எஸ். டி. ஆர். அவசர வீதிப் புனரமைப்புத் திட்டமொன்றுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் சுமார் 820 கி. மீ. தூரமான வீதிகளும் சிறு பாலங்களும் புனரமைப்பு செய்யப்படும்.

10. கொரியா வர்த்தக, கைத்தொழில் அமைச்சின் பூர்வாங்க மதிப்பீடுகளின்படி 1987-ல் தென் கொரியாவின் வர்த்தக மிகை இரட்டிப்பாக அதிகரித்து 660 கோடி அ. டொலராக இருந்தது.

சர்வதேச கொக்கோ அமைப்பு அதன் விலை ஆதார திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கென அவசர கூட்டத்தொடரொன்றை கூட்டுகிறது என்ற செய்தி பரவியதும் லண்டனிலும் நியூயோர்க்கிலும் கொக்கோ விலைகள் உயர்ந்தன.

13. இலங்கை அரசாங்கத்தின் அவசர வேண்டுகோள் ஒன்றினையடுத்து இலங்கையில் புனருத்தாரண, புனர் நிர்மாண வேலைகளுக்கென 485 கோடி ரூபாவை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. இதன் கீழ் ஜப்பான், இலங்கை போக்குவரத்து சபைக்கு 120 பஸ்களை வழங்கும். இந்தக்கொடை உதவியின் பெறுமதி 25 கோடி ரூபாவாக இருக்கும். மற்றவை இரு சலுகை ரீதியிலான கடன்களாகும். வீதிப் பராமரிப்பு புனருத்தாரணத்துக்கென வழங்கப்படும் கடன் 273.6 கோடி ரூபா முதலாவது கடனாகும். இரண்டாவது கடனாக மகாவலி வலதுகரை விவசாய அபிவிருத்தி செய்திட்டத்துக்கென 186.5 கோடி ரூபா வழங்கப்படுகின்றது.

மகரகமையில் அமைந்துள்ள புற்று நோய் நிறுவனத்தின் சேவை வசதிகளை பலப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சர் முன்வைத்த முன்மொழிவொன்றை அரசாங்கம் கொள்கை அளவில் அங்கீகரித்தது. நாட்டில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் புற்று நோயாளர்களுக்கு நவீன சிகிச்சை, அறுவை சிகிச்சை சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் வெளிநாட்டுச் செலாவணிக் கூறு நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும். பங்களாதேஷுக்கான உதவி வருகை 1986-ம் நிதியாண்டில் 3 கோடியே 90 இலட்சம் அமெரிக்க டொலர்களிலிருந்து 130 கோடி அ. டொலர்களாக உயர்ந்தது. இது நிதியாண்டு 1987-ல் 146 கோடி டொலர்களாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்களினாலும், உதவி பகிர்ந்தளிப்பதற்கென பங்களாதேஷ் தனி கணக்கு அலகொன்றை தாபித்ததனாலும் இவ்வதிகரிப்பு ஏற்பட்டதென உலக வங்கி செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.

19. ரூ. 140 கோடியே 40 இலட்சம் பெறுமதியான 4 உதவிக் கொடைத் திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இலங்கையில் அமைந்துள்ள ஜப்பானிய ஸ்தானிகராலயம் அறிவித்தது. வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் திருத்தங்களைச் செய்தல் (கட்டம் 1), மோட்டார் வாகன பொறியியல் தேசிய பயிற்சி நிலையமொன்றை ஸ்தாபித்தல் (கட்டம் 1), 1987-க்கான வருடாந்த உணவு உற்பத்திக் கொடை, புனர்நிர்மாண, புனருத்தாரண செய்திட்டத்தின் கீழ் பஸ்களை வழங்குதல் என்பன இந்த 4 திட்டங்களுமாகும். நிதியமைச்சில் ஜப்பானிய உயர் ஸ்தானிகரும் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரும் இதற்கான கடிதங்களில் கையெழுத்திட்டு பரிமாறிக்கொண்டனர்.

20. காணிச் சீர்திருத்தச் சட்டத்தை திருத்துவதற்கான ஜனாதிபதியின் முன்மொழிவொன்றுக்கு அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புதலளித்தது. இச் சட்டத்திருத்த திகதியிலிருந்து ஒருவர் வைத்துக் கொள்ளக்கூடிய விவசாய காணிக்கான உச்சவரம்பு 50 ஏக்கரிலிருந்து 100 ஏக்கராக உயர்த்தப்படும்.

வைத்திய ஆராய்ச்சி நிலையத்தை விருத்தி செய்து, விஸ்தரிப்பதற்கான செய்திட்டமொன்றுக்கு ஜப்பான் வழங்க இணங்கியிருக்கும் 2,926,000,000 யென் கொடையை ஏற்பது தொடர்பான சுகாதார அமைச்சரின் முன்மொழிவினை அரசாங்கம் அறிவித்தது. 1950-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்நிறுவனத்தில். இப்பொழுது அதிகரித்திருக்கும் கோரிக்கைக்கேற்ப ஆய்வு கூட வசதிகள் இல்லை. மேலும், அதன் கட்டடங்களும் உபகரணங்களும் பழையவையாக இருக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் ஓர் ஆய்வு கூடம், உற்பத்தி தொகுதி, விலங்கு நிலையம், கட்புல, செவிப்புல மண்டபத்தை உள்ளடக்கிய ஒரு போதனை அலகு என்பன அமைக்கப்படும்.



# சோவியத் ரஷ்யாவும் பெரெஸ்ட்ரொய்காவும்

1987 அக்டோபரில் பங்கு மூலதனச் சந்தை வீழ்ச்சியடைந்ததிலிருந்து மேனாட்டு முதலாளித்துவப் பொருளாதாரங்களிற் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன; மூலதனத் தொகுதிகளின் பெறுமானங்கள் நிவ்யோர்க் முதல் லண்டன், ஹொங்கொங், டோக்கியோ வரையுள்ள பல நிதி நிலையங்களில் வீழ்ச்சியடைந்தன. இது உலக முதலாளித்துவப் பொருளாதாரங்களில் பிரதிபலிப்பை ஏற்படுத்திற்று. அக்டோபர் அதிர்ச்சியிலிருந்து இப்பொருளாதாரங்கள் இப்பொழுது மீட்சி பெறுகின்ற நிலையிலுள்ளன. இந்நிலையில் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொள்ளாத பாரிய பொருளாதார அமைப்பான சோவியத் யூனியனின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் ஆழமான மாற்றம் பற்றி ஆராய்தல் அவசியமாகும். இப்பொழுது சோவியத் யூனியனுக்குள் ஏற்பட்டுவரும் மாற்றங்களை குர்பச்சேவ், ''ரஷ்யாவின் இரண்டாம் புரட்சி'' எனக் குறிப்பிடுகிறார். பலநாடுகளில் இம்மாற்றங்கள் பற்றி ஆராயப்படுகிறது. இவ்வாய்வுகளுக்கு ரஷ்யா மட்டுமன்றிப் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. 1920 ஆம் 1930 ஆம் ஆண்டுத் தொடர்களில் சோவியத் யூனியன் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மிச்சசொச்சங்களாகவே இவ்வாய்வு அமைகிறது. அக்காலத்தில் ஒரு வீரப் புத்துலகமே தோற்றுவிக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றியது. அது மற்ற நாடுகளும் பின்பற்றத் தக்க ஒரு மகத்தான முன்மாதிரி என்று ரஷ்யக் கவிஞர் ஒருவர் வருணித்திருந்தார்;

அக்காலக் காலனித்துவ உலகில், ரஷ்ய நாட்டின் மாற்றங்களை விடுதலை பெற்ற நாடுகளுக்குத் தக்கதொரு முன்மாதிரியாகக் கருதியவர்கள் பலர் இருந்தனர். இவர்களில் மூன்றாவது உலகின் மிகப்பெரிய நாடுகளான சீனா, இந்தியா ஆகியவற்றின் தலைவர்களும் அடங்குவர். இலங்கையிலும் கூட சோவியத்தின் மாதிரி, இடது சாரித் தலைவர்களை மட்டுமன்று பிற இராஜதந்திரிகளையும் கவர்ந்திருந்தது. இத்தகையோரின் நிரலில் 1930 ஆம் 1940 ஆம் ஆண்டுத் தொடர்களில் இடதுசாரி அரசியல்வாதிகளான திரு. பிலிப் குணவர்த்தன, கலாநிதி என். எம். பெரேரா,




கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோருடன் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. எஸ். டப்ளியு. ஆர். டி பண்டாரநாயக்க ஆகியோரையும் சேர்த்துக் கொள்ளலாம். அன்றைய காலனித்துவ உலகைச் சார்ந்தவர்களுக்கும் நசுக்கப்பட்ட மேனுட்டுப் பாட்டாளிகளுக்கும் ரஷ்யாவில் ஏற்பட்ட மாற்றங்கள் திட்டவட்டமானதொரு திருப்பமாகவும், பொருளாதாரத்திலும் சமூகத்திலும் முற்றிலும் புதியதொரு அமைப்பையும் குறிப்பனவாகத் தோன்றின. இப்புது அமைப்பில் பட்டினி ஒழிக்கப்பட்டு அனைவர்க்கும் உறைவிடம் கிடைக்கும் என்பது மட்டுமன்றி, முதலாளித்துவ பொருளாதாரத்தின் பிணிகள் முற்றாக ஒழிக்கப்படுவதோடு, மனிதனின் முழு உற்பத்தித்திறனும் வெளிப்படுத்தப்படும் என்றும் அவர்கள் எதிர்பார்த்தனர். மனித அபிலாசை முழுமையான மலர்ச்சியடையும்; முதலாளித்துவத்தின் பிரச்சினைகள் சென்ற கால நிகழ்ச்சியாக மாறிவிடும்; வாழ்க்கைத்தரம் தொடர்ந்து உயர்வதும் மனித கௌரவம் மேலோங்குவதும் இறுதிப் பயன்களாக அமையும் என்றெல்லாம் அவர்கள் எண்ணினர்.

புரட்சிக்குப் பின்னர், சோவியத் நாடு முற்றுகையிடப்பட்டு, 1917 முதல் 1921 வரை யுத்த காலக் கம்யூனிசம் ஆபத்தான நிலையில் உயிர்வாழ்ந்தது. இந்நிலை 1921 ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் கொள்கையினுல் விருத்தியடைந்தது. இக்கொள்கையானது, சில சந்தைச் சக்திகளும் தனியார் முயற்சிகளும் அவற்றின் பங்கை ஓரளவு அளிப்பதற்கு இடங்கொடுத்தது. ஆனுல், சோவியத் நாட்டின் உண்மையான கைத்தொழில் மயமுயற்சி 1928 முதல் ஸ்டாலின் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இக்கால கட்டத்தில் தான் எதேச்சாதிகார நிலைமைகளின் கீழ் நாட்டுப் புறத்துக்கும் நகரங்களுக்குமிடையிலான உறவு பெருமளவு மாற்றப்பட்டு வலுக்கட்டாயமாக கைத்தொழில் மயமாக்கல் இடம் பெற்றது. இக்கால எல்லையில் வெளியாக்கப்பட்ட புள்ளி விவரங்கள் துரித பொருளாதார வளர்ச்சியைக் காட்டின. எவ்வாருயினும், இவ்வளர்ச்சி யதார்த்த நிலை மறைக்கப்பட்ட நிலையிலும் அடையப்பெற்றது. ஸ்டாலினின் கீழிருந்த ஒரு லெனினிய சமுதாயத்தின் குறித்த நிலைமைகளினுல் திரையிடப்பட்டிருந்த யதார்த்த நிலையில் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் தடுக்கப்பட்டிருந்தது. ஆனுல், 1970 ஆம் ஆண்டுத் தொடரில் பொருளாதாரத்தில் சிரமங்கள் வளரத் தொடங்கின. கம்யூனிஸ்ட் கட்சியின் 27 வது காங்கிரசில் மிக்காயில் குர்பச்சேவ் பின்வருமாறு சுட்டிக் காட்டினுர்.

''சோவியத் நாடு, மாற்றமடைந்த பொருளாதார நிலைமையை அரசியல் ரீதியாக மதிப்பிடுவதற்கும் பொருளாதாரத்தில், மும்முரமான அபிவிருத்தி முறைகளை அறிமுகஞ் செய்வதற்கான, மாற்றங்களைச் செய்வதற்கும் தவறிவிட்டது. பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. பேச்சுக்கள் இடம் பெற்றன. ஆனுல், நடைமுறையில் எதுவும் செய்யப்படவில்லை.''

சோம்பல், பொருளாதாரமானது, மேலதிகத் தொழிலாளர்களையும் வளங்களையும் பயன்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட விரிவாக்க அடிப்படையில் தொடர்ந்து அபிவிருத்தியடைந்தது. இதன் விளைவாக திறமையைக் காட்டும் ஏதுக்களும் தொழிலாளர் உற்பத்தித்திறனும் கணிசமாகக் குறைந்தன. சமூகத்தின் தேவைக்கும் அடையப்பெற்ற உற்பத்தி மட்டத்துக்கும் இடையிலும் உள்ளபடியான தேவைக்கும் பொருள் வழங்களுக்கும் இடையிலும் இடைவெளி ஏற்பட்டது.

கைத்தொழில் பொறித் தொகுதிகள், பண்ணைகள் என்பவற்றுக்கும் உழைக்கும் மக்களின் முயற்சிகளுக்குமிடையில் பொருத்தமின்மை காணப்பட்டது. கடுமையான பொருளாதாரக் கட்டுப்பாடு, கடுமையான மத்திய திட்டமிடல், கட்டளை மூலமான நிர்வாகம் என்பன பொருளாதார முறையைக் கீழே தள்ளின. இதன் விளைவாக திறமையற்ற பொருளாதார முகாமையும் பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டன. தரக்குறைவான பொருட்களும் தேவையற்ற பொருட்களும் உற்பத்தி

செய்யப்பட்டன. கைத்தொழிற்சாலைகளுக்குப் பாரிய அளவில் மானியம் வழங்கப்பட்டமையால், ஓட்டுண்ணி மனப்பாங்கு வளர்ந்து பெருந்தொகையான கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாதிருந்ததோடு, விஞ்ஞானரீதியான, தொழினுட்ப முன்னேற்றமும் அசட்டை செய்யப்பட்டது. இத்தகைய பாரிய பொருளாதார முகாமைத் தவறுகளின் காரணமாக சிகப்பு நாடா முறையும் தவறுகளை மூடிமறைப்பதும் அதிகரித்தது. சொல்லுக்கும் செயலுக்குமிடையில் வேறுபாடு, ஏமாற்றுப் பேச்சுக்கள், ஊழல், துஷ்பிரயோகம் என்பன ஆழமாக வேர் விட்டன. இவை, தொடக்கத்தில் வாக்களிக்கப்பட்ட சோசலிசத்துக்குக் குழி பறித்து அதனைத் திரித்துக்காட்டின. முரண்பாடுகளும் சிக்கல்களும் குவியத் தொடங்கின.

குறிப்பாக பிரஸ்னேவின் ஆட்சிக் காலத்தில் சோவியத் நாட்டின் முன்னேற்ற வேகம் படிப்படியாகக் குறைந்தது என்பதைப் பல பொருளாதார, சமூகச் சுட்டிக்காட்டிகள் எடுத்துக் காட்டுகின்றன. அதன் வளர்ச்சி வீதமும் குறைந்தது. பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற பெருமைக்குரிய வாக்குறுதியே ஒரு பெரும் பிரச்சினையாகிவிட்டது. ஆனால், அப்படி ஒரு நிலை இருப்பதாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனால், இது, புனர் நிர்மாணமும் திறந்ததன்மையும் (கிளஸ்னொஸ்ட், பெரெஸ்ட்றொய்கா) வேண்டுமென குருபச்சேவ் பல சந்தர்ப்பங்களில் கூறிய போது ஒப்புக்கொள்ளப்பட்டது. இது, சோவியத் சமுதாயத்தை மீளமைப்புச் செய்து அதனை மேலும் திறமை வாய்ந்ததாக ஆக்குவதற்கான திட்டமாகும். இவையனைத்தையும் விட அதன் தோல்விகளை இனங்காண்பதற்குரியதாகும். இது, உத்தியோகபூர்வமான பல்வகை உண்மைகளுக்கும் உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள வாடிக்கைக் கட்சிகள் அவற்றைக் கிளிப்பிள்ளை போலச் சொல்லும் நிலைக்கும் பழக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் சிரமமான ஒரு சௌகரியமாகும். பிரெஸ்னேவ் யுகத்தின் இறுதியில், சோவியத் நாடு, ''அபிவிருத்தியடைந்த சோசலிஸ் நிலை''யில் இருப்பதாகக் கூறப்பட்டது. இச் சொற்றொடர் இப்பொழுது முற்றாகக் கைவிடப்பட்டு, மாறாக ''சோசலிசத்தின் துரிதப்பாட்டு நிலை'' எனும் சொற்றொடர் பிரயோகிக்கப்படுகிறது. முன்னர் பயன்படுத்தப்பட்ட ''அபிவிருத்தியடைந்த சோசலிஷ நிலை'' எனும் சொற்றொடரானது, விவசாயம், கைத்தொழில், சேவைகள், சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் மலிந்திருந்த குறைபாடுகளைக் கண்டுகொள்வதிலிருந்து கருத்துரையாளர்களையும் விஞ்ஞானிகளையும் தடுத்திருந்தது.

அதே வேளையில் அரசாங்கம் சமூக உத்தரவாதங்களை ஸ்திரப்படுத்த வேண்டும். வேலை செய்ய முடியாதவர்கள் மூன்று அல்லது அதற்கு கூடிய குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கான நட்டவீடுகளே இந்த உத்தரவாதங்களாகும். தொழிலாளர் திறமையான முறையில் பகிரப்படுவதனையும் அரசாங்கம் கண்காணிக்கும். ஒரு கைத்தொழில் அதன் உற்பத்தியைக் குறைக்கும் போது அதிலிருந்து வெளியேறும் தொழிலாளர்களுக்கு மீள் கல்வியூட்டும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

கல்வியமைப்பும் மறுபயிற்சி முறையும் இதுவரை திருப்திகரமாக இயங்கவில்லையென்றே கூற வேண்டும். இவற்றில் உடனடியாக கவனஞ்செலுத்தப்படும்.

> ''பெரொஸ்ட்ரொய்கா என்பது புதிய துவக்கத்தையும், ஆக்கபூர்வமான முயற்சியையும், நன்னிலையையும், ஒழுங்கினையும் குறிக்கின்றது. மேலும், எமது சமூகத்தின் அனைத்து அம்சங்கள் குறித்தும் விமர்சனம் செய்வதனையும், சுய விமர்சனத்தையும், திறந்த மனதுடன் பேசுவதனையும் அது காட்டுகின்றது. சோஷலிசத்தை ஜனநாயகத்துடன் ஐக்கியப்படுத்தும் உண்மையிலேயே பெரெஸ்ட்ரொய்காவின் சாராம்சம் அடங்கியிருக்கிறது.''
>
> – கொர்பசேவ்

## பெரெஸ்ட்றொய்கா: தீவிர புனர் நிர்மாணத்துக்கான ஒரு திட்டம்

சில மேனாட்டு கருத்துரைஞர்கள் கூறுவதற்குமாறாக, தற்போது இடம்பெற்று வரும் மாற்றங்கள் தனியார் முதலாளித்துவ முறைக்குத் திரும்பும் முயற்சியல்ல. புதிய பொருளாதார இயக்க முறை ''சமூகச் சொத்து, முதனிலையில் மக்கள் அனைவரதும் சொத்து, திட்டமிட்ட அபிவிருத்தி, ஒருவரது வேலைக்கேற்ற பங்கீடு, ஜனநாயக மையவாதம், வியாபாரப் பொருள் பணத் தொடர்புகளை மும்முரமாக்கல்'' என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இம்முயற்சியில் முக்கியமானதொரு நடவடிக்கை, ஒரு புதிய பொருளாதார இயக்க முறையைத் தோற்றுவிப்பதற்கான முகாமைச் சீர்திருத்தமாகும்.

இச் சீர்திருத்தங்கள் தீவிரமானவை என அழைக்கப்படக் காரணம், அவை, ''நிருவாகத்திலிருந்து'' ''பொருளாதார முகாமை'' முறைகளுக்கு மாறுவதற்கான நடவடிக்கைகளாகவும் பொருளாதாரத் துறையில் ஜனநாயகத்தை ஊக்குவிப்பதாகவும் அமைவதாகும்.

''நிர்வாக முகாமை'' முறைகள், அரசின் திட்டத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த பணிப்புரைகளில் தங்கியிருந்தது. அது ஒவ்வோராண்டும் பிரமிட்டின் உச்சி முதல் அடிவரை ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது அரசத்திட்ட வகுப்புக் குழுவிலிருந்து அமைச்சுகளுக்கும் அங்கிருந்து குடியரசுகளுக்கும் அங்கிருந்து கைத்தொழிற்சாலைகளுக்கும் பண்ணைகளுக்கும் சென்றது. இதுவே, பொருளா

தார முகாமைக்கான ''ஆணை மூலமான ஆட்சி''யின் அடிப்படையாகும். இது இப்பொழுது காலங்கடந்த முறையாகக் கருதப்படுகிறது. திறமைக்குறைவானதாகவும் கருதப்படும் இம்முறை இப்பொழுது ஒழிக்கப்படவுள்ளது. இதற்குப் பதிலாக, பொருளாதார முயற்சிகள் அவற்றின் திட்டங்களை அவையே வகுத்துச் செயல்படுத்தச் சுதந்திரம் பெறும். பாவனையாளர் கட்டளைகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும் அரச நிறுவனங்களும் பாவனையாளர்களாகச் செயலாற்றும். அரசாங்கக் கட்டளைகள் (பிரதானமாக பாதுகாப்புத் தேவைக்கான பொருட்கள், பாரிய நிர்மாணத் திட்டங்களுக்கான பொருட்கள் முதலியன) உற்பத்தி வெளியிடுகையில் ஒரு பகுதியேயாகும். உற்பத்தியில் இவற்றிற்கான பங்கு வருடாவருடம் குறையும்.

கட்டளைகளைத் திரட்டியபின் ஒரு தாபனம் அவற்றின் பிரதான பொருளாதாரக் காட்டிகளை மதிப்பீடு செய்யும். அவசியமானால் கடனைப் பெற்று அதற்கும் கடன் தரும் வங்கிக்கும் இடையிலான தொடர்பை வரையறை செய்யும். அதன் செலவையும் பயன்களையும் மதிப்பீடு செய்யும் அடிப்படையில் வருமானத்தைத் தீர்மானிக்கும். இதனை நிர்வகிக்க ''வேலைக் கூட்டு''க்குச் சுதந்திரமுண்டு. கூலி நிதியம், வேலையின் இறுதிப் பெறுபேறுகளில் நேரடியாகத் தங்கியிருக்கும்.

## சோஷலிச அமைப்புக்கள்

தொழில் வளர்ச்சி கண்ட சோஷலிச சமூகங்களில் பொருளாதாரமும் சமூகமும் இலாப நோக்கு கொண்ட தனியார் தொழில் அமைப்புக்களினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. சிறு அளவிலான சில நடவடிக்கைகள் தவிர மற்ற அனைத்தினதும் உரிமை அரசாங்க அமைச்சுக்களிடமே உண்டு. கட்டுப்பாட்டதிகாரம் இந்த அமைச்சுக்களுக்கே இருக்கின்றது. திட்டமிடல் மத்தியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றது. மூலப் பொருட்களின் பங்கீடும் அதே போல பொருட்களின் விநியோகமும் இவ்விதமே செய்யப்படுகின்றது. இது ஒரு சிக்கலான படிமுறை. இவ்வம்சங்களில் சில இப்பொழுது மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. குறிப்பாக, உத்தேசிக்கப்பட்டுள்ள கொர்பசேவ் மாற்றங்களின் (1987) கீழ் இவை நிகழ்ந்து வருகின்றன. இந்த மாற்றங்களுக்குப் பின்னரும் கூட பெரிய நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவையாகவே இருக்கும். அத்துடன் பொருளாதாரத்தின் திசைவழியும் மத்தியிலிருந்தே நெறிப்படுத்தப்படும்.

பொருளாதாரத்தின் பிரதான விதிமுறைகள் நாட்டின் மத்திய கொள்கை வகுப்பு அமைப்புக்களால் வகுக்கப்படுகின்றன. மேலும், தொழிற்சாலை முகாமையாளர்களை வழிநடத்துவதற்கென மற்றும் விதிமுறைகள் உண்டு. சோவியத் தொழில் முகாமையாளர்கள் தங்கள் தொழில் முயற்சிகள் இலாபத்தில் இயங்கிச் செல்ல வேண்டும் என்பது குறித்து அவ்வளவாக கவலைப்படுவதில்லை. சில தொழில் முயற்சிகள் (ஒரு மதிப்பீட்டின்படி 20% தொழில்கள்) நட்டத்தில் இயங்குவதற்கென்றே திட்டமிடப்பட்டுள்ளன.

இலக்குகளை நிர்ணயிப்பதிலும் மூலவளங்களை ஒதுக்குவதிலும் தொழிற்சாலை முகாமையாளர்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட பங்கே இருக்கிறது. ஆனால், தொழிற்சாலை மட்டத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களது சிறப்பறிவும் பங்குபற்றுதலும் அத்தியாவசியமாகும். திட்டமிடும் படிமுறை மிகச் சிக்கலானதாக இருப்பதால் உயர் அதிகாரிகள் இலக்குகள் போன்ற விஷயங்களில் தொழிற்சாலை முகாமையாளர்களை கலந்தாலோசித்தே முடிவுகளை எடுக்கிறார்கள். இதனால் அடிக்கடி அதிகாரிகளுக்கும் முகாமையாளர்களுக்குமிடையே கயிறு இழுப்பு நிலை ஏற்படுகின்றது. (ரிச்மன் 1965 பக்கம் 19–21, கிரானிக் 1951 பக். 191).

சோஷலிச நாடுகளில் மூலதனத்தின் உரிமையாளர்களுக்கும் சமூகத்தின் ஏனைய பிரிவுக்குமிடையே ஓர் எதிர்ப்பு நிலை நிலவவில்லை என்பது உண்மைதான். ஆனால், மிகக்கடுமையான சமூக அடுக்கு முறையொன்று உண்டு. தனியார் மூலதனத்தை குவித்து வைத்துக்கொள்ள முடியாதிருப்பதனால் மார்க்சிய தத்துவத்தின்படி இங்கு ஒரு வர்க்கத்தை காண முடியாது. ஆனால், ஏனைய சமூகப் பிரிவுகள் – நிர்வாகிகள், தொழிலாளர் வகுப்பு என்போர் – இங்கும் உண்டு.

முதலாளித்துவ நாடுகளிலும் சோஷலிச நாடுகளிலும் உற்பத்திப்படி முறைகளும் தொழில் நுட்பங்களும் ஒரே மாதிரியானவையாக இருப்பதனால் தொழில் நிலைகளிலும் ஒத்ததன்மை நிலவுகின்றது. இங்கு தரப்படும் பட்டியல் (டேவிட், ஸ்கேஸ், பக். 99) அரச சோஷலிசத்தின் கீழ் வகுப்பு முறையைத் தருகிறது.

1. சிரேஷ்ட அரச அதிகாரிகள்.
2. அரச தொழில் முயற்சிகளினதும் நிர்வாக இயந்திரனதும் பணிப்பாளர்களும் முகாமையாளர்களும்.
3. தொழில்சார், தொழில் நுட்பரீதியில் தகுதி பெற்ற தொழிலாளர்.
4. மாமூல் உடலுழைப்பல்லாத இலிகிதர் தரத்தினரும் உடலுழைப்பு தொழிலாளரும்.
5. அரைத்தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத உடலுழைப்புத் தொழிலாளர்.

இப்பட்டியலில் உள்ள முதல் இரு பிரிவினரும் முதலாளித்துவ சமூகங்களில் போல தனியார் முதலாளிகளிடம் வேலை பார்ப்பவர்கள் அல்ல. இலாப உந்துதலில் செயற்படுபவர்களும் அல்லர். நிர்வாக இயந்திரமொன்றுக்குள் அவர்கள் இயங்கி வருகிறார்கள். சந்தைப் பொறிமுறைக்கேற்ற விதத்தில் மூலவளங்களை ஒதுக்கும் முறை பல சோஷலிச நாடுகளில் இப்பொழுது அதிகளவு முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. எனவே, எதிர்காலத்தில் இந்த உயர் அதிகாரிகளின் பங்கு மாற்றமடையக் கூடும். அத்தகைய ஒரு சூழ்நிலையில் அவர்கள் ஒருவேளை அவர்களது முகாமை கட்டளைகளை சந்தைச் சமிக்ஞைகளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடும். எனினும், பொருளாதாரத்தினை கட்டுப்படுத்தும் மட்டத்தில் தனியார் இலாப நோக்கு தீர்மானிக்கும் காரணியாக இருக்காது.

அரச சோஷலிசத்தில் சம்பள அமைப்புக்களிலும் பேதங்கள் உண்டு. முதலாளித்துவ பரிசுத்திய முறைகளுடன் ஒத்த சம்பள முறைகள் இங்கும் காணப்படுகின்றன. பிரதானமாக தொழில் நுட்பத்தினால் நிர்ணயிக்கப்படும் தொழில் மாதிரிகளை இரு சமூக அமைப்புக்களும் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும். ஆனால், சோஷலிச நாடுகளில் பொதுவாக சம்பள வித்தியாசங்கள் சிறு அளவிலேயே இருக்கின்றன. ஏனெனில், இவ்வமைப்பில் உயர்மட்ட அதிகாரிகள் பங்கிலாபமோ அல்லது முதலீடு செய்யப்பட்ட மூலதனத்துக்கான வட்டியோ பெறுவதில்லை. ஆனால், சோஷலிச அமைப்பில் உயர் மட்டத்தில் இருக்கும் பெரும் புள்ளிகள் பல சலுகைகளையும், அனுகூலங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

சோஷலிச அமைப்பில் சம்பளம் என்பது மாதாந்த வேதனம், போனஸ்,

திட்டம் செயல்படுத்தக் கடினமானதாக இல்லாதவிடத்து ஒப்பந்தங்களின் எண்ணிக்கையும் குறைவானதாக இருக்கும்; கட்டளைகளின் மொத்தமும் குறைவானதாக இருக்கும். கூலி நிதியம் சிறியதாயின், வேலைக் கூட்டுக்குக் கிடைக்கும் இலாபமும் மிதமானதாக இருக்கும். நவீனமயப்படுத்தல், வீடமைப்பு, சமூக பண்பாட்டு நிறுவனங்கள், மிகையூதியக் கொடுப்பனவு என்பவற்றுக்கும் உற்பத்தியாளரின் இலாபத்திலிருந்தே பணம் வருதல் வேண்டும்.

முயற்சித்தாபனங்களுக்குக் கூடிய சுதந்திரமுண்டு. அவை சுயமாகவே கடனிறுத்தல், நிதியளித்தல், முகாமை என்பவற்றை மேற்கொள்ளும். இதுவே அவர்களது புதிய பொருளாதார நிலையின் சாரமாகும். இந்நிலைமைகளில் கூட்டானது, அதற்களிக்கப்பட்ட உற்பத்திச் சாதனத்துக்கு எஜமானனாகவும், உரிமையாளனாகவும் முகாமையாளனாகவும் மாறும். அதேவேளையில் இத்தாபனங்கள் முழு அளவிலான செலவுக் கணக்கீட்டுக்கு மாறும். அதாவது நடைமுறைச் செலவுகளையும் மூலதனச் செலவுகளையும் அவற்றின் வருமானத்தைக் கொண்டே இறுக்க வேண்டும்.

முழு அளவிலான செலவுக் கணக்கீட்டின் மற்றொரு முக்கிய அம்சமாவது, இத்தாபனங்கள் பயன்படுத்தும் இயற்கை, மனித, உற்பத்தி முதலிய எல்லா வகையான வளங்களுக்கும் அவையே கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதாகும். முன்னைய பொருளாதார அமைப்பில் இத்தகைய ஒழுங்கு இருக்கவில்லை.

குர்பச்சேவின் புனர்நிர்மாண முயற்சிகளுக்குக் கடையாணியாக விளங்கும் அரச முயற்சித்தாபனங்கள் பற்றிய சட்டம் இவ்வாண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்திற்கமைய:

1. நேரடி வணிக ஒப்பந்தங்களுட்பட பல்வழி மொத்த வியாபார முறைமை ஒன்றிருந்தால் மட்டுமே ஒரு தாபனம் செயல் சுதந்திரமுடையதாக ஆகும். அந்நிலையில் வழங்குநர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு அத்தாபனத்துக்கு வாய்ப்புண்டு. இதுவரை இருந்து வந்த ஒருமுகப்படுத்திய வழங்கல், நிர்வாக முகாமை முறைகளை பெருமளவில் எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இதனால் தாபனங்களுக்கு செயற்பாட்டுச் சுதந்திரம் இருக்கவில்லை. அதற்குப்பதிலாக உற்பத்திச் சாதன வணிகத்துக்கு இடமளித்திருப்பது, ''பொருளாதார முகாமை'' முறைக்கான பாதையில் முக்கியமானதொரு காலடியாகும்.

மொத்த வியாபாரத்துக்கு மாறுவதற்கு விலைகளும் நிதி, கடன் முறைகளும் தீவிரமாகச் சீர்திருத்தப்பட வேண்டும். பணம் மேலதிகமாகப் புழக்கத்தில் இருக்கும் வரை இது சாத்

செய்த வேலை அளவுக்கான சம்பளம் என வேறுபட்டுக் காணப்படுகிறது. முகாமையாளர்களைப் பொறுத்த வரையில் ஊக்குவிப்பூதியங்கள் அவர்களது வேதனங்களின் கணிசமான பகுதிகளாக அமைகின்றன. சமூக அந்தஸ்து, பதவியுயர்வு, அதிகாரம் என்பவற்றுக்கான அளவுகோலாகவும் அது இருக்கிறது. திட்டமிடப்பட்ட இலக்குகளின் நிறைவேற்றத்தின் அடிப்படையிலேயே ஊக்குவிப்பூதியம் கணிக்கப்படுகிறது. மறுபுறத்தில், கீழ் மட்டங்களில், செய்த வேலையின் அளவைக் கொண்டே நிதிசார் அனுகூலங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

கிழக்கைரோப்பிய நாடுகளில் தரப்படுத்தும் முறை மேற்கத்தைய தொழில் மாதிரிகளுடன் ஒத்ததாக இருந்த போதிலும் அங்கு சமமின்மையின் அளவு மிகக் குறைவாக இருக்கிறது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும். தொழில் நிலை வகுப்புக்கு மேலாக பல சலுகைகளைப்பெற்ற அரசியல் வகுப்பொன்றும் உண்டு. அடுத்த தலைமுறைக்கு கையளிக்கக் கூடிய உற்பத்திச் சாதனம் எதுவும் இப்பிரிவினரிடம் இல்லை. (நல்ல கல்வி நிலையங்களில் அல்லது நல்ல தொழில்களில் தமது பிள்ளைகளை அமர்த்துவதன் மூலம் தமக்குக்கிட்டியிருந்த சலுகைகளை அவர்கள் பல சந்தர்ப்பங்களில் அடுத்த தலைமுறையினரிடம் கையளித்து வருகிறார்கள் என்பது உண்மை.)

மேலே விவரித்த சோஷலிச சமூக அமைப்பு சோவியத் யூனியனுக்கு பெருமளவில் பொருந்துகிறது. சில திருத்தங்களுடன் இதே மாதிரி கிழக்கைரோப்பிய நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. பொருளாதாரம் மத்தியிலிருந்து திட்டமிடப்படும் அளவு, சந்தைப் பொறிமுறையின் பாவனை, தனியார் சொத்துடைமை அளவு, சம்பள ஊக்குவிப்புக்களின் தன்மை போன்ற அம்சங்களில் சோஷலிச நாடுகளுக்கிடையில் வித்தியாசங்கள் உண்டு. ஹங்கேரியா, யூகோஸ்லாவியா போன்ற சில நாடுகள் பல வருடங்களாக சந்தைப் பொறிமுறையை வலியுறுத்தி வந்துள்ளன. கொர்பசேவ்வின் சோவியத் யூனியன் இப்பொழுது (1988) இதனைப் பின்பற்ற முயல்கின்றது. ஜேர்மன் சனநாயக குடியரசின் முழு விவசாயத்துறையும் அரசுக்குச் சொந்தமான சிறு பண்ணைகளைக் கொண்டதாகவே இருக்கிறது. போலந்தைப் பொறுத்த வரையில் விவசாயம் தனியார் துறையிடமே இருக்கிறது.

சோவியத் யூனியனின் அனுபவத்தைக்கொண்டே சோஷலிச பொருளாதார திட்டமிடல் மாதிரியின் பிரதான அம்சங்கள் அனைத்தும் வகுக்கப்பட்டன. ஸ்டாலினிஸ்ட் மாதிரியை ஒத்த பொருளாதாரங்களில் இறுக்கமான மத்திய கட்டுப்பாடு இருக்கிறது. மற்றவற்றில் இது குறைவு. கொர்பசேவின் சமீபத்திய பொருளாதார சீர்திருத்தங்கள், கடுமையாக மத்தியிலிருந்து திட்டமிடப்படும் ஒரு பொருளாதாரத்தை புதிய சவால்களை சந்திக்கக் கூடியதொன்றாக மாற்றுவதனையே நோக்கமாக கொண்டிருக்கின்றன. ஆனால், உற்பத்திச் சாதனங்களின் சமூக உரித்துடமை குறித்த பிரதான அம்சங்கள் அதே விதத்தில் பேணிக் காக்கப்படும்.

கலாசார வேறுபாடுகளும் சித்தாந்த வித்தியாசங்களும் இருந்த போதிலும், சோஷலிச நாடுகளில் ஒரே மட்டத்திலான பொருளாதார அபிவிருத்தியுடன் பல ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. தொழில் அமைப்புக்களை தொழில் நுட்பம் நிர்ணயிப்பதிலிருந்தே இது ஏற்படுகிறது. பல கிழக்கைரோப்பிய நாடுகளில் அதிகாரம் என்பது கட்சியின் ஏகபோகமாக இருக்கிறது. ஆனால், "இந்நாடுகள் அனுபவித்து வரும் தொழில் மயமாக்கல் படிமுறை இந்நாடுகளின் சமூக அமைப்பில் ஒரே விதமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை." (டேவிட் ஸ்லேகஸ் பக். 129)

— சுசந்தா குணதிலகா

தியமாகாது. கட்டாயம் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிலைக்குட்படாத கடனின் விளைவாகவே மேலதிக பணம் புழக்கத்துக்கு வரலாயிற்று. (கூட்டுப்பண்ணைகளும் அரச பண்ணைகளும் மட்டும் அரச வங்கிக்கு ஏறத்தாழ 10,000 கோடி ரூபிள் கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளது); அத்துடன் உள்ளபடியாக ஒரு பொருள் விற்கப்படுமுன் வியாபார மொத்த வரி செலுத்தப்படுவதும் இதற்கொரு காரணமாகும். (சம்பந்தப்பட்ட பொருள்கள் இன்னும் கடையில் இருக்கையில் அவற்றுக்கான பணம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்திற் சேர்க்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது).

மொத்த வியாபாரத்தின் அபிவிருத்தியானது, தாபனம் ஒரு வியாபாரப் பொருள் உற்பத்தியாளராகச் செயற்படும் சந்தை இயக்க அமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் விரிவாக்கப்படுவதைக் குறிக்கிறது. இதற்கு உற்பத்தியாளரிடையே போட்டி அவசியமாகும். அதேவேளையில் ஒன்றில்லாவிட்டால் மற்றொரு உற்பத்திச் சாதனத்தின் மீது தனித்தனித் தாபனங்களுக்குள்ள ஏகபோக உரிமை ஒழிக்கப்படும். ஒரே பொருட்களை சமநிலையில் உற்பத்தி செய்தல் கூட்டுறவுத் தாபனங்கள் பங்குபற்றல், சில விடயங்களில் தனிப்பட்டோர் பங்குபற்றல் என்பவை போட்டியை ஏற்படுத்த உதவும்.

''சோசலிசச் சந்தை'' ஒரு விசேட வகையான சந்தையாகும். அங்கு இயற்கை வளங்கள் விற்கப்பட இயலாது. இச்சந்தை கட்டுப்படுத்தக்கூடிய சந்தையாகும். அத்தியாவசியப் பொருட்களின் (எரிபொருள், மின்சக்தி, சாதனங்கள், அடிப்படைப் பாவனைப் பொருட்கள்) விலைகள் அரசினால் குறிக்கப்படுகின்றன. விலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தவும் பணவீக்க நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் விலைகளைச் செயற்கையாக உயர்த்தி வைப்பதைத் தடுப்பதற்கும் அரசுக்கு வழி செய்யும் பொருட்டே இவ்வாறு செய்யப்படுகிறது. அதே வேளையில் வியாபாரப் பொருட்கள் ஒப்பந்த, சுதந்திர விலைகளில் விற்பனையாதல் அதிகரிக்கும்.

### சுதந்திரமும் ஜனநாயகமும்

பொருளாதாரச் செயல் முறைகளை மீளமைப்புச் செய்வதில் உள்ள மிக முக்கியமானதும் கடுமையானதுமான பிரச்சினை, தொழிலாளரை, வேலையின் இறுதிப் பெறுபேறுகளில் அக்கறை கொள்ளச் செய்வதாகும். உற்பத்தியிலும் விநியோகிப்பதிலும் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொள்ள வேண்டும். இதனால்தான் ஒருவர் பெறும் சம்பளத்திற்கும் அவரது வேலையில் பெறுபேற்றுக்குமிடையில் நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதொரு பிரச்சினையாகிறது.

முழு அளவிலான செலவுக் கணக்கீட்டு நிலைமைகளில் வேலைக்

## சோவியத் பிரசாரமும் கிளாஸ்நொஸ்ட்டும்

இப்பொழுது பெரிய அளவில் மாறுதல்கள் நிகழ்ந்துவரும் ஒரு முக்கியமான தாம் தகவல் துறையாகும். சோவியத் ஆட்சி பலவந்தத்தையும் தூண்டுதலையும் சம அளவில் கொண்டிருக்கிறது என லெனின் வர்ணித்தார். மக்களை தூண்டிவிடும் நோக்கில் கம்யூனிஸ்ட் கட்சி பிரசார, தூண்டுதல் திணைக்களத்தை ஸ்தாபித்தது. அனைத்து மட்டங்களிலும் இயங்கும் ஒவ்வொரு கட்சி அலகும் இந்த பிரசாரத்திலும், கிளர்ச்சியிலும் பங்கெடுக்க வேண்டுமென்றும், அவசியமான மனப்பாங்குகளை மக்களிடையே வேரூன்றச் செய்ய வேண்டுமென்றும் கட்சித் தலைமை எதிர்பார்த்தது. மார்க்சீய நூல்களின் சிக்கலான உட்கிடக்கைகளை எடுத்து புரிய வைப்பதிலிருந்து அன்றாட தொழிற்சாலை அலுவல்களில் மாற்றங்களை தொழிலாளர்களுக்கு விளங்கப்படுத்துவது வரையில் பிரசாரப்பகுதியின் வேலை வியாபித்திருந்தது.

இக்கிளர்ச்சியாளர்கள் பகுதிநேர அடிப்படையில் வேலை செய்தார்கள். கட்சியின் செய்தியை மக்களுக்கு நேரடியாக எடுத்து வரும் தொண்டர்களாக இவர்கள் இருந்தனர். இவர்கள் தமது சக தொழிலாளரிலிருந்து அல்லது தமது அயலிலிருந்து சிறு குழுக்களை தெரிந்தெடுத்து சர்வதேச பிரச்சினையொன்றிலும் சரி அல்லது உற்பத்தி தொடர்பான முக்கியமான விஷயங்களிலும் சரி கட்சியின் பிந்திய கொள்கை வழியை அவர்களுக்கு விளக்குகிறார்கள். எண்ணப் போக்குகளை உருவாக்கி அவற்றுக்கூடாக நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுவதே இக்குழுக்களின் நோக்கமாகும். மனப்பாங்குகளை மாற்றும் விஷயத்தில் வானொலி, டெலிவிஷன் போன்றவற்றை விட இந்த நேரடி முறையும், குழுக்களாக கலந்துரையாடும் முறையும் மிகத் தாக்கமானவை என அமெரிக்க ஆராய்ச்சியொன்றும் நிரூபித்துள்ளது.

கட்சிக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் தனிப்பட்ட தொடர்பினை ஏற்படுத்துவதே இந்த கிளர்ச்சியாளர்களின் வேலையாகும்.

கட்சிக்கும் பொது மக்களுக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்தும் மற்றைய இணைப்பு தொடர்பு சாதனங்களாகும். இவை மேலைத்தேச நாடுகளில் போலன்றி முற்றிலும் வித்தியாசமான ஒரு முறையிலேயே வகுக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகள் ''கூட்டுப் பிரசாரம் செய்யவும், கிளர்ச்சி பண்ணவும், ஒன்று திரட்டவும் வேண்டும்'' என்றார் லெனின். அது கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான ஒரு சங்கிலி என ஸ்டாலின் வர்ணித்தார். அச்சிடப்பட்ட செய்திப்பத்திரிகைகளுக்கு மேலதிகமாக கையெழுத்திலும், தட்டச்சிலும் எழுதப்பட்ட ஆயிரக் கணக்கான சுவர்ப்பத்திரிகைகளும், அறிவித்தல் பலகையில் ஒட்டப்படும் பத்திரிகைகளும் உண்டு. இவை தொழிற்சாலைகளிலும் மக்கள் கூடுமிடங்களிலும் ஒட்டப்படுகின்றன. இச்சுவர்ப்பத்திரிகைகள் தொழிற்சாலை உற்பத்தி விவரங்களை எடுத்துக்காட்டுவதுடன் திறமையான தொழிலாளர்களை பாராட்டியும், மந்தமானவர்களை விமர்சித்தும் வருகின்றன. கட்சியின் உள்ளூர் அதிகாரிகளின் இறுக்கமான கண்காணிப்பின் கீழ் இப்பத்திரிகைகள் பகுதி நேர அடிப்படையில் பணிபுரியும் ஆளணியினரால் வெளியிடப்படுகின்றன. இச்சுவர்ப்பத்திரிகைகள் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப வளைந்து கொடுக்கக் கூடியனவாகவும், இசைந்து செல்லக்கூடியனவாகவும் இருப்பதால், மனப் போக்குகளில் செல்வாக்குச் செலுத்தும் விஷயத்தில் கிளர்ச்சியாளர்களைப் போலவே முக்கியத்துவம் பெறுகின்றன.

கிளாநொஸ்ட் - திறந்த மனப்பான்மை

கூட்டானது, பொருளாதாரத் துறை பற்றிய தீர்மானங்களைச் சுதந்திரமாக மேற்கொள்கின்றது. இதன் பொருள், தொழில் முயற்சிகளின் அலுவல்களில் நிர்வாகத் தலையீடுகள் அனுமதிக்கப்படமாட்டா என்பதாகும். இதற்குத் திட்டமிடலில் தீவிர மாற்றங்கள் செய்தல் அவசியம்.

அடுத்து, திட்டமிடலானது, உறுதியான அடிப்படையிலமைந்த பொருளாதார முன்மாதிரிகளை அமைத்தல், விலைகள், நிதி, கடன் நியதிகள், ஊக்கப்பாடுகள், அரசாங்கக் கட்டளைகள் என்பவற்றின் மீது கவனஞ்செலுத்தும். புதுக் கைத்தொழில், பாரியதிட்டங்கள், அத்தியாவசிய உள்ளமைப்புகள், நகரங்களை நவீனமாக்கல் முதலியவற்றுக்கு அரசத்திட்டவமைப்பு தொடர்ந்து பொறுப்பாக இருக்கும். திட்டவகுப்பு நிறுவனங்கள், நாளாந்த அடிப்படையில் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதை நிறுத்திவிட்டு, செயற்பாட்டு உபாயம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனஞ்செலுத்தும். இதற்கமைய அவற்றின் வேலைகளை அமைச்சுக்கள் மறுசீரமைப்புச் செய்தல் வேண்டும். அவை, விஞ்ஞான தொழினுட்ப திட்டவகுப்பு, பொருளியல் கொள்கை வகுப்பு நிலையங்களாகச் செயல்படும்.

புதுப் பொருளாதாரச் செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதும் உள்ளூராட்சிச் சபைகளின் உரிமைகள், வாய்ப்புக்கள் என்பனவும் விரிவடையும். அவை தம் வரவு செலவுத் திட்டத்திற்கான பணத்தை, பிராந்திய வளங்களுக்கான கொடுப்பனவின் ஒரு பகுதியிலிருந்தும் உற்பத்தியாளர் இலாபத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளும். அவை தம் ஆள்புலத்தில் உற்பத்திசெய்து விற்கப்படும் பொருட்களின் விற்பனை மொத்தத் தொகையிலிருந்தும் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளும். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட உள்ளூர்ச் சோவியத்துக்கள் நுகர்வோர் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியிலும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதிலும் முக்கியமான பணிகளை மேற்கொள்ளும். காலப்போக்கில் அவை, பல சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளைப் பொறுப்பேற்கும்.

பல உள்ளூராட்சி மன்றங்களின் சோம்பலுக்குக் காரணம், ''கீழிருந்து'' வரும் வற்புறுத்தலை அவை அனுபவிப்பதில்லை என்பதாகும். ஜனநாயகத்தை விரிவாக்குவதே பொருளாதார மீளமைப்புக்கான முக்கிய நிபந்தனை என்பதற்கு இதுவும் ஒரு வாதமாகும். ஜனநாயக மயமாக்குவதற்கான முயற்சி தொடர்கையில் மீளமைப்பு, வேலைக்கூட்டு மன்றங்களைத் தாபித்தல் முகாமையாளரைத் தெரிவு செய்தல், உற்பத்தியை நடாத்துவது எப்படி என்பதை கற்றல் போன்றவற்றில் உழைக்கும் மக்கள் இணைந்து கொள்ளலாம்.

### அரச தரக்கட்டுப்பாட்டை விரிவாக்கல்

சோவியத் நாட்டுப் பொருளாதார அமைப்பின் பழைய முறையில் ஓர் முக்கிய அம்சம் உற்பத்திப் பொருட்களின் தரக்குறைவாகும். புதிய முறையில் தரத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. பொருளாதார முகாமையின் செயலாற்றுகையோடு இணைந்த முறைகளுக்கு அளிக்கப்படும் அழுத்தத்துடன் கைத்தொழில்களில் அரசின் தரக் கட்டுப்பாடும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

பொருட்களின் உற்பத்தித் தரத்துக்கும் சம்பளத்துக்குமிடையில் இதுவரை கெட்டியான தொடர்பு ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. தரக் கட்டுப்பாட்டிற்கான பொருளாதாரச் செயல்முறை இதுவரை தன்னியக்க முறையானதாக அமைக்கப்படவில்லை. ஆகையால் அரசு கட்டளைகளின் மூலம் தரக் கட்டுப்பாட்டை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அரசத் தரக் கட்டுப்பாட்டின் நோக்கம், கைத்தொழில்கள் அவற்றின் தரத்தை உயர்த்துவதில் போட்டியை ஏற்படுத்துவதாகும்.

முதல் தடவையில் 82 - 85 சதவீதமான பொருட்களுக்கு மேற்பட்டவை, திணைக்களக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தரக் கட்டுப்பாடுகளைக் கடந்து செல்வதில்லை. சென்ற ஆண்டு ஏறத்தாழ 600 கோடி ரூபிள் பெறுமதியான தரங்குறைந்த பொருட்கள், அரச தரக்கட்டுப்பாடு காரணமாக நுகர்வோருக்குச் சென்றடைவது தடுக்கப்பட்டது.

எனினும், தரம் தொடர்பான பிரச்சினைகள் துரிதமாகவும் திறமையாகவும் கையாளப்படுகின்றன எனக் கூற முடியாது. சென்ற ஆண்டு சுமார் 50 சதவீதமான கைத்தொழில்கள் திணைக்களத்துக்கு அப்பாற்பட்ட தரக் கட்டுப்பாட்டின் அறிமுகத்தால் சிரமப்பட்டன. அட்டவணைப் படுத்திய வழங்கல்களில் தடைகள் ஏற்பட்டன. பெருந்தொகையான செய்துமுடிந்த பொருட்களின் தரம் இரு முறை பரிசோதிக்கப்பட்டது. இவை காரணமாக இயல்பாகவே அப்பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரித்தது. எவ்வாறாயினும், நாள் செல்லச் செல்ல மக்கள் இப்புது நிலைமை காரணமாக கூடுதலாக கட்டுப்பாட்டுக்கு உட்படலாயினர்.

இவ்வாண்டு, விவசாய — கைத்தொழில் தொகுதியிலும் நிர்மாணக் கைத்தொழில் துறையிலும் திணைக்களத்திற்குப் புறம்பான தரக் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்படுகிறது.

### சோவியத் சம்பளச் சீர்திருத்தம்

தேசிய உற்பத்தி வெளியீட்டில் சுமார் 60 சதவீதத்திற்குப் பொறுப்பான கைத்தொழில்

முயற்சிகள், 1985 ஜனவரி 1 முதல் செலவுக் கணக்கீட்டு முறைக்கும் சுய நிதியளிப்பு முறைக்கும் மாறின. புதிய சீர்திருத்தங்களில் சம்பளச் சீர்திருத்தமும் அடங்கும். இதில் மூன்று அம்சங்களை வேறுபடுத்திக் காணலாம். முதலாவதாக, கூலிகளை, ஒவ்வொரு தொழிலாளியினதும் உழைப்பு உள்ளிடுகையோடு இணைத்தல். அதாவது செய்யும் வேலைக்காகவன்று அதன் பெறுபேறுகளுக்காகக் கூலி கொடுத்தல்.

‘‘ஒவ்வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது வேலைக்கேற்ப’’ எனும் கோட்பாடே வழிகாட்டும் கோட்பாடாக இருந்து வந்தது. ஆனால், சமத்துவத்துக்கான முயற்சியில், ‘‘வேலைக்கமைய’’ எனும் கோட்பாடு படிப்படியாக கூலிச் சமப்பாட்டினால் பதிலீடு செய்யப்பட்டது.

ஒரு தொழிலாளியின் உண்மையான உழைப்பு உள்ளீடு பொருட்படுத்தப்படாமல் அவருக்கு உத்தரவாதமான சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. அத்துடன் உயர் நிலை, நடுத்தர, தாழ்தரத் தொழிலாளரின் சம்பவங்ளுக்கிடையிலான இடைவெளி காலப் போக்கில் பெருமளவில் குறுகி விட்டது. இதனால் தொழிற்சாலைத் தொழிலாளருக்கும் அலுவலகத் தொழிலாளருக்கும் இடையிலான சமூக உறவு பாதிக்கப்பட்டதுடன், அக்கறையும் குறைந்து உற்பத்தித்திறனும் பாதிப்படைந்தது. இதைத் தொடர்ந்து, இரண்டாவது அம்சமான சம்பள உச்சவரம்புகள் அகற்றப்பட்டன. சமூகச் சமத்துவம் சம்பந்தமான கருத்துரை தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டமையாலேயே உச்சவரம்புகள் விதிக்கப்பட்டிருந்தன. எனினும், எவரும் இதனை நுகர்வில் சமத்துவம் என விளங்கிக் கொள்ளவில்லை. இது, சமூக உறுப்பினர் ஒவ்வொருவரும் அவருடைய திறமைக்கேற்ப அவர்களின் உழைப்பின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் என்றே பொருள்பட்டது.

மூன்றாம் அம்சம், சம்பளச் சீர்திருத்தத்தில் மிக முக்கியமானது. அதாவது வேலைக் கூட்டுகளுக்கு, மிகப் பயனுள்ள சம்பள முறையைத் தெரிவு செய்வதற்கும் தொழிலாளர்கள், நிபுணர்கள், முகாமையாளர்கள் என்போருக்கான சம்பள அளவை நிர்ணயிப்பதற்குமான உரிமையை வழங்குதலாகும்.

சோவியத் நாட்டில் இவ்வினா இவ்வாறு கேட்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை. முன்னர், சம்பளம் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் நிதியளிக்கப்பட்டுத் தீர்க்கப்பட்டன. ஆகையால் ஒவ்வொருவரதும் சம்பளங்களை ஒழுங்குபடுத்தும் பணியை அரச அமைப்புகள் மேற்கொண்டன. புதிய முறையின் கீழ் அற்பத்தனமான கட்டுப்பாட்டுக்குப் பதில், கூலிகளை உழைப்பதற்கான பொதுவிதிகளை மட்டும் அரச அமைப்புகள் வகுக்கின்றன. சீர்திருத்தம் வரவு செலவுத் திட்டத்தில் மேலதிக நிதி எதுவும் ஒதுக்கப்படாமலேயே நடாத்தப்படுகிறது. புதிய முறையின் கீழ், தனித்தனித் தொழிலாளரின் சம்பளம் மட்டுமன்றி முழுத் தொழில் முயற்சியினதும் கூலி நிதியம் செயலாற்றுகையின் இறுதிப் பெறுபேற்றிலேயே தங்கியுள்ளது.


## தனியார் முயற்சிகள்


சென்ற மே மாதம் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம், சிறு அளிவிலான தனியார் தொழில் முயற்சிகளுக்கு அனுமதியளிக்கிறது. இது பெருமளவிலான முதலாளித்துவத்துக்குத் திரும்புவதன்று. பொருளாதாரத்தில் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட இரு குறிக்கோள்களுண்டு. முதலாவது, நாட்டுக்கும் சமூகத்துக்கும் இப்பொழுது கிடைக்கக் கூடியதாகவுள்ள எல்லா வளங்களும், தரமான பொருட்களாலும் சேவைகளாலும் சந்தையை நிரப்பி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். மக்களின் வாழ்க்கை சிறப்புற்று அதன் மூலம் அவர்கள் தாம் விரும்பியதை வாங்கும் நிலையும் தரமான சேவைகளை உடனடியாகப் பெறத்தக்க நிலையும் ஏற்படும். தனிப்பட்டவர்களின் தொழில் முயற்சி இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும்.

இரண்டாவதாக, மேலதிக தொழிலாளர் வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். உழைக்கக் கூடியவர்கள் ஆயிரக் கணக்கில், ஏன், இலட்சக் கணக்கில் இருக்கின்றனர். சோவியத் நாட்டில் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஐந்து கோடி பேர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் முதுமையால் வலு இழந்தவர்களல்லர். பலர் இன்றும் சுகதேசிகளாகவும் திடகாத்திரமும் அனுபவமும் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் தம் சிரமத்தை உதவி, மேலதிக பணம் உழைக்கத் தயாராகவுள்ளனர். உயர்தரப்பள்ளி மாணவர்களுட்படப் பள்ளிமாணவர்கள் உள்ளனர். அவர்கள் தம் ஓய்வு நேரத்தில் ஒரு பகுதியைப் பயனுள்ள முயற்சிகளில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கலாம். வழக்கமான பொருளாதாரத் துறையில் வேலை செய்து முடிந்தபின் தனிப்பட்ட முறையில் பணியாற்றி உதவுவதற்குத் தயாரானவர்களும் உள்ளனர். இத்தகைய தனிப்பட்ட முயற்சி சொந்த உழைப்பையே அடிப்படையாகக் கொண்டிருக்க முடியும். கூலிக்குத் தொழிலாளரை அமர்த்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதன் நோக்கம் மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுவதைத் தடுப்பதாகும். ஆசியாவில் பரவலாகக் காணப்படும் இச்சுய தொழில் முயற்சி சோவியத் நாட்டிலும் தோன்றப் போகிறது.

ஒருவர் தான் செய்யும் தொழிலிலிருந்து பெறும் கூலியின்

“உச்சவரம்பு” 200 ரூபிள்களாக இருந்து அவரது சுய தொழில் 500 ரூபிள் உழைக்க அனுமதிக்குமானால் அவர் சுயதொழில் துறைக்கு ஓடிவிடுவார். ஆனால், அவர் தொழில் செய்யுமிடத்தில் இலாப-நட்ட அடிப்படையில் 500 அல்லது 600 ரூபிள் உழைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால்? அவர் திறமையான ஓர் உருக்குத் தொழிலாளராக, சுரங்கத் தொழிலாளியாக, எந்திரங்கட்டுபவராக, இரசாயனவியலாளராக அல்லது உற்பத்திப் பொறிஞராக இருப்பின் அவர் அதைவிட்டு ஓடமாட்டார். இதன் பொருள், இத்துறையிற் காணப்படும் அதிகார வர்க்கத்தின் சில்லறைத் தடைகள் அகற்றப்படும் என்பதாகும். அதாவது இலாப-நட்ட அடிப்படையிலான கணக்கீட்டு முறை அறிமுகஞ் செய்யப்படும்.




## வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள்

தற்போது செயற்படுத்தப்படும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் சோவியத் நாட்டுக்கு வெளியிலான முயற்சிகளையும் உள்ளடக்கியதாகும். வியாபாரப் பொருட்களை முக்கியமாகக் கொண்ட சோவியத் ஏற்றுமதிகள் உறுதியற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. 1980 தொடரின் நடுப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகம் மந்த நிலையை அடைந்தது. வெளிநாட்டுப் பொருளாதார முகாமை, திட்ட வகுப்பு என்பவற்றின் மீளாய்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதாயிற்று.

1986 ஆகஸ்ட் முதல் நாடு அதன் வெளிநாட்டுப் பொருளாதார முயற்சிகளைத் திருத்தியமைக்கப் பல முயற்சிகள் செய்தது. சமஷ்டி அரசாங்கம், வெளிநாட்டுப் பொருளாதார முயற்சிகள் குழுவொன்றை நியமித்தது. மொத்தம் 21 அமைச்சுகளுடன் 75 பாரிய உற்பத்தியாளர்களும் தாமாகவே வெளிநாட்டு வர்த்தகத்தை நடாத்தும் உரிமை பெற்றுள்ளனர். இனி அவர்கள் வெளிநாட்டுப் போட்டிக்கு உட்படுவர். யூனியன் குடியரசுகளும் அவற்றுக்குரிய வெளிநாட்டு வர்த்தக முகவர் நிலையங்களைக் கொண்டிருக்கும்.

புதிய சீர்திருத்தத்தின் கீழ் வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு வரை ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் மாஸ்கோவில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. இப்பொழுது 40 க்கு மேற்பட்ட சோவியத் நகரங்களில் இவை நடைபெறுகின்றன. நூற்றுக்கணக்கான உற்பத்தியாளர்கள் சோசலிஸ, மேற்கத்திய, மூன்றும் உலக் நாடுகளுடன் கூட்டு உற்பத்தியிலும் வேறு வகையிலும் நேரடித் தொடர்பு கொண்டுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. அரச தொழில் முயற்சி பற்றிய அண்மைய சட்டத்தைப்பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்

(31 பக்கம் பார்க்க)

# சோவியத் பொருளியலாளருடன் சந்திப்பு

சோவியத் நாட்டில் இப்பொழுது இடம் பெற்றுவரும் புனரமைப்பு முயற்சிகளினதும், பாரிய மாறுதல்களினதும் முக்கியத்துவம் பற்றி மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பணிப் பாளர் சுசந்தா குணதிலகா சோவியத் பொருளியலாளர் கலாநிதி இவான் ஷெலிஷேவுடன் உரையாடுகிறார். உலக பொருளாதாரங்கள் மற்றும் சர்வதேச உறவுகள் குறித்த சோவியத் நிறுவனத்தில் கலாநிதி ஷெலிஷேவ் பணிபுரி கிறார்.

சுசந்தா குணதிலகா

சோவியத் நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து நான் உங்களுடன் கலந்துரையாட விரும்புகி றேன். இந்த மாற்றங்களுக்கான காரணங்கள் என்ன என்று கூறுவதுடன் நீங்கள் இதனை ஆரம்பித்து வைக்கி றீர்களா?

கலாநிதி இவான் ஷெலிஷேவ்

எமது நாட்டில் 1960 களின் பிற்பகுதியிலும் 1970 களின் முற்பகுதியிலும் விரைவான பொருளாதார அபிவிருத்தி நிகழ்ந்தது. ஆனால் அதிக அளவிலான மூலவளங்களின் பாவனையே இதன் அடிப்படையாக இருந்தது. கனிப் பொருட்கள், வலு, நிதிகள், உழைப் புச் சக்தி என்பன இந்த மூலவளங்களாக் இருந்தன. இந்த மூலவளங்களை முன்னர் பாவித்த அதே அளவில் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்க முடியாது என்ற உண்மை 1970 களின் இறுதியில் புலனாகியது. நாம் எமது பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்ய வேண் டிய அவசியமும் உணரப்பட்டது. மேற்கத்தைய பொருளாதாரங்கள் செறிவான பொருளாதார அபி விருத்தி முறையொன்றுக்குள் தம்மை இட்டுச் சென்ற அதே வேளையில் நாங்கள் விரிவான பொருளாதார அபிவிருத்தி முறையொன்றைப் பின்பற்றி வந்தோம். தொழில் முயற்சிகளைத் தூண்டும் பொறிமுறைகளை நாம் கண்டறிய வேண்டியிருந்ததுடன், உயர் தொழில் நுட்பத்தைப் பரவலாக பாவிக்க வேண்டியுமிருந்தது. விலை அமைப்பு, திட்டமிடும் முறை என்பன காரண மாக இது ஒரு கடுமையான பணியாக இருந்தது. அரச திட்டமிடல் கமிட்டி விலைகளை நிர்ணயிக்கிறது; தொழில் முயற்சிகள் தமது செலவுகளை மீளப் பெறு வதுடன், நிலையான இலாப விகிதமொன்றையும் பெற்றுக் கொள்கின்றன.

கேள்வி: சில தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்கு வதற்கென திட்டமிடப்பட்டிருக்கின்றன என நான் நினைக்கிறேன்.

பதில்: ஆம்; அப்படிச் சில இருந்தன. மொத்த உற் பத்திக் குறிகாட்டியின் அடிப்படையில் சில தொழிற் சாலைகள் அமைச்சுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தன. செலவு அதிகரிக்குமளவுக்கு மொத்த உற்பத்தியும் அதிகரிக்கின்றது என்பதனை இது காட்டு கின்றது. செலவுகள் கூடுதலாக இருக்குமளவுக்கு தொழில் முயற்சிகள் சிறப்பானவையாக தென்பட் டன. இந்த அமைப்பின் கீழ் தொழில் முயற்சிகள் அதிக கிராக்கி நிலவும் பொருட்களை உற்பத்தி செய் வதில் அக்கறை காட்டவில்லை. மலிவான பொருட்களை உற்பத்தி செய்வதிலேயே ஈடுபட்டன. இன்னொரு விஷயம் கட்டளைப்படி திட்டமிடும் ஒரு முறையும் எம்மிடமுண்டு. பொருட்களுக்கான கிராக்கி வரைய றுக்கப்பட்ட நிலையிலிருக்கும்போது இது சரிதான். மிக முக்கியமான கைத்தொழில்களுக்கும் மிக முக்கியமான தொழில் முயற்சிகளுக்கும் நாங்கள் நிர்வாக ரீதியில் மூலவளங்களை ஒதுக்குவோம். ஏனெனில், இந்த மத் திய திட்டமிடல் முறையின் மூலம் நாங்கள் 1930—ன் தொடராண்டுகளில் விரைவான வளர்ச்சியைக் கண்டோம்.

கேள்வி: ஆனால், இத்தகைய திட்டமிடல் முறையின் வரையறைகளை 1960 களில் லிபர்மான் (சோவியத் பொருளியலாளர்) சுட்டிக் காட்டினார்.

பதில்: அத்தகைய முறைகளைப் பயன்படுத்தியே நாம் அபிவிருத்தியின் இந்தக் கட்டத்தை அடைந்துள் ளோம். எமது அபிவிருத்தியின் உந்துதல் வேகம் மேற் கத்தைய பொருளாதாரங்களை விட துரிதமானதாக இருந்தது. அதுவே எமது சாதனை.

இப்பொழுது அரச திட்டமிடல் கமிட்டி பதிவு செய்துள்ள பொருட்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 இலட்சம் உருப்படிகளாகும். ஒரு கமிட்டிக்கு 2 கோடியே 20 இலட்சம் பொருட்களுக்கும் திட்டமிட முடியாது. இந்தப் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் விலைகளை நிர்ணயிப்பதானது விலைக்கமிட்டியில் உள்ள வர்களுக்கு மிகச்சிரமமான வேலையாகும். விலைக்க மிட்டியில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் நாளொன்றுக்கு பல விலைகளை நிர்ணயிக்க வேண்டி யிருக்கின்றது. அதனால் அவர்களால் திறமையான முறையில் செயற்பட முடிவதில்லை. தொழில் முயற்சிக ளைச் சேர்ந்த அமைச்சுக்களின் பிரதிநிதிகள் ஒவ்வொன் றுக்கும் விலைகளைக் கோரும் போது அவை நிர்ணயிக்கப் படுகின்றன. மாநிலக்கமிட்டிக்கு நிறைய வேலையுண்டு. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக நேரத்தைச் செலவழிக்க முடியாது. திட்டமிடும் முறையை நாம் இப்பொழுது மாற்ற வேண்டியிருக்கின்றது என்பதே இதன் முடிவாகும். தொழில் முயற்சிகள் உயர் இலா பங்களில் அக்கறை செலுத்த வேண்டும். வரவு செல வுத் திட்டத்துக்கென ஒதுக்கும் ஒரு நிலையான தொகை கொடுப்பனவு தவிர மற்ற இலாபங்கள் அனைத்தையும் அவர்களே பாவித்துக் கொள்ள வேண்டும்.

விலைகளைப் பொறுத்த வரையில் நிலைமை மிகச் சிக் கலானதாகும். ஒரு நிறுவனம் மற்ற நிறுவனத்துடன்

நேரடியாக தொடர்புகொள்ள வேண்டியிருக்கின்றது. தொழில் முயற்சிகள் சோஷலிச சந்தை அமைப்பொன் றின் கீழ் விலையொன்றுக்கு இணங்குதல் வேண்டும். இத் தகைய முறையொன்றின் கீழ் அனுவசியமான மூலப் பொருட்களோ உபகரணங்களோ கையிருப்பில் குவிந் திருக்க மாட்டா. தொழில் முயற்சிகள் தமக்குத் தேவையான அளவு பொருட்களை மட்டுமே பெற்றுக் கொள்ளும்.

கேள்வி: மார்க்சிய கோட்பாட்டில் ''பாவனைப் பெறுமதி'' என்றும் ''பரிமாற்றப் பெறுமதி'' என்றும் உண்டு. இத்தகைய சந்தையொன்றுக்கு நீங்கள் உற்பத் திகளைச் செய்யும் போது ''பரிமாற்றப் பெறுமதி''க்கு கூடிய முக்கியத்துவம் கொடுப்பது போலல்லவா இருக் கிறது.

பதில்: அதனை அப்படி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று நான் நினைக்கவில்லை. நுகர்வோருக்கு ஒரு தெரிவை மேற்கொள்ள வாய்ப்பொன்றைக் கொடுக்க வேண்டும் என்பதும் விலை நிர்ணயிப்பில் அவர்கள் செல் வாக்குச் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதே மிக முக்கியமாகும். உற்பத்தியாளர்களின் எதேச்சாதிகாரத்துக்கு எதிராக நாம் போராட வேண் டும். சில பொருட்கள் எம்மிடம் போதிய அளவில் இல்லை; சில பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழில் முயற்சிகள் இல்லை. இந்த அமைப்புடனேயே நாம் போராட வேண்டியிருக்கின்றது.

கேள்வி: இது தொழில் முயற்சிகளுக்கிடையில் நெருக்கமான போட்டியை ஏற்படுத்துகின்றது. யூகோ ஸ்லாவிய பொருளாதாரம் கடந்த 20 வருட காலமாக போட்டியை அனுபவித்து வந்து இப்பொழுது நெருக் கடியொன்றுக்குள் சிக்கியிருக்கின்றது. ஹங்கேரிய பொருளாதாரம் பிந்திய 1960 களில் பெரெஸ்டோரி காவை ஒத்த சீர்திருத்தங்களை செய்தது. ஆனல், அது வும் இப்பொழுது நெருக்கடியில் மாட்டிக் கொண்டிருக் கின்றது.

பதில்: யூகோஸ்லாவிய பொருளாதாரம் அரசாங் கத்தின் பங்கினை மறுத்து திட்டமிடலை மையப்படுத்தி யது. அது சரியாக இயங்காது போனமைக்கு அதுதான் காரணம். எந்தவித அரச தலையீடும் இல்லாத பொரு ளாதாரங்கள் உலகில் எதுவுமில்லை. யூகோஸ்லாவியா வைப் பொறுத்த வரையில் அது தொழில் முயற்சிகளு க்கு பலவிதமான உரிமைகளையும் வழங்கியது. தொழில் முயற்சிகள் இந்த உரிமைகளைப் பாவித்தபொழுது ஒரு குழப்பமான நிலைமை தோன்றியது.

மறுபுறத்தில், மேற்கைத்தைய நாடுகளுடன் ஒப் பிட்டுப் பார்க்கும்போது சில ஒத்த தன்மைகளும் பல வேறுபாடுகளும் உண்டு. நாங்கள் முதலாளித்துவத்தை அறிமுகப்படுத்தவில்லை. மேலும் திறமையான உற்பத் திக்கென ஒரு ஊக்குவிப்பு முறையையே நாம் அறிமுகப் படுத்துகிறோம். தொழில் முயற்சிகள் அதிக இலாபம் பெற வேண்டுமென்பதே எமது விருப்பம். ஆனல், இந்த இலாபம் சமூகத்துக்குச் சொந்தமானதாகும்.

கேள்வி: சில்லறைக் கடைகள், தேனீர் விடுதிகள், டாக்ஸிகள் போன்றவற்றை சொந்தமாக வைத்திருக்க கூடிய அளவுக்கு சீர்திருத்தங்கள் உத்தேசிக்கப்பட்டுள் ளன. அதாவது, நீங்கள் சிறு முதலாளித்துவத்தை அனுமதிக்கிறீர்கள் என்பது இதன் கருத்தாகும். ஆனல், நேரடியாக ஊழியர்களை வேலைக்கமர்த்துவது இடம் பெறமாட்டாது. தொழிலாளர்களை ஒரு குறிப் பிட்ட அளவுக்கு வேலைக்கு அமர்த்துவதை ஹங்கேரியா அனுமதிக்கப்போகின்றது. தூய மார்க்சிய பார்வை யில் இது சுரண்டலாகும். முதலாளித்துவத்தின் ஊடு ருவல் இல்லாமல் இம்முயற்சி எவ்வளவு தூரத்துக்கு செல்ல முடியும்?

பதில்: எங்கள் நாட்டைப் பொறுத்த வரையில் அர சாங்கம் சமூக மட்டத்தில் முக்கியமான பணிகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது என்பதனை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஒரு சோஷலிச சந் தையை அறிமுகப்படுத்த வேண்டும்; போட்டியை அறி முகப்படுத்த வேண்டும்; குறைந்த விலைகளை அறிமுகப் படுத்த வேண்டும். இந்த பின்னணியில் தொழில் முயற் சிகள் போட்டி போடுவதற்கும், விலைகளை நிர்ணயிப் பதற்கும், வாடிக்கையாளர்களுக்கு தெரிவுகளை வழங்கு வதற்கும் உரிமைகளை கொடுக்க வேண்டும்.

ஆனல், இதே வேளையில் அரசாங்கம் சமூக உத்தர வாதங்களை ஸ்திரப்படுத்த வேண்டும். மேற்கத்தைய நாடுகளில் இவற்றை கற்பனையிலும் பார்க்க முடியாது. வேலை செய்ய முடியாதவர்கள், மூன்று அல்லது அதற்கு கூடிய குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கான நட்டவீடுகளே இந்த உத்தரவாதங்களாகும். தொழிலாளர் திறமையான முறையில் பகிரப்படுவதனையும் அரசாங்கம் கண்கா ணிக்க வேண்டும். ஒரு கைத்தொழில் அதன் உற்பத்தி யைக் குறைக்கும் போது தொழிலாளர் அதிலிருந்து வெளியேற வேண்டியிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங் களில் இத்தொழிலாளர்களுக்கு மீள் கல்வியூட்டுதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இது மிக முக்கியமா கும்.

கேள்வி: பல முதலாளித்துவ பொருளாதாரங்களி லும் இச் சேமநலத் திட்டங்கள் உண்டு.

பதில்: முழு முதலாளித்துவ அமைப்பிலும் 3 கோடி பேர் வேலையில்லாது இருக்கிறார்கள். அமெரிக்காவில் உயர் அளவில் வேலையின்மை காணப்படுகின்றது. கட ந்த ஆண்டில் இது ஓரளவுக்கு குறைந்தது. ஆனல், அது இனியும் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்க முடியாது. கல்வி அமைப்பும் மறுபயிற்சி முறையும் திருப்திகரமாக இயங்கவில்லையென்றே நான் எண்ணு கின்றேன். ஆனல், சோஷலிச பொருளாதாரமொன் றில் இவ்விஷயத்தில் அரசாங்கம் நிறைய செய்ய வேண்டியிருக்கின்றது.

உற்பத்தியின் சொந்தக்காரர் என்ற விஷயத்துக்கு மீண்டும் வருவோம். பல விதமான சோஷலிச தொழில்

முயற்சிகள் உண்டு. அரச தொழில் முயற்சிகள், கூட்டுறவு தொழில் முயற்சிகள், தனியார் தொழில் முயற்சிகள் என உண்டு. இது வரையில் கூட்டுறவுத் தொழில் முயற்சிகளிலிருந்து உச்சமட்டப் பலன் பெறப்படவில்லை. கூட்டுறவு இயக்கம் இப்பொழுது வர வர சுறுசுறுப்படைந்து வருகின்றது.

கேள்வி: கூட்டுறவுச் சங்கங்கள் சிலவேளைகளில் பங்குடமைக்குச் சமமாக இருப்பதுடன் இலாபம் தரக்கூடியதாகவும் இருக்கும். சீனுவில் சென்சென்னில் ஒரு கடற்றெழில் கூட்டுறவுச் சங்கத்தை நான் பார்வையிட்டேன். இச் சங்கம் ஹொங்கொங்கை அடுத்துள்ள அதன் பெறுமதிமிக்க காணியை உயர் கட்டட நிர்மாணத்துக்கென கொடுத்து அதிக பணம் பெற்று வருகின்றது. பல வீடுகள் சொந்த வேலைக்காரிகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. பங்குடமையும் கூட்டுறவுச் சங்கங்களும் உயர் அளவிலான வேதன வித்தியாசங்களுக்கு வழி கோலக்கூடும்.

ஹங்கேரியில் சில விஞ்ஞானிகள் ஜப்பானுக்கு செயற்கை மதிநுட்ப நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்து உயர் தொழில் முயற்சிக் குழுக்களாக இருக்கிருர்கள். இவர்களுக்கும் ஏனைய குழுக்களுக்குமிடையிலான வருமான இடைவெளி அதிகமாக இருக்கும்.

பதில்: கிராக்கியுள்ள பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்தால் மக்களின் தேவைகளை அவர்கள் நிறைவு செய்கிருர்கள் என்பதே என் கருத்தாகும். அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்தால் இப்பொருட்களும் சேவைகளும் நல்ல விளைவுகளைக் கொண்டு வரும். கஷ்டப் பட்டு செய்த வேலைக்கு அவர்கள் உயர் இலாபங்களை பெற்றுக்கொள்ளட்டும். ஆனுல், அநேகமாக எல்லா நாடுகளிலும் ஒரு வரி அறவீட்டு முறையுண்டு. பொருளாதாரத்தையும், இலாபங்களையும் ஒழுங்குபடுத்துவத்துவதற்கு இம் முறை பயன்படுத்தப்படுகின்றது. வரி அமைப்பின் மூலம் விரும்பத்தகாத சில அம்சங்களை அகற்றிவிட முடியும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் பெருகி ஒன்றுடனென்று போட்டி போடும். அப்பொழுது விலைகள் குறையும். கையிருப்புக்கள் குவிக்கப்படுவதனையும், செய்த வேலையுடன் தொடர்பில்லாத விதத்தில் விலைகள் உயர்வதையும் நாம் தடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களும் தனியாரும் அரச தொழில் முயற்சிகளும் ஒன்றுடனென்று போட்டி போடும் போது இது வெகு சுலபமாகிவிடும். தனிப்பட்ட தொழில் துறையில் இப்பொழுது எங்களிடம் 300,000 பேர் இருக்கின்றனர். பழுது பார்க்கும் நிலையங்கள் போன்ற தனியார் தொழில்கள் குறித்து எங்களிடம் ஒரு சட்டமுண்டு. வரையறுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நாம் இச் சட்டங்களை வகுக்கவில்லை. எம் வசமுள்ள மூலவளங்களை தூண்டிவிடும் நோக்கிலேயே அவை இயற்றப்பட்டுள்ளன. அவ்விதத்தில் சில மாணவர்கள் மொழிகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக வேலை செய்ய முடியும். அனுபவமுள்ள பல வயோதிபர்கள் தமது அனுபவத்தைப் பயன்படுத்தி வேலை செய்ய முடியும். அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. ஆனுல், அவர்கள் சில கைப்பணி வேலைகளில் ஈடுபடமுடியும். சேவைகள் சமூகத்துக்கு தேவைப்படுகின்றன.

கேள்வி: சந்தை நிலவும் வரையில் உயர்ந்த வருமான வித்தியாசங்கள் இருப்பதில் ஒன்றும் தவறில்லை என்று கூறுகிறீர்கள். வரி அறவீட்டின் மூலம் இவற்றை ஒழுங்கு படுத்த முடியும் என்று நம்புகிறீர்கள்.

பதில்: கடினமான வேலை செய்பவர்கள் கூடுதலாக சம்பாதிக்கட்டும். வருமான வித்தியாசம் இருக்கட்டும் வித்தியாசம் அதிக அளவில் இல்லையென்பதே இப்பொழுதுள்ள பிரச்சினை.

கேள்வி: வருமான வித்தியாசம் சோவியத் அமைப்பில் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கின்றது. லெனினின் காலத்திலும் ஸ்டாலினின் காலத்திலும் இவை இருந்தன. சலுகைகளும் இருந்து வந்துள்ளன. கொர்பசேவ் சீர்திருத்தங்களின் பின்னர் கட்சிக்காரர்களுக்கென இருந்த விஷேச சொகுசு கடைகள் ஒழிக்கப்பட்டுள்ளன. கட்சி ஊழியர்களுக்கும், சில உயர் அதிகாரிகளுக்குமென பிரத்தியேகமாக இக்கடைகள் இருந்தன. பல வருடங்களாக மொஸ்கோ நகரின் கணக்குகள் வெளியிடப்படவில்லை என நான் அறிகிறேன். உண்மையிலேயே அங்கு எப்பொழுதும் பாரிய அளவிலான வித்தியாசங்களும் ஊழலும் இருந்து வந்துள்ளன. அப்பொழுது இவை கிசுகிசுக்களில் மட்டும் பேசப்பட்டு வந்தன.

பதில்: ஆம். சில பத்திரிகைகளில் நீங்கள் வாசித்திருப்பீர்கள். சோஷலிச சமூகமொன்றில் இத்தகைய சம்பவங்கள் நிகழுமென நினைத்துப்பார்க்கவும் முடியாது. இப்பொழுது எல்லா விஷயங்களும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் அவற்றைப்பற்றி கலந்துரையாடி வருகிறோம்.

கேள்வி: ஆனுல், இவை நடந்து பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. லெனினுடைய காலப் புரட்சியின் காலமாக இருந்தது. சில கடுமையான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. அந்த மாபெரும் தலைவனும் மக்களும் வரலாற்றுப் புகழ்மிக்க போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனுல், அதற்கு 60 ஆண்டுகளுக்கு - இரு தலைமுறைகளுக்கு பின்னர் பெரும் மௌனம் நிலவி வருகின்றது.

பதில்: உண்மையியேயே பெரிய தவறுகள் நேர்ந்திருக்கின்றன. இவை கடும் குற்றங்கள். சோஷலிசத்தின் புனிதத்தை இவை களங்கப்படுத்தி விட்டன. பல சோஷலிசக் குறிக்கோள்களை இத்தவறுகள் உருக்குலைத்துவிட்டன. இதனுலேயே சலுகை பெற்ற குழுக்களின் பிரச்சினையும் எழுந்துள்ளது. நாங்கள் இப்பொழுது இவற்றையெல்லாம் தடுக்கப்போகிருேம்.

இப்பொழுது நாம் காணத் தொடங்கியிருக்கும் மாறுதல்கள் ஓர் ஆரம்பம் மட்டுமே.

கேள்வி: சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி போன்ற சர்வதேச தாபனங்கள் முதலாளித்துவ கண்ணோட்டம் கொண்டவை. இந்நிறுவனங்களுடனான உங்கள் தொடர்பு எப்படி இருக்கின்றது. பல கிழக்கைரோப்பிய நாடுகள் ச. நா. நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன?

பதில்: முதலில் நாங்கள் உலக பொருளாதாரத்தைப் பார்க்க வேண்டும். நாங்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கிறோம். அத்துடன் உலக பொருளாதாரம் ஒவ்வொரு நாட்டிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. எதிர்காலத்தில் இது மேலும் அதிக அளவில் இடம் பெறும். சுங்கத் தீர்வைகளுக்கான பொது உடன்பாட்டு அமைப்பைப் பொறுத்த வரையில் நாங்கள் ஆர்வம் காட்டுகிறோம். ஐக்கிய அமெரிக்காவும் சில மேற்கைரோப்பிய நாடுகளும் நாம் இதில் நுழைவதை விரும்பவில்லை. இந் நிறுவனங்களில் ஐக்கிய அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அவர்கள் பெரிய பங்காளிகளாக இருப்பதுடன் தீர்மானங்களையும் அவர்களே எடுக்கிறார்கள். தனியார் சந்தைச் சக்திகளின் கோட்பாட்டை அனைவரும் பின்பற்ற வேண்டும். பொருளாதாரத்தில் அரசாங்கங்கள் பங்குகொள்வதனை அனைவரும் தடுக்க வேண்டும்; அனைவரும் மேற் கத்தைய சார்பாளர்களாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் தீர்மானிக்கிறார்கள். உலகின் நிதிப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு இவற்றைவிட நியாயமான ஸ்தாபனமொன்றை கட்டியெழுப்புவதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும்.

கேள்வி: சந்தைச் சக்திகள் பற்றிய விஷயத்துக்கு மீண்டும் வருவோம். அத்தகைய ஒரு நிலைமையில் கட்சியின் பங்கு என்னவாக இருக்கும். பூர்ஷ்வா முறையிலிருந்து வந்த நிபுணர்களை முழுவதும் நம்பிவிட முடியாதாகையால், லெனின், புரட்சிக்குப்பின்னர் கட்சிக்காரர்களை தொழில் முயற்சிகளில் நுழைத்தார் - இந்த இரட்டை அமைப்பு நீக்கப்படுமா?

பதில்: இல்லை. கட்சி அமைப்பொன்று இருக்கும். அது அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது. ஆனால், கட்சி எல்லா வேலைகளையும் செய்யத்தேவையில்லை. அதற்குப் பதிலாக சோவியத்துக்களும், சோவியத் தொழிலாளர் அமைப்புக் கவுன்சில்களும் தொழில்களை நடாத்திச் செல்லும். முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கே கட்சி இருக்கின்றது. அது நெறிமுறைகளையும் கொள்கையையும் வகுத்து அரசியல் தலைமையை மேற்கொள்கிறது.

கேள்வி: கிளாஸ் நொஸ்ட் உங்கள் சஞ்சிகையைப் பாதித்துள்ளதா?

பதில்: ஆம். பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகள் குறித்த பல கலந்துரையாடல்களையும், வித்தியாசமான கண்ணோட்டங்களையும் வெளியிட நாங்கள் முயன்றுள்ளோம். கடற் பிராந்தியங்கள் சூறையாடப்படுவது தொடர்பான பிரச்சினையும், இறைமை குறித்த பிரச்சினைகளையும் நாங்கள் கலந்துரையாடுகின்றோம். எம்மிடம் மாறுபட்ட கருத்துக்களுண்டு. மேற்கத்தைய நாடுகளதும், கிழக்கைரோப்பாவினதும் பொருளாதார அனுபவங்கள் குறித்தும், தொழில் முயற்சிகளின் முகாமை முறைகள் பற்றியும் நாங்கள் எழுதுகிறோம். தரக்கட்டுப்பாட்டு முறை எமது தொழில் முயற்சிகளிலும் பார்க்க நல்ல விதத்தில் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது எனக்கூறி எங்களையே நாம் விமர்சித்துக் கொள்கிறோம். எமது விவசாய அமைப்பிலும் தொழிலாளர் உற்பத்தித்திறன் அளவிலும் சில குறைபாடுகள் உண்டு.

கேள்வி: எத்தகைய சமூகப் பிரச்சினைகள் இப்பொழுது பகிரங்கமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன? மதுப்பழக்கம் மற்றும் குற்றங்கள் கண்டிக்கப்பட்டு வருகின்றன. பகிரங்க விவாதங்களுக்கு ஒரு வரையறை இருக்கிறதா? உங்கள் கருத்துப்படி ட்ரொஸ்கிக்கு புத்துயிரளிக்கப்படுமா? ஸ்டாலினின் செயல்கள் விவாதிக்கப்படுவது போல் தெரியவில்லையே.

பதில்: கிரிமியன் தாத்தார்களைப் பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா? இது விவாதிக்கப்படுகிறது. குலாக்ஸ்குகள் ஒழிக்கப்பட்டது தொடர்பாகவும் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இறந்த காலத்தை நாங்கள் மீண்டும் கவனத்தில் எடுத்து வருகிறோம்.

கேள்வி: இந்த திறந்த மனப்பாங்கும் கேள்வி எழுப்புதலும் நல்ல விஷயங்கள்தான். ஆனால், இது மூன்றாவது மண்டல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடும். மாஸ்கோவிலிருந்து கட்டளைகளைப்பெற வேண்டுமென அவை முன்னர் எதிர்பார்க்கப்பட்டன. பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிஸ்ட், ட்ரொஸ்கியிஸ்ட், மாவோயிஸ்ட் என பல் பிரிவுகளாக பிளவுபட்டிருக்கிறது. மாஸ்கோ சார்பு குழுக்கள் இப்பொழுது பிரச்சினைகளை எதிர்நோக்கலாமல்லவா?

பதில்: வித்தியாசமான கருத்துக்கள் விவாதிக்கப்படும் போது கம்யூனிச இயக்கமும், கட்சியும் மேலும் வலுவடைகின்றன. விஷயங்களை பகிரங்கமாக விவாதிப்பது கட்சியின் பலத்தையே காட்டுகிறது. கம்யூனிச இயக்கத்தைப் பொறுத்தவரையில் பாரிய மாறுதல்கள் எதிரில் தெரிவதாக நான் எண்ணுகிறேன். உண்மையை அறிவதற்கான விவாதங்கள் மூலமாகவே இம்மாற்றங்களை அடைய முடியும்.

Hotel.



# இலங்கை நிலைமையும் உலக வர்த்தகமும்

சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்கென நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் 23 பெரிய ஹோட்டல்கள் 1986ம் வருடத்தின் இறுதியளவில் முற்றிலும் இயங்கா நிலையிலிருந்தன. சுற்றுலாச் சபையின் தரவுகளின் படி 1982ம் ஆண்டில் 407.000 ஆக விருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 1986ம் ஆண்டில் 203,000 ஆக கடுமையாக வீழ்ச்சியடைந்திருந்தது. இது 43% வீழ்ச்சியாகும். சுற்றுலாப்பயணிகளின் வருகையிலேற்பட்ட வீழ்ச்சியின் விளைவு ஒரு பாதகமான ஹோட்டல் துறை மீது நேர்ந்த நெருக்குதல்களாகும். பெரும்பாலான ஹோட்டல்கள் தமது வங்கிக்கடன்களை மீளச் செலுத்த முடியாதிருந்ததனால் அவை அரசாங்கத்திடம் நிவாரணம் கோரி நின்றன. 1986ல் மொத்தம் 186 ஹோட்டல்கள் தமது கடன் மீளச் செலுத்துகை, மீள அட்டவணைப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரியதுடன், 66 ஹோட்டல்களுக்கு இச் சலுகை வழங்கப்பட்டது. நிலைமை இவ்விதம் சீரழிந்து கொண்டு சென்ற வேளையில் கொழும்பில் 6 பிரதான ஹோட்டல்கள் புதிதாக் சேர்ந்தன. கொழும்பு ஹில்டன் ஹோட்டல் நகரின் இதயப் பகுதியில் 7 ஏக்கர் முதனிலைக் காணியில் 19 மாடிகளுடன் திறந்து வைக்கப்பட்டது. கொழும்புப் பகுதியில் ஏற்கனவே கிடைக்கக் கூடியதாக இருந்த 2150 அறை வசதிகளுக்கு மேலதிகமாக, 309 அறைகளை இது கொண்டிருந்தது. ஓய்வு நேரப் பிரயாணத்தின் சகல அம்சங்களையும், சகல நோக்கங்களையும் சுற்றுலாத்துறை என்னும் வரைவிலக்கணம் அடக்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு வழி காட்டுவதிலும், வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் இக்கைத்தொழில் ஈடுபட்டுள்ளது. தனது நிரந்தர வதிவிடமல்லாத பிறிதொரு நாட்டிற்கு குறைந்தது 24 மணித்தியாலங்களுக்கு விஜயம் செய்யும் ஒருவர் பொதுவாக சுற்றுலாப் பயணி எனக் கணிக்கப்படுகின்றார்: விடுமுறையைக் கழிப்பவர்கள், வியாபார நோக்கத்தில் பிரயாணம் செய்வோர், யாத்திரை செய்வோர் உல்லாசப் பயணம் செய்வோர் போன்றோரே சுற்றுலாப் பயணிகளில் பெருமளவில் அடங்கியுள்ளனர். தனது சொந்த நாடல்லாத பிறிதொரு நாட்டிற்கு குறைந்த பட்சம் 4 இரவுகள் தங்கியிருக்க விஜயம் செய்யும் ஒருவரே ஐரோப்பிய அகராதிப்படி விடுமுறையைக் கழிக்குமொருவராக கருதப்படுகின்றார்.

## சர்வதேச சுற்றுலாத்துறை

சர்வதேச சுற்றுலாத் துறையானது 3 பிரதான வகையான பிரயாணிகளைக் கொண்டதாக உள்ளது.

(அ) வளர்ச்சியடைந்த நாடுகளுக்கிடையில் பிரயாணம் செய்வோர்;

(ஆ) தாம்வாழும் பிராந்தியத்திற்குள் பிரயாணம் செய்வோர்;

(இ) வெகுதூர இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பயணிகள்.

சர்வதேச சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் இன்னமும் கூட அதிகமான பிரயாணங்கள் வளர்ந்த நாடுகளுக்கிடையேயே நடைபெறுகின்றன. மேற்குலகின் பல வளர்ச்சியடைந்த நாடுகள் பௌதிக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிக நெருக்கமாக ஒன்றுடனொன்று பிணைப்புற்றிருப்பதும், போக்குவரத்து, விசா, செலாவணி விதிதம், போன்ற பயண ஒழுங்குகள் இந்நாடுகளில் மிக எளிதாக விருப்பதும் இதற்கொரு காரணமாகும். உதாரணமாக எந்தவொரு ஐரோப்பியரும், ஐரோப்பிய பொதுச்சந்தை அமைப்பு நாடுகளில் விசா பெறும் கடப்பாடு இன்றி பிரயாணம் செய்ய முடியும்.

கடந்த சில வருடங்களின் பிரயாண மாதிரிகள் எடுத்துக் காட்டுவது போல சர்வதேச சுற்றுலாத் துறையானது பிரதானமாக மூன்று பிராந்தியங்களிலிருந்து தோற்றம் பெறுகின்றது.

(அ) ஐக்கிய அமெரிக்கா, கனடா என்பவற்றை உள்ளடக்கிய வட அமெரிக்கா

(ஆ) ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் போன்றவற்றை உள்ளடக்கியமேற்கு ஐரோப்பா;

(இ) ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த பசுபிக் நாடுகள்;

தென் ஆபிரிக்காவும் சுற்றுலாப் பயணிகள் பயணம் தொடங்கும் ஒரு பிரதான இடமாக இருந்த போதிலும் கடந்த சில வருடங்களில் அதன் முக்கியத்துவம் கணிசமான அளவில் குறைந்துள்ளது.

சர்வதேச சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 1950 இன் தொடராண்டுகளுக்குப் பின்னரே தீவிர முன்னேற்றத்தைக் காட்டியது: இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் பிரயாணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும் செலாவணிக் கொடுக்கல் வாங்கல் விதிகள் தளர்த்தப்பட்டதும் இவ் வளர்ச்சிக்கு வழிகோலின: யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அழிவினாலும், நாஜிகளுக்கு எதிரான வெறுப்புணர்வுகளினாலும் ஜேர்மனி சிலகாலத்திற்கு ஒதுங்கியிருந்தது. ஜப்பானின் சுற்று

லாத் துறை பிந்திய 1960 களிலேயே (சிலநாடுகள் விதித்திருந்த பிரயாணத்தடைகள் நீக்கப்பட பின்னரே) முன்னேற்றமடைந்தது.

1950 களிலும் 1960 களின் ஆரம்பத்திலும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சுற்றுலாப் பயணங்கள் பிரதானமாக அப்பிராந்தியத்துக்குள்ளேயே நடைபெற்று வந்தன. மேற்குலகில் பிந்திய 1960 களில் ஏற்பட்ட துரிதப் பொருளாதார மீளமைப்பும் முன்னேற்றமும், குடும்பங்களின் செலவிடக் கூடிய வருமானத்தை உயர்த்த உதவின. இதன் விளைவாக மக்கள் தமது விடுமுறைப் பயணங்களில் புதிய இடங்களைச் சென்றடைய விழைந்தனர். மேலும், விமானப் போக்குவரத்திலேற்பட்ட முன்னேற்றமும், பாரிய விமானங்கள் மலிவான கட்டணங்களில் சேவைகளை வழங்கியமையும், வெகுதொலைவில் அமைந்திருக்கும் பிராந்தியங்களின் சூழலையும், கலாச்சாரங்களையும் கண்டறிவதற்கான மக்களின் ஆவலைத் தூண்டின. பல மூன்றும் உலக நாடுகளில் பாரம்பரியமாகக் காணப்பட்ட விருந்தோம்பல் தன்மையும், நுகர் பொருட் செலவுகள் கணிசமான அளவில் மலிவாக இருந்தமையும் இப்போக்குக்கு உற்சாகமூட்டிய காரணிகளாகவிருந்தன. வளர்ச்சியடைந்த நாடுகளில் குளிர்கால நாட்களை அதிக செலவுடன் கழிப்பதைக் காட்டிலும், உஷ்ண வலய நாடுகளில் குறைந்த செலவிலான இருப்பிடம், பிரயாணம், கேளிக்கைகள் என்பன கிட்டும் ஒரு சூழ் நிலையில் தங்கள் விடுமுறையைக் கழிப்பதற்கு பல மேற்கத்திய மக்கள் விரும்பினர். மறுபுறத்தில், விருந்தோம்பும் நாடுகள் தமக்கு வெளிநாட்டு நாணயங்களை சம்பாதித்து தரும் ஒரு கவர்ச்சிகரமான மூலமாக சுற்றுலாத்துறையிருப்பதனைக் கண்டறிந்து அதன் மேம்பாட்டுக்கு சகல ஊக்குவிப்புக்களையும் வழங்கின. அந்நாடுகள் பயணிகளுக்கு போட்டி போட்டுக் கொண்டு வசதிகளைச் செய்து கொடுத்ததுடன், அவர்களுக்கு முற்று முழுதான சுதந்திரத்தையும் அளித்தன.

உலகளாவிய சுற்றுப்பிரயாணிகளின் தொகை 1950ம் ஆண்டில் 25 இலட்சமாகவிருந்து 1970 ம் ஆண்டில் 16.8 கோடியாக அதிகரித்தது. இப்பயணிகள் விடுமுறையைக் கழிக்கச் செல்வோர், வியாபார நோக்கில் பிரயாணம் செய்வோர் என்போரை உள்ளடக்கியிருந்தனர். இக்காலப் பிரிவில் வருடாந்த வளர்ச்சி 10% ஆகவிருந்தது. பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் விட கூடிய வேகத்தில் சம்பாத்தியங்கள் அதிகரித்தன. உதாரனமாக, 1950 ம் ஆண்டில் 210 கோடி அமெரிக்க டொலராகவிருந்த இச் சம்பாத்தியம் 1970 இல் 1740 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது. வருடாந்த சராசரி வளர்ச்சி 11% ஆகவிருந்தது.

எழுபதுகளின் தசாப்தத்தில் உலகலாவிய சுற்றுலாப் பயணிகளின் வருகை துரித வேகத்தில் வளர்ச்சி கண்டது. 1980 ம் ஆண்டில் 28.4 கோடிப் பயணிகள் பிரயாணங்களை மேற்கொண்டனர். எனினும், முன்னைய தசாப்தத்தில் 10% மாகவிருந்த வளர்ச்சி இத்தசாப்தத்தில் 7% ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. சுற்றுலாத்துறை மூலமான சம்பாத்தியங்களில் தளம்பல் காணப்பட்ட போதிலும் அது 1970 ம் ஆண்டில் 1740 கோடி அமெரிக்க டொலர்களாகவிருந்து 1980 ம் ஆண்டு 10240 கோடி அமெரிக்க டொலர்களாக ஆறு மடங்குகளில்-அதிகரித்திருந்தது. ஒப்பீட்டு ரீதியான சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் இக்கால கட்டத்தில் ஆண்டொன்றுக்கு 48.8% மாக இருந்தது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும், அவர்கள் மூலம் கிடைத்த வருமானத்திலும் தொடர்ச்சியாக 3 தசாப்த காலமாக ஏற்பட்டுவந்த வளர்ச்சி 1980 ம் ஆண்டளவில் மாற்றமடையத் தொடங்கியது. 1982 ம் ஆண்டைத்தவிர ஏனைய சகல வருடங்களிலும் கூட்டு மொத்த எண்ணிக்கை அதிகரித்ததென்பது உண்மையாகும். உதாரணமாக, 1986ம் ஆண்டில் பிரயாணிகளின் வருகை 34 கோடியாக இருந்ததுடன் இது 1980 ம் ஆண்டின் அளவை விட 15.5 கோடி அதிகமாகும். சார்பு ரீதியான வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 3.3 ஆகவிருந்தது. 1985, 1986 ஆகிய ஆண்டுகளில் வருடாந்த வளர்ச்சி வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இது 7.5 வீதத்திலிருந்து 5.4 வீதமாகவும் பின்னர் 2.4% மாகவும் வீழ்ச்சி கண்டது.

1980 ம் ஆண்டிற்கும் 1986ம் ஆண்டிற்குமிடைப்பட்ட காலத்தில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மூலம் கிடைத்த சம்பாத்தியம் 126 கோடி அமெரிக்க டொலர்களால் மட்டுமே அதிகரித்திருப்பதானது 1980 களில் உலக சுற்றுலாத்துறை எதிர்நோக்கியிருக்கும் கவலைக்கிடமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றது. உலகலாவிய சுற்றுலாத்துறை மூலம் 1986ம் ஆண்டில் கிடைத்த சம்பாத்தியங்கள் அதேயாண்டில் செய்யப்பட்ட மொத்த உலக பண்டை ஏற்றுமதி வருமானமான 22500 கோடி அமெரிக்க டொலர்களில் 5.1% மாக மட்டுமேயிருந்தது. இது 1981ம் வருடத்தில் 5.3% மாக இருந்தது. 1985 இல் முடிவுற்ற 10 வருடகாலத்தில் உலக சேவைகள் வர்த்தகத்தின் பிரதான கூறுகளில் ஒன்ருக சுற்றுலாத்துறை எழுச்சியடைந்தது. இவ்வாண்டில் உலகளாவிய சேவைகள் வர்த்தகத்தின் மொத்த சம்பாத்தியம் 34500 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன் இதில் சர்வதேச சுற்றுலாத்துறையின் பங்கு 2850 கோடி டொலர்களாகவிருந்தது.

1980 களின் முதல் மூன்று வருடங்களில் மத்திய தென்ன

அட்டவணை 1

ஏற்றுமதிகளிலிருந்தும் சுற்றுலாத் துறையிலிருந்தும் பெற்ற வருமானம் 1976–1986

பெறுமதி எஸ். டி. ஆர். பத்து லட்சம்

| வருடம் | தேயிலை | இறப்பர் | தென்னை | உடுதுணி | இரத்தினக் கற்கள் | பெட்ரோ-லியம் | சுற்றுத் துறை | மொ. தே. உ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1976 | 215.8 | 91.4 | 50.8 | 7.1 | 26.9 | 52.3 | 24.4 | 3019.8 |
| 1977 | 336.1 | 89.3 | 47.5 | 13.4 | 28.6 | 57.3 | 34.8 | 2852.0 |
| 1978 | 326.9 | 103.2 | 64.9 | 24.3 | 27.1 | 47.3 | 44.4 | 3304.4 |
| 1979 | 284.3 | 123.8 | 84.4 | 54.8 | 24.3 | 95.7 | 59.0 | 2460.6 |
| 1980 | 286.7 | 120.4 | 57.3 | 84.0 | 30.8 | 89.6 | 85.0 | 2872.4 |
| 1981 | 284.3 | 127.4 | 63.4 | 130.4 | 27.9 | 137.7 | 110.3 | 3424.1 |
| 1982 | 276.0 | 101.1 | 65.1 | 142.7 | 29.8 | 142.7 | 132.7 | 4034.8 |
| 1983 | 329.7 | 113.3 | 76.3 | 127.5 | 37.4 | 106.6 | 115.1 | 4398.4 |
| 1984 | 604.5 | 126.6 | 79.0 | 261.2 | 27.1 | 126.1 | 105.0 | 5239.2 |
| 1985 | 434.4 | 92.9 | 111.0 | 262.6 | 31.6 | 140.3 | 72.6 | 5245.1 |
| 1986 | 281.0 | 80.0 | 73.0 | 261.4 | 23.0 | 72.0 | 60.8 | 4858.7 |
| | | | | | | | பெறுமதி | ரூ. பத்துலட்சம் |
| 1976 | 2099.7 | 889.6 | 374.6 | 68.7 | 261.4 | 509 | 237.8 | 27750 |
| 1977 | 3502.5 | 930.6 | 334.7 | 139.7 | 297.9 | 597 | 363.1 | 34432 |
| 1978 | 6400.9 | 2020.6 | 971.6 | 475.3 | 531.0 | 926 | 870.0 | 40232 |
| 1979 | 5722.2 | 2491.4 | 1297.6 | 1103.5 | 490.1 | 1926 | 1188.0 | 49532 |
| 1980 | 6170.1 | 2590.4 | 753.8 | 1808.4 | 663.7 | 1928 | 1830.0 | 61814 |
| 1981 | 6444.0 | 2889.0 | 1010.7 | 2956.8 | 632.5 | 3122 | 2500.0 | 77625 |
| 1982 | 6342.2 | 2322.6 | 1002.6 | 3278.9 | 684.9 | 3280 | 3050.4 | 92720 |
| 1983 | 8295.2 | 2851.8 | 1409.1 | 4466.2 | 940.9 | 2682 | 2896.1 | 110,664 |
| 1984 | 15764.3 | 3301.3 | 1552.7 | 6812.4 | 616.5 | 3288 | 2737.8 | 136638 |
| 1985 | 12002.8 | 2566.0 | 2383.0 | 7256.7 | 560.6 | 3877 | 2239.3 | 144921 |
| 1986 | 9252.8 | 2622.0 | 2401.7 | 8600.0 | 755.1 | 2358 | 2000.0 | 159,852 |

மெரிக்க கரிபியன் பிராந்தியத்திற்கான பயணிகளின் வருகை 1980 இல் 1 கோடியே 80 இலட்சமாகவிருந்து 1983 இல் 1 கோடியே 68 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது. இந்நிலமை 1984 ம் ஆண்டில் ஓரளவு விருத்தியுற்று 1986 இல் திருப்திகரமான நிலைமை காணப்பட்டது. எனினும், சம்பாத்தியங்களில் நிலையான ஒரு போக்குக் காணப்படவில்லை. 1982 ம் ஆண்டில் பயணிகளின் வருகையில் 4.6% வீழ்ச்சி காணப்பட்டதுடன் சம்பாத்தியங்களில் 20% வீழ்ச்சி காணப்பட்டது. 1983 ம் ஆண்டில் பயணிகளின் வருகை அதிகரித்திருந்த போதிலும் அதன் விளைவான சம்பாத்தியங்கள் அதிகரிக்கவில்லை. 1983 ல் இருந்து பயணிகளின் வருகையின் வருடாந்த வளர்ச்சி 6% மாகவிருந்த அதே வேளையில் சம்பாத்தியங்களின் வளர்ச்சி மெதுவாகி 5.4% மாகவே காணப்பட்டது.

மத்திய கிழக்கைப் பொறுத்த வரையிலும் 80களின் முதல் 6 வருடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடக் கூறக்கூடிய எத்தகைய வளர்ச்சிகளும் ஏற்படவில்லை. பயணிகளின் வருகை 1980 ம் ஆண்டில் 58 இலட்சமாகவிருந்து 1985 ல் 71 இலட்சமாக அதிகரித்தது. ஆனால், 1986 ல் இது 60 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது.

வளர்முக நாடுகளின் பிராந்தியங்களைப் பொறுத்த வரையில் இலங்கையை உள்ளிட்ட தென்னாசியப் பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த எந்தவித வளர்ச்சியும் ஏற்படவில்லை. இப்பிராந்தியத்திற்கான பயணிகளின் வருகை 1980 களில் 23 இலட்சமாகவிருந்து 1986 ல் 25 இலட்சமாக அதிகரித்தது. வருடாந்த சராசரி வருகை 24 இலட்சத்து 50 ஆயிரம் அளவில் தொடர்ந்தும் காணப்பட்டது. மறுபுறத்தில், பயணிகள் மூலமான சம்பாத்தியங்கள் 1981 இலிருந்து 1986 வரையில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளன.

## இலங்கை நிலமை

உலகலாவிய சுற்றுலாப் பயணிகளின் பரிமாணத்துடன் ஒப்பிடும்போது இலங்கைக்கான பயணிகளின் வருகை மிக அற்பமானதாகும். உதாரணமாக, 1980ல் உலகலாவிய சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இலங்கைக்கான வருகை 0.1% மாக மட்டுமேயிருந்தது. இது 1986ம் ஆண்டளவில் 0.7% மாக மேலும் வீழ்ச்சியடைந்தது. தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையின் பங்கு 1980 ம் ஆண்டில் 14.1% மாகவிருந்து 1986 ல் 9% மாக வீழ்ச்சி கண்டது. சம்பாத்தியங்களைப் பொறுத்தவரையிலும் இதே நிலமை காணப்பட்டது. 1980ம் ஆண்டில் 7.1% மாகவிருந்த தென்னாசியப்பிராந்தியத்தில் இலங்கையின் சம்பாத்தியம் 1986 ல் 5% மாக வீழ்ச்சியடைந்தது.

இலங்கையைப் பொறுத்த வரையில் 1982 ம் ஆண்டிற்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஒரு வீழ்ச்சிப் போக்குத் தென்பட்டது. வருடாந்தச் சராசரி வீழ்ச்சி 10.8% மாக விருந்து வந்தது. 1986 ம் ஆண்டில் 230106 பயணிகள் வருகை தந்தனர். 1987ல் முதல் ஆறு மாதங்

களில் சுற்றுலாத்துறை மீதான சம்பாத்தியங்களில் முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 37% வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் அவர்கள் மூலமான வருமானத்திலும் வீழ்ச்சிப் போக்கு காணப்பட்ட போதிலும் அறைகளின் எண்ணிக்கை 1980 ம் ஆண்டில் 6797 ஆக இருந்து 1986ல் 10797 ஆக அதிகரித்தது. இது உலகளாவிய அறை வசதிகளில் முறையே 0.8, 0.1, சதவீதங்களாகும்.

எழுபதுகளின் இறுதியிலும், எண்பதுகளின் ஆரம்பத்திலும் இலங்கையின் வெளிநாட்டுச் சம்பாத்தியங்களில் கணிசமான அளவினை சுற்றுலாத்துறை பெற்றுக் கொடுத்ததுடன், அது கணிசமான அளவிலான பொருளாதார நடவடிக்கைகளையும் இலங்கையில் தோற்றுவித்தது. 1982ல் நாட்டின் வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்களுக்கு சுற்றுலாத் துறை 305 கோடி ரூபாவைப் பெற்றுக் கொடுத்தது; எஸ். டி. ஆர். அளவுகளில் இது 13.2 கோடியாகும். அவ்வாண்டில் தேயிலை, உடுதுணி ஏற்றுமதி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றினூல் கிடைத்த அன்னியச் செலாவணி வருமானங்களுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறையினூலான வருமானங்கள் அமைந்தன. எஸ்.டி.ஆர். அளவுகளில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் 1976 ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வளர்ச்சிகண்டு வந்துள்ளது. 1982 ம் ஆண்டிற்குப் பின்னர் சுற்றுலாக் கைத்தொழில் மூலம் பெறப்பட்ட வருமானங்களில் ஒரு வீழ்ச்சிப் போக்கு காணப்பட்டது. இது 1983 ல் 289.6 கோடி ரூபாவாக இருந்து அதனையடுத்து வந்த வருடங்களில் முறையே 267 கோடி ரூபா, 223.9 கோடி ரூபா, 200 கோடி ரூபா எனக் குறைந்து கொண்டு வந்தது. எஸ்.டி.ஆர். அளவுகளில் இச் சம்பத்தியங்கள் முறையே 11.5 கோடி, 10.5 கோடி, 7.2 கோடி, 6 கோடி என 1982 இலிருந்து 1986 வரை வீழ்ச்சியடைந்து வந்துள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையில் முறைசார், முறைசாராத் துறைகளில் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய 182 தாபனங்கள் 1980ம் ஆண்டில் இயங்கி வந்துள்ளன. இவற்றில் 101 தாபனங்கள் 6042 அறை வசதிகளையும், 11,790 கட்டில்களையும் கொண்ட தரப்படுத்தப்பட்ட தாபனங்களாகும். இதேயாண்டில் முறைசாராத் துறையில் இயங்கிய தாபனங்களிடம் 765 அறைகளும், 1546 கட்டில் வசதிகளுமிருந்தன. அவ்வாண்டில் 321,780 பயணிகள் நாட்டுக்கு வந்தனர் இவர்களில் 21,594 பேர் வியாபார நோக்கங்களுக்கும் 291,999 பேர் விடுமுறையைக் கழிப்பதற்கும் இங்குவந்தனர். இவர்களுள் 68% மானோர் மே. ஐ. நாடுகளிலிருந்தே வந்தனர். ஆசியப் பயணிகளின் வருகை 22 விதமாகவிருந்தது. 1980 களில் இங்குவிஜயம் செய்த ஆசியப் பயணிகளில் அதிகமானோர் எமது தீர்வையற்ற கடைத் தொகுதியில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்த இந்தியர்களாகவேயிருந்தனர்.

அட்டவணை 2

இலங்கையில் சுற்றுலாத்துறை 1977—1986

| வகை | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.0 பயணிகள் வருகை மொத்தம் | 153.665 | 192.592 | 250.164 | 321.780 | 370.742 | 407.230 | 337.530 | 317.734 | 257.456 | 230,106 |
| 2.0 பிராந்திய பகிர்வு (% மாற்றம் | | 25.3 | 29.9 | 28.6 | 15.2 | 9.9 | -17.1 | 6.9 | -18.9 | - 10.6 |
| 2.1 வட அமெரிக்கா | 10.137 | 12.426 | 13.941 | 15.408 | 16.554 | 17.686 | 15.852 | 15.020 | 10.358 | 4,232 |
| 2.2 இலத்தின் அமெரிக்கா/கரிபியன் | 371 | 498 | 609 | 676 | 652 | 532 | 568 | 486 | 430 | 402 |
| 2.3 ஐரோப்பா | 109.278 | 134.397 | 168.801 | 220.588 | 250.474 | 236.228 | 181.240 | 194.340 | 156.084 | 145,786 |
| 2.4 ஆபிரிக்கா | 1,237 | 1.497 | 1.646 | 2.380 | 2.584 | 3,012 | 2,834 | 2.954 | 1.512 | 454 |
| 2.5 மத்திய கிழக்கு | 1.077 | 1.268 | 1.646 | 1,986 | 3.014 | 3,098 | 2.780 | 3.228 | 1.752 | 2134 |
| 2.6 ஆசியா | 26.158 | 35.996 | 56.187 | 72.022 | 87.894 | 133.886 | 123.798 | 89.736 | 79.230 | 66,280 |
| 2.7 அவுஸ்துரேஷ்யா * | 5,407 | 6,510 | 7,334 | 8,720 | 9.570 | 12,788 | 10,458 | 11,972 | 8.090 | 5,808 |
| 3.0 வருகையின் நோக்கம் | | | | | | | | | | |
| 3.1 வியாபாரம் | 5.844 | 11.651 | 13.406 | 21.594 | 23.540 | 27.484 | 17,022 | 10.934 | 18.214 | |
| 3.2 உல்லாசம் | 144.148 | 177.824 | 227,218 | 291.999 | 331.638 | 360.824 | 306.824 | 300.336 | 234.038 | |
| 3.3 ஏனையன | 3.633 | 3.117 | 9 486 | 8.192 | 15.564 | 18,922 | 13,496 | 6.464 | 5.204 | |
| 4.0 வந்து செல்லும் பயணிகள் | 7.672 | 8,494 | 5,563 | 8.636 | 7.737 | 6.632 | 7,208 | 8,838 | 9.882 | |
| 5.0 மொத்த வருகை | 44,125 | 50.000 | 63,510 | 75.270 | 77.360 | 65.792 | 48.654 | 53.488 | 49.884 | |
| 6.0 சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளோர் மொத்தம் | — | — | 43,409 | 47.900 | 55.255 | 64,262 | 53,608 | 59.026 | 55.000 | |
| 6.1 நேரடி வேலை வாய்ப்பு | 13.716 | 15.404 | 18.472 | 19.878 | 23.023 | 26,776 | 22,374 | 24.594 | 22 723 | 20,000 |
| 6.2 மறைமுக வேலைவாய்ப்பு | — | — | 24.937 | 28.022 | 32.532 | 37.489 | 31,234 | 34.432 | 31,810 | 28,000 |
| 7.0 அன்.செலாவணி சம்பாதிப்பு (ரூ. பத்து லட்சம்) | 363 | 870 | 1,209 | 1.830 | 2.547 | 3,050 | 2,896 | 2.670 | 2,239 | |
| 8.0 தங்குமிட வசதிகள் | 194 | 174 | 169 | 182 | 224 | 240 | 271 | 277 | 271 | 237 |
| 8.1 தரப்படுத்தப்பட்ட நிலையங்கள் | 90 | 96 | 95 | 101 | 115 | 123 | 138 | 146 | 145 | 131 |
| 8.1.1 அறைகள் | — | — | 5.599 | 6.042 | 6,891 | 7,539 | 8,852 | 9,627 | 9.826 | 9794 |
| 8.1.2 கட்டில்கள் | — | — | 11.212 | 11.790 | 13,773 | 15.001 | 17,605 | 18.970 | 19,358 | 19301 |
| 8.2 மேலதிக நிலையங்கள் | 104 | 78 | 74 | 81 | 109 | 117 | 133 | 131 | 126 | 100 |
| 8.2.1 அறைகள் | — | — | 740 | 755 | 993 | 1,159 | 1,251 | 1.270 | 1,180 | 1137 |
| 8.2.1 கட்டில்கள் | — | — | 1,541 | 1,546 | 2,014 | 2,346 | 2,584 | 2,599 | 2,837 | 2386 |

* அவுஸ்திரேலியா, நியூசிலந்து, பிஜி தீவுகளை உள்ளடக்கியது.

ஆதாரம்; இலங்கை சுற்றுலாச்சபை

குறிப்பு—நாட்டில் ஒரு இரவை அல்லது அதற்கு மேற்பட்ட இரவுகளை கழிப்பவர்களையே "சுற்றுலாப்பயணிகள்" என்ற பதம் குறிக்கிறது. இரவில் தங்காது நாட்டில் சில மணித்தியாலங்கள் மட்டுமே தங்கிச்செல்வோர் "வந்து செல்லும் பயணிகள்" என்றழைக்கப்படுகின்றனர்.

## எண்ணெய் வணிகத்தின் நிலை: சில முக்கிய பிரச்சினைகள்

சென்ற 12 மாதங்களாக இடம்பெற்ற கொந்தளிப்பும் எண்ணெய்ச் சந்தையின் நிச்சய மற்ற நிலைமையும் சேர்ந்து, போட்டி நிலையைக் காப்பதற்காகப் புதிய உத்திகளைக் கையாள்வதற்கு உலக எண்ணெய்க் கைத்தொழிலை நிர்ப்பந்தித்துள்ளன. பிரபல அமெரிக்க எரிபொருள் ஆய்வு அமைப்புக்களில் ஒன்றான மச்சசுசெட்சிலுள்ள கேம்பிரிட்ஜ் எரிபொருள் ஆய்வுக் கூட்டமைப்பு அண்மையில் நடாத்திய ஆய்வொன்றின்போது இவ்வுத்திகள் மீது கூடிய கவனஞ் செலுத்தியது. இவற்றுள் பின்வருவனவும் அடங்கும்:

★ சந்தைகளைக் காப்பதற்கும் வழங்கல்களை உறுதிப்படுத்துவதற்குமாக எரிபொருள் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்குமிடையே புதிய நேச உறவுகள்;

★ விலை விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு எரிபொருள் எதிர்காலத்தையும் விருப்பத் தெரிவுச் சந்தைகளையும் பயன்படுத்தல்;

★ மூலதனத்தைப் பெறுதற்குப் புதிய அணுகு முறைகள்;

★ எண்ணெய்ச் சேவைக் கைத்தொழில்களைப் புனரமைத்தலும் தொழினுட்ப அபிவிருத்தியை மேற்கொள்ளலும்;

★ இயற்கை வாயு உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் புது ஏற்பாடுகள்.

கேம்பிரிட்ஜ் எரிபொருள் ஆய்வுக் கூட்டமைப்பு (கே.எ.ஆ.கூ.) தலைவர் டாக்டர் டேனியல் யெர்ஜின் இவ்வாய்வை நெறிப்படுத்தினர். எண்ணெய், வாயுக் கைத்தொழில் தனது நிலையைப் பலப்படுத்தவும் ஒன்றிணைப்பை மீண்டும் ஏற்படுத்தவும் தொடங்கியிருப்பதாக எழுதுகின்ருர். இந்நடவடிக்கை இறுதியாக எண்ணெய், வாயு வர்த்தகத்தின் தோற்றத்திற்குப் புது வடிவு கொடுத்து உலகளாவிய உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்குமிடையே புது உறவுகளை ஏற்படுத்தும். சந்தைகளை அடைதல் பற்றியும் இக்கைத்தொழில் மீண்டும் கவனஞ் செலுத்தலாம் என்றும் அவர் கூறுகின்ருர்.

இவ்வாய்வு, அமெரிக்காவிலும் வெளியிலுமுள்ள பிரபல நிபுணர்களின் கட்டுரைகளையும் கொண்டிருந்தது. இவற்றுள் இக்வடோரின் எரிபொருள், சுரங்க அமைச்சரும் ஒபெக்கின் உபதலைவருமான ஜேவியர் எஸ்பினேசாவின் ஆய்வுக் கட்டுரையும் ஒன்ருகும். எண்ணெய்விலை உறுதிப்பாட்டைக் காப்பதற்கு ஒபெக் தனது பங்களிப்பைச் செய்யத் திடசங்கற்பம் பூண்டிருப்பதாக அவர் கூறுகின்ருர். உறுதிப்பாடு உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்ருர். குழப்பம் மேலும் குழப்பத்தையும் ஒழுங்கீனம் மேலும் ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை 1986 ஆம் ஆண்டு காட்டிவிட்டது. 1986 இறுதியளவில் எண்ணெய் விலைகள் வீழ்ச்சியுற்றமைக்கு ஓரளவு காரணமாக அமைந்தது யாதெனில், விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒபெக் உறுப்பினர் அறவிட்ட விலையைக் குறைப்பதன் மூலம் அத்தாபனத்தின் உலக எண்ணெய்ச் சந்தைப் பங்கைப் பாதுகாப்பதற்கு அத்தாபனம் 1986 டிசம்பரில் மேற்கொண்ட தீர்மானமாகும். இக்கொள்கையின் ஒரு பகுதியாக சவூதி அரேபியா அதன் உற்பத்தியை அதிகரிக்கத் தீர்மானித்தது. உலகச் சந்தையின் சமநிலையைக் காத்து, ஒரு பீப்பாவுக்கு 28 டொலர் என்ற ஒபெக்கின் உத்தியோகபூர்வ விலையை ஆதரிப்பதற்காகத்தான் தொடர்ந்து அந்தாபனத்தின் ஊஞ்சல் உற்பத்தி நாடாக உற்பத்தியை கூட்டிக் கொண்டும் குறைத்துக் கொண்டும் இருக்க முடியாது என்று அந்நாடு கூறியது. அடுத்த சில மாதங்களில் மசகு எண்ணெயின் விலை 1/3 பங்கால் குறைந்து 42 கலனைக் கொண்ட ஒரு பீப்பாவின் விலை 20 டொலராக வீழ்ச்சியுற்றது; இது முன்னர் 5 ஆண்டுகளாக இருந்து வந்த விலையில் அரைவாசியாகும்.

எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட பாரதூரமான வீழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில், உறுதிப்பாட்டை ஏற்படுத்த ஒபெக் மேற்கொள்ளும் முயற்சிக்கு ஏற்படும் சவால்களை எஸ்பினேசா தெளிவாக எடுத்துக் காட்டினர். முதலாவதாக, புதுக் கண்டுபிடிப்பு முயற்சிகள், எண்ணெய் வரிகள் போன்ற பொருளாதார, கொள்கை பிரதிச் செயல்களைத் தாங்கி தேவைக்கும் வழங்கலுக்குமிடையில் சமநிலையைப் பேண வேண்டும்.

இரண்டாவதாக உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நியாயம் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதில் எண்ணெய்க்கு நியாயமான நட்ட ஈடு கொடுப்பதுடன், எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னை காலக் கட்டத்திற்குத் தங்கு தடையின்றி மாறுவதற்கான வழிவகுக்க வேண்டும்.

பதின்மூன்று அபிவிருத்தியடையும் நாடுகளைக் கொண்ட ஒபெக்கின் மொத்தத் தேசிய உற்பத்தியானது, யப்பானின் மொ.தே. உற்பத்தியின் அரைவாசியை விடக் குறைந்தது என்பதை எஸ்பினேசா இங்கு சுட்டிக் காட்டுகின்ருர்.

லண்டனிலிருந்து வெளியாகும் மூன்றும் உலகின் சஞ்சிகையான ''சவுத்'' சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் கருத்துரைகள், நடைமுறை நிலைமையின் சில அம்சங்களையும் 1988 க்கான வாய்ப்புக்களையும் ஆராய்கின்றன.

# ஒபெக்: கட்டுப்பாடும் சந்தைப் பங்கும்

ஜேவியர் எஸ்பினோசா

உலக எண்ணெய்ச் சந்தையில் 1986 ல் இடம் பெற்ற நிகழ்ச்சிகளும் எண்ணெய் சந்தையின் பல்வேறு அம்சங்களில் அவை உடனடியாக ஏற்படுத்திய தாக்கமும் முன்னொருபோதும் நாம் கண்டறியாதவை என்று கூறுவது மிகைப்படுத்திய கூற்றல்ல. இப்பொழுதெல்லாம் அந்நிகழ்ச்சிகள் எல்லோருக்கும் பரிச்சயமானவையாக ஆகிவிட்டபோதும். உலகின் எண்ணெய் கேள்வி/வழங்கல் சமநிலையையும் உலகப் பொருளாதாரத்தையும் பொறுத்தவரை அவற்றின் நீண்டகால விளைவுகள், மேலும் பல்லாண்டுகளுக்கு பகுப்பாய்வுக்கும் ஊகங்களுக்குமுரிய ஒரு விடயமாக விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

1986 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகள், எண்ணெய் விலைகளின் வேகமான வீழ்ச்சியை மையமாகக் கொண்டிருந்தன. இதன் விளைவாக, வளர்முக எண்ணெய் ஏற்றுமதி நாடுகளுக்குக் கடுமையான பொருளாதாரக் கஷ்டங்களைத் தோற்றுவித்தது; எண்ணெய்க் கம்பெனிகளின் வரவு செலவுத் திட்டங்களில் குறிப்பாக ஆராய்ச்சி, அபிவிருத்திக்கான துறைக்குரிய பண ஒதுக்கீடுகள் கடுமையாகக் குறைக்கப்பட்டன; எண்ணெய்க் கம்பெனிகளுக்கும், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் வளர்முக நாடுகளுக்கும் கடன் வழங்கி எண்ணெய்க் கைத்தொழிலில் பெருமளவு மூலதனத்தை முடக்கியிருந்த உலக வங்கித் தொழிலுக்குத் தாங்கொணாத பிரச்சினைகள் உருவாகின. முக்கிய கொள்கைக் குறிக்கோள்களாகக் குறைந்த எண்ணெய் விலைகளையும், ஒபெக் தாபனத்தின் சாவையும் நீண்டகாலமாகப் பகிரங்கப்படுத்தி வந்த அபிவிருத்தியடைந்த முன்னணி நாடுகள் கூட, எண்ணெய்ச் சந்தையில் தொடர்ந்து ஒழுங்கீனம் நிலவலாம் எனவும் குறைந்த எண்ணெய் விலையின் பாதகமான விளைவுகள் பற்றியும் எச்சரிக்கை செய்யத் தொடங்கின.

எனினும், 1973-74, 1979-80 ஆம் ஆண்டுகளில் மசகு எண்ணெய் விலைகள் மேல்நோக்கிச் செம்மையாக்கப்பட்டபோது நடைபெற்றது போன்று, 1986 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிக்கும் ஒபெக் தாபனமே குற்றஞ்சாட்டப்பட்டது. ஒபெக் பதின்மூன்று வளர்முக நாடுகளின் ஒரு தாபனமாயினும் அதன் கூட்டுத் தேசிய மொத்த உற்பத்தி, யப்பானின் மொத்தத் தேசிய உற்பத்தியின் அரைவாசியை விடக் குறைவானதெனினும், உலகம் எதிர் நோக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒபெக் தாபனத்தின் மீதே குற்றஞ் சாற்றப்படுகிறது. 1970, 1980 தொடர்களில் தொடர்ந்து ஒபெக்கைக் குற்றஞ்சாற்றிவந்த சில கருத்துரையாளர்கள், சந்தை உறுதிப்பாட்டைக் காத்துப் பேணுவதற்கு ஒபெக் தவறிவிட்டதாகவும், 1986 ல் குற்றஞ்சாட்டுவது விசித்திரமானதாகும்.

கவனமாக ஆராய வேண்டிய விடயம், 1985 டிசம்பரில் ஒரு பீப்பாவுக்கு 27 அமெரிக்க டொலராக இருந்த விலை, 1986 யூலையில் 10 டொலரின் அளவுக்கு வீழ்ச்சியுற்றமைக்கு, ஒபெக் திட்டமிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் காரணமாக அமைந்தன என்பதாகும். விலை குறைந்த மசகு எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி உலக எண்ணெய்ச் சந்தையில் தனது பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவாகவே விலை வீழ்ச்சி ஏற்பட்டதென பகுப்பாய்வாளர்களுடன் வெகுசனத் தொடர்புச் சாதனங்களும் விவாதிக்கின்றன.

## சந்தைப் பங்கு இழப்பு

இது சிக்கலான நிகழ்ச்சித் தொடர் ஒன்றுக்குத் தரப்படும் சாதாரண விளக்கமாகும். 1986 ல் ஏற்பட்ட விலை வீழ்ச்சிக்குரிய உண்மையான காரணங்களை விளங்கிக் கொள்வதற்கு, இந் நிகழ்ச்சித் தொடரை நன்கு ஆராய வேண்டும். 1980 ல் ஒபெக் நாளொன்றுக்கு 2 கோடியே 69 இலட்சம் பீப்பாக்களை உற்பத்தி செய்தது. நாளொன்றுக்கு 2 கோடியே 49 இலட்சம் பீப்பாக்களை ஏற்றுமதி செய்தது. அதன் எண்ணெய் ஏற்றுமதி வருமானம் 2820 கோடி டொலர்கள். 1985 ல் இதற்கு நேரொத்த தொகைகள் 1 கோடியே 56 இலட்சம் பீ. 1 கோடியே 32 இலட்சம் பீ. 1320 கோடி டொலர்களாகும். இவ்வைந்தாண்டுகளிலும் நடைபெற்றதென்ன என்பதை இரு தனித்தனிச் சக்திகளுக்கிடையிலான செயற்பாடு என விரிந்த அடிப்படையில் வர்ணிக்கலாம். முதலாவது, 1980 ல் 3 கோடியே 75 இலட்சம் பீ. வாக இருந்த கைத்தொழில் நாடுகளின் தேவை 1985 ல் 3 கோடியே 31 இலட்சம் பீ. யாகப் பொதுவாகக் குறைந்தது. இதற்குக் காரணம், கொள்கை அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட மாற்றுப் பொருள், சேகரித்துப் பாதுகாத்தல் என்பவற்றோடு, எரிபொருள் குறைவாகத் தேவைப்படும் சேவைகள் துறையை நோக்கி உற்பத்தி அமைப்பை மாற்றியதனால் மெதுவாக ஏற்பட்ட தாக்கம் என்பனவாகும். இரண்டாவது காரணி, அதே எல்லையில் சோசலிச நாடுகளின் ஏற்றுமதியுட்பட, ஒபெக்கைச் சாராத நாடுகளின் எண்ணெய் உற்பத்தி 2 கோடியே 20 இலட்சம் பீப்பாக்களிலிருந்து 2 கோடியே 53 இலட்சம் பீப்பாக்களாக அதிகரித்தமையாகும்.

இவ்விரு சக்திகளதும் தாக்கத்தால் ஏற்பட்ட தவிர்க்க முடி

யாத விளைவு ஒபெக் எண்ணெய்க்கான தேவை கடுமையாகக் குறைந்தமையாகும். உலகின் எண்ணெய்த்தேவை குறைந்து, ஒபெக் அல்லாத நாடுகளின் எண்ணெய்க்கான தேவை அதிகரித்த பின்னணியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, உலக எண்ணெய் உற்பத்தியில் ஒபெக்கின் பங்கினைக் குறைத்தது. அது 1980ல் இருந்த 59.4 சதவீதத்திலிருந்து 1985ல் 40.4 சதவீதமாகக் குறைந்தது.

இக்கால கட்டம் முழுவதிலும் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பது எவ்வாறு என்பது குறித்து தெளிவான இரு மனப்பாங்குகள் நிலவின. சந்தைத் துறையில் தலைமை நிலையிலுள்ள ஒபெக் போன்ற ஒரு தாபனம், தனது தலைமையை இழக்குமளவுக்கு தனது சந்தைப்பங்கு வீழ்ச்சியடைவதை அனுமதிக்க முடியாது என்பது பொதுவாக் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதேவேளையில், வசதியானதொரு விலை மட்டத்தை ஊக்குவிப்பதன் மூலம், ஒபெக் அதனைச் சாராத நாடுகளின் உற்பத்தி பெருகுவதற்கு அனுமதிக்கிறது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

பாடநூல் பாடங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து இதற்கான தீர்வு சுலபமானதாகும். ஏனைய நாடுகளின் உற்பத்தியை பொருளாதார ரீதியில் உருப்படியற்றதாகச் செய்யுமளவுக்கு விலைகளின் மட்டத்தைத் தாழ்த்தி அந்நாடுகளைச் சந்தையிலிருந்து ஒதுக்கிவிடுவதே அத்தீர்வாகும். ஆனால், ஒபெக் என்பது விலைகளை உயர் மட்டத்தில் வைப்பதற்கானதொரு வணிகக் கூட்டணியன்று. நான் ஏற்கெனவே கூறியது போன்று அது, 13 நாடுகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும். 1960ல் இருந்து இவ்வமைப்பின் நடத்தையானது, உலகளாவிய ரீதியில் ஒரு நாட்டில் மற்றொன்று தங்கியிருக்கும் நிலையினையும் மூன்றும் உலக நாடுகளின் அபிலாசைகளை ஊக்குவிப்பதற்கும் அந்நாடுகளது மக்களின் தேவைகளை நன்குணர்ந்து செயல்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

பிற நாடுகளின் பங்களிப்பு

இதன் விளைவாக, ஒபெக் சாராத பல எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் பல கூட்டங்களை நடாத்தி, எண்ணெய்ச் சந்தையின் உறுதிப்பாட்டை ஒபெக் தனித்து நின்று காக்க முடியாது என்பதை மிக்க அக்கறையோடு விளக்கி, அத்தகைய உறுதிப்பாட்டினால் பயன் பெறும் ஒவ்வொருவரும், சந்தையில் ஒழுங்கை நிலைநாட்டுதற்கான பொறுப்பில் தம்பங்கை ஏற்க வேண்டுமென வலியுறுத்தியது. உற்பத்திச் செலவு கூடிய நாடுகளின் உற்பத்தி பெருக அனுமதிக்கும் பொருட்டு, உலகிலேயே சராசரி உற்பத்திச் செலவு குறைவான ஒபெக் நாடுகள் தம் உற்பத்தி அளவைத் தொடர்ந்து குறைத்துக் கொண்டிருப்பது தர்க்கவாதத்திற்கு முரண்பட்டதாகும். அதேவேளையில் வளர்முக நாடுகளும் உலகின் மிகப்பெரிய கடனாளி நாடுகளுமான ஒபெக் நாடுகள், ஏனைய உற்பத்தியாளர்களின் நன்மைக்காகத் தியாகத்துக்கு மேல் தியாகம் செய்து கொண்டிருப்பதும் தர்க்க ரீதியானதல்ல.

துரதிர்ஷ்டவசமாக இப்பரிந்துரைகளும் எச்சரிக்கைகளும் கவனிக்கப்படாமலேயே போய்விட்டன. போதாக்குறைக்கு, ஒபெக் சாராத பல ஏற்றுமதியாளர்கள், சந்தை நோக்குடைய விலையிடல் முறையைக் கைக்கொண்டனர். இதனால், குறைந்த பட்சம் தம் பாரம்பரிய சந்தைகளைப் பேணுவதற்கேனும் ஒபெக் உறுப்பினர்களும் இம்முறையைக் கையாள நிர்ப்பந்திக்கப்பட்டனர். விலைகளைக் காப்பாற்றுவதற்கான ஒபெக்கின் ஆற்றலைப் பொறுத்தவரை இதுவே மிக்க ஆபத்தான நிகழ்வாகும். சந்தை தொடர்பான விலையிடல் சூத்திரங்கள் பரவியமை, விரைவிலேயே அதிகார பூர்வமான விலைகளை உருவாக்கி, செயல்படுத்திக் காத்திடும் கொள்கைக்கு முற்றுப் புள்ளியிட்டது. எவ்வாறாயினும், சந்தை நோக்குடைய விலைகள் காரணமாக ஏற்றுமதி நாடுகளுக்கு ஒரு பீப்பாவுக்குக் கிடைக்கும் வருமானம் தொடர்ந்து வீழ்ச்சியுறுவதைக் குறித்தமையாலும் குறைவான அளவில் ஏற்றுமதி செய்வதால் கணிசமான நிதி இடர்ப்பாடுகள் ஏற்படுவதனாலும், ஏற்றுமதி வருமானம் மேலும் குறைவதைத் தடுக்கும் பொருட்டு உறுப்பு நாடுகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டன. இவ்வருமானத்திலேயே அந்நாடுகளின் பொருளாதாரமும் அரசாங்க வரவு செலவுத் திட்டங்களும் பெருமளவில் தங்கியுள்ளன.

''சந்தைச் சக்திகளும்'' குழப்பமும்

இம்முயற்சிகளை, ஒரு விலைப் போருக்கு சமமானவை எனக் கொள்ளமுடியாது என்பது எனது கருத்து. வேதனை நிரம்பிய இவ்வனுபவமானது, எண்ணெயைப் பொறுத்தவரை, "சந்தைச் சக்திகள்'' எனப்படுபவை, வழங்கல்/தேவை அடிப்படையாகக் கொண்டவையல்ல, மாறாக ஊகம், பட்டியல் முகாமையின் மூலம் வழங்கல்/தேவை சமநிலையை படிப்படியாகத் துண்டாடல், முக்கிய நாணயங்களின் மதிப்பு ஏற்ற இறக்கத்தினால் ஏற்படும் உறுதியற்ற நிலை என்பவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டின. எனவே சுருங்கச் சொல்லுமிடத்து குழப்பம் மேலும் குழப்பத்தையும் ஒழுங்கீனம் மேலும் ஒழுங்கீனத்தையும் தோற்றுவிக்கின்றன என்பதை 1986 ஆம் ஆண்டு தெளிவுறக் காட்டியுள்ளது.

இரு பரிமாணங்கள்

நிலையான விலையீடு என்பது 1960 ஆம் ஆண்டு ஒபெக் தாப

னம் தொடங்கப்பட்டது முதற் கொண்டு அதன் கொள்கையின் மையமாக இருந்து வந்துள்ளது. நிலையான விலைகளின்றி உலக எண்ணெய், எரிபொருள் சந்தையில் உறுதிப்பாடு இருக்க முடியாது; ஏற்றுமதி நாடுகள் தம் தேசியப் பொருளாதாரங்களின் சமநிலையான வளர்ச்சிக்குரிய வழிவகையினை இழந்துவிடும்; நுகர்வோர் குறுந்தவணை விலை ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாக நேரிடும்; மொத்தத்தில் உலகப் பொருளாதாரம் பெருஞ்சீர்குலைவுக்கு இரையாகக் கூடும்.

ஆனால், நிலையான விலை பற்றிய கருத்துக்கு இரு பரிமாணங்களுண்டு. முதலாவது உற்பத்தியாளர்கள் அத்தகைய விலைகளைச் செயற்படுத்தவும் காக்கவும் அவர்களுக்கு வழிவகைகள் வேண்டும். வேறுவகையிற் சொன்னால் எண்ணெய் விலைகளை ஒன்றில்லாவிடின் மற்றொரு மட்டத்தில் குறித்துவிடுவதல்ல; அவற்றைச் சந்தையில் யதார்த்தப்படுத்துவதற்கான வழிவகைகளும் இருக்க வேண்டும். இதற்கு, வழங்கலுக்கும் தேவைக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துவதற்குரிய ஆற்றலும் அத்தகைய சமநிலையைக் கெடுப்பதற்கு முயலும் எல்லாச் சக்திகளையும் சமாளிக்கும் திறமையும் இருத்தல் வேண்டும்.

இரண்டாவது பரிமாணமாவது, உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். எந்த விலைமட்டமும் நிரந்தரமானதென்றோ நித்தியமானது என்றோ கருதப்படக் கூடாது. எண்ணெயைப் பொறுத்த மட்டில் இது மிக மிக முக்கியமானதாகும். இதற்குக் காரணம் ஏற்றுமதி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு எண்ணெய் வருமானம் முக்கியமானது என்பது மட்டுமல்ல; எண்ணெய் விலையின் நீண்டகாலப் பூரிணமத்தில் இவ்வளம் வற்றுமல் ஊறிக்கொண்டிருக்கக் கூடியதல்ல என்ற உண்மையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதுமாகும். இது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் முக்கியமானதாகும். முன்னையவர்களுக்கு, எண்ணெய் வளம் குறையும் காலத்திற்கான நியாயமான நட்டஈட்டை வழங்குகிறது. பின்னையோருக்கு, எண்ணெயில்லாத காலகட்டத்தில் சங்கடமின்றி வேறு பொருளுக்கு மாறுவதற்கான வாய்ப்பினை அளிக்கிறது. இவ் விடயங்கள் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் நோக்கில் மிக முக்கியமானவையாகும்.

## டொலர் வீழ்ச்சியின் விளைவு

நிலையான விலையீட்டிற்குத் திரும்புவதில் ஒபெக் தாபனத்தின் வெற்றியும், ஒபெக் சாராத பெரும்பான்மை ஏற்றுமதி நாடுகளின் பாராட்டத்தக்க ஒத்துழைப்பும் இலேசாகப் பேணத் தக்கவையல்ல. மசகு எண்ணெய் விலைகள் குறிக்கப்படும் அமெரிக்க டொலரின் சமீபகால வீழ்ச்சியைப் போன்ற நிகழ்ச்சிகளின் தாக்கங்களைக் குறைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளின்றி மேற் கூறியவற்றைப் பேணிக்காப்பது கடினமாகும். இவ்வீழ்ச்சி காரணமாக உலகின் எண்ணெய்க் கொள்வனவு சக்தி குறைந்ததனால் ஏற்றுமதி நாடுகளின் ஏற்றுமதி வருமானம் பெருமளவில் இழக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் 0.70 அமெரிக்க டொலருக்கிருந்த கொள்வனவுச் சக்தி இன்று ஒரு டொலருக்கு இல்லை. அதாவது இப்பொழுது நடைமுறையிலுள்ள ஒரு பீப்பா எண்ணெய்க்கான 18 டொலர் விலை 1985 விலைகளோடு ஒப்பிடுகையில் 12 டொலருக்கு மேல் பெறுமதியானதல்ல. எனவே, ஏனைய எண்ணெய் ஏற்றுமதியாளர்களின் ஒத்துழைப்புடன் ஒபெக் நிலையான விலையீட்டுக் கொள்கையொன்றைச் செயல்படுத்த இயலுமாயினும் இதனால் ஏற்படும் ஸ்திர நிலையை ஒபெக் தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில சக்திகள் சிதைத்துவிடக் கூடும்.

எண்ணெய் விலை உறுதிப்பாட்டைக் காப்பதற்கு தன்னாலியன்றதைச் செய்வதற்கு ஒபெக் உறுதிபூண்டுள்ளது. இதற்காக ஒரு புதிய உற்பத்தி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்திக் கட்டுப்பாட்டையும் தொடர்ந்து செயற்படுத்த ஒபெக் எண்ணியுள்ளது. இக் கொள்கையோடு ஒபெக் சாராத நாடுகளின் ஒத்துழைப்பும் சேர்ந்து வழங்கல், தேவை நிலைமை சமநிலையான தாக்கப்படும் என நாம் நம்புகிறோம். 1986ன் பெரும் பகுதியில் ஒபெக் உற்பத்தியளவு 1985 ஐ விட அதிகரித்தது. இது சந்தை உறுதிப்பாட்டை அச்சுறுத்துவதாகும். ஆகையால் வழமையான மட்டத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும். 1987 ஆம் ஆண்டுக்கான தேவை மட்டங்களை விட மிகக் குறைந்த ஒரு மட்டத்தில் உற்பத்தியை வைத்துக் கொண்டால், அத்துடன் ஒபெக் சாரா நாடுகளும் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினால் பட்டியல்கள் குறைத்துவிடும் என எதிர்பார்க்கலாம்.

## சந்தைப் பங்கு பங்கீடு

தற்போதைய விலைமட்டத்தில் சில காலத்திற்கு உறுதிப்பாடு ஏற்படுமாயின் அது உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் ஒன்றுபோல நன்மை பயக்கும். எண்ணெய்ச் சந்தைப்பங்கு கூடிய ஏற்றத்தாழ்வின்றி விநியோகிக்கப்பட்டாலன்றி நீண்டகாலத்துக்கு உறுதிப்பாட்டைப் பேண முடியாது. ஒபெக் நாடுகளில் உலகின் எண்ணெய் வளத்தில் 67 சதவீதம் உண்டு. அவற்றின் உற்பத்தித்திறனில் அரைவாசியே இப்பொழுது பயன்படுத்தப்படுகிறது. 1986ன் நிலை மீண்டும் தோன்றுவதால் உற்பத்தியாளரோ நுகர்வோரோ பயனடையப் போவதில்லை. அத்தகைய நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு இரு சாராரும் ஒத்துழைக்க வேண்டும்.

## மசகு எண்ணெய்ப் பிரச்சினை

பாரசீகக் குடாவையடுத்துள்ள நாடுகளுக்கிடையிலான சண்டையும் அமெரிக்கப் பொருளாதார அபிவிருத்தியும் சேர்ந்து இவ்வாண்டு எண்ணெய்ச் சந்தையைச் சீர்படுத்த உதவலாம். ஆனால், அடிநிலையான யதார்த்தம் யாதெனில் நுகரப்படுவதை விடக் கூடுதலாக எண்ணெய் உற்பத்தி செய்யத்தக்க திறன் உலகுக்குண்டு என்பதாகும். விலைகள் வீழ்ச்சியடைவதற்கான சாத்தியக்கூறுகளுண்டு. ஒரு பீப்பாவின் விலை 20 டொலரிலிருந்து 15 டொலராகக் குறையலாம்.

ஆண்டுத் தொடக்கத்தில் உண்மையான விலைகள், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த விலைகளில் பாதியாக இருந்தன. இதனை மாற்றுவதற்கு ஒபெக் தாபனத்துக்கிருந்த ஆற்றல் அழிந்துவிட்டது. காரணம், பிரிட்டன், பிரேஸில் போன்ற நாடுகளில் உற்பத்தி அதிகரித்திருப்பதும், 1970 தொடரின் விலையேற்றங்களுக்குப் பிறகு எரிபொருளுக்கான தேவையை எண்ணெயல்லாத வேறுவழிகளில் நிறைவேற்றக் கூடியதாக இருப்பதுமாகும். ஒரு பீப்பாவுக்கு 18 டொலர் என்ற விலையைக் காப்பதற்காக ஒபெக் தாபனம் அதன் உறுப்பினருக்குத் தொடர்ந்து கோட்டாக்களை வழங்கி வருகிறது. ஆனால், இது பெயரளவிலான ஒரு நடவடிக்கையேயன்றி வேறல்ல; பணவீக்கம், டொலரின் வீழ்ச்சி ஆகிய காரணங்களால் தொடர்ந்து விலைகள் வீழ்ச்சியடைகின்றன.

பாரசீகக் குடாவினூடாக எண்ணெய் கொண்டு செல்வது ஈரான் - ஈராக் யுத்தத்தினால் தடுக்கப்படாவிட்டால் நிலைமை முற்றிலும் வேறுவிதமாக அமையும். தினமும் ஹொர்மஸ் நீரிணையினூடாக 80 இலட்சம் பீப்பா எண்ணெய் சென்று கொண்டிருக்கிறது. இது மூடப்பட்டால் குவைத், சவூதி அரேபியா, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளின் ஏற்றுமதி குறைந்துவிடும். ஒபெக்கைப் பொறுத்தவரை சமாதானமும் ஆபத்தானது. யுத்தம் முடிவடைந்து விட்டால், சம்பந்தப்பட்ட நாடுகள் மீண்டும் உற்பத்தியைத் தொடங்குவதோடு குழாய் வசதிகளும் கிடைக்கும். யுத்தம் தொடங்குவதற்கு முந்திய முழு வருடத்தில் ஈரான் ஆண்டொன்றுக்கு 30 இலட்சம் பீப்பா எண்ணெயும், ஈராக் 35 இலட்சம் பீப்பாக்களும் உற்பத்தி செய்தன. அதற்கு முன்னர், ஈரான் 50 இலட்சம் பீப்பா உற்பத்தி செய்தது. அண்மைய எதிர்காலத்தில் அவ்வளவு பெருந்தொகையான உற்பத்தி இடம் பெறுவிடினும் யுத்தம் முடிவடைந்து விட்டால் ஈராக் 20 இலட்சம் பீப்பாவும் ஈரான் 25 இலட்சமும் உற்பத்தி செய்யும். பின்னர் இரு நாடுகளும் தமக்குக் கூடிய கோட்டா பங்கு வேண்டுமெனக் கேட்கும். இதனால் ஏனைய உறுப்பினர்களின் பங்கைக் குறைக்க அல்லது விலைகள் வீழ்ச்சி அடைவதைப் பார்த்துக் கொண்டிருக்க ஒபெக் நிர்ப்பந்திக்கப்படும்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் எண்ணெய்த் தேவை படிப்படியாக அதிகரித்து வருகிறது. வாகனச் சொந்தக்காரர் முதல் கைத்தொழில் அதிபர்கள் வரையான நுகர்வோர், எண்ணெய் விலை வீழ்ந்ததனாலும், 1980 தொடரின் மந்த நிலை நீங்கிப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருப்பதனாலும் எண்ணெய் உபயோகிப்பதை அதிகரித்துள்ளனர். அமெரிக்காவின் எண்ணெய்த் தேவை சென்ற இரண்டு ஆண்டுகளில் 10 இலட்சம் பீப்பாக்களால் 16½ இலட்சம் பீபபாக்களாக அதிகரித்துள்ளது. ஆனால் இவ்வளர்ச்சியின் அடித்தளம் உறுதியற்றது. விசேடமாக அமெரிக்காவுக்கு இந்நிலை பொருந்தும். சமஷ்டி வரவு செலவுத்திட்டத்தின் பற்றுக்குறைகளும், வர்த்தக நிலுவையும் அமெரிக்கப் பொருளாதாரத்தில் மேகங்களாகப் படர்ந்திருக்கின்றன. நாணய உறுதிப்பாடின்மை, அக்டோபர் வீழ்ச்சி ஆகியவை எங்கும் பரவியுள்ள பொருளாதார உறுதிப்பாடின்மையின் அறிகுறிகளாகும்.

இனி ஒரு மந்தநிலை தோன்றக் கூடும். அந்நிலை ஏற்படுவதை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடியும் வரை அரசியல்வாதிகள் தாமதப்படுத்தலாம். ஆனால், அது நிலைமையைக் கடுமையாக்கவே உதவும். இம்மந்த நிலை முழு உலகத்தினதும் பொருளாதார நிலையைப் பாதிக்கும். எண்ணெய்த் தேவை 40 இலட்சம் பீப்பாவாகக் குறையலாம். 1980 தொடரில் ஏற்பட்ட மந்த நிலையின்போது அமெரிக்காவில் மட்டும் எண்ணெய்த் தேவை 18 மாதங்களுக்குக் குறைந்த காலத்தில் 20 இலட்சம் பீப்பாக்களால் வீழ்ச்சியுற்றது.

பிற முனைகளில் 1988 ல் ஈரானிலிருந்தும் ஈராக்கிலிருந்தும் குடாவுக்கு அப்பாலுள்ள துறைமுகங்களுக்கு எண்ணெய் அனுப்புவதற்கான குழாயமைப்பு விரிவாக்கப்படும். யுத்தம் இப்பொழுதைப் போல்வே தொடர்ந்து நடைபெற்றாலும் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்கும்.

சீனாவில் துரிதப் பொருளாதார வளர்ச்சி காரணமாக எண்ணெய்த்தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், நைஜீரியாவிலும் மெக்சிக்கோவிலும் வேறு பல ஏற்றுமதி நாடுகளிலும், வருமான வீழ்ச்சி தோற்றுவித்துள்ள பொருளாதாரப் பிரச்சினைகள், எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நீர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன. ரஷ்ய காஸ் ஏற்றுமதியின் விளைவாக ஐரோப்பாவில் வழங்கல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. நிலக்கரிக்குப் பதிலான ஒரு நீள்தவணை மாற்றுவழியாக சக்திக் கம்பனிகள் காஸை நோக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

— ஜேம்ஸ் செல்ஸ்

நன்றி: த ஸவுத்

# கைத்தொழில்களைப் பெருக்குதலும் வெளிநாட்டு வர்த்தகமும்

## கைத்தொழில்களைப் பெருக்குவதற்கும் வர்த்தகத்துக்கும் பொருளாதார செயற்பாட்டுக்கும் இடையேயுள்ள உறவு என்ன?

சரத் ராஜபத்திரன

முன்பு இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றியவரும் இப்பொழுது உலக வங்கியின் பொருளியல் – ஆராய்ச்சிப் பிரிவின் உபதலைவருடைய அலுவலகத்திலுள்ள கொள்கை ஆய்வுப் பகுதியின் தலைவராக உள்ள சரத் ராஜபத்திரன கைத்தொழில்களைப் பெருக்குவதற்கும் வெளிநாட்டு வர்த்தகத்துக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவிலிருக்கும் மிகமுக்கிய பிரச்சினைகளையும், வளர்முக நாடுகளில் வெவ்வேறு வர்த்தக உபாயங்கள், கைத்தொழில்களைப் பெருக்கும் முயற்சிகள் மீதும் பொருளாதார செயற்பாட்டின் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தையும் இங்கு ஆராய்கிறார். இந்த ஆராய்ச்சிக் கட்டுரை வங்கியின் ''1987ம் வருட உலக அபிவிருத்தி அறிக்கையை'' அடிப்படையாகக் கொண்டது. இது ராஜபத்திரனவின் தலைமையில் பொருளியலாளர்களின் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டதாகும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து வந்த முதலாவது தசாப்தத்தில், பொருளியலாளர்கள் துரிதமான பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் கைத்தொழில்களைப் பெருக்குதல் ஓர் அத்தியாவசியக் கட்டமெனக் கருதினர். ஆனால், உண்மையான பிரச்சினை, ஒரு பொருளாதாரத்தை எவ்வளவு துரிதமாகக் கைத்தொழில் மயமாக்க முடியும் என்பதல்ல; உறுதியான வளர்ச்சிக்கு ஆதரவாக, அதன் கைத்தொழில் துறையை எவ்வாறு அமைக்க முடியும் என்பதேயாகும். இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதெனில், பயனுறுதியுள்ள கைத்தொழில் பெருக்கத்தைச் சாதிப்பதற்கான வழிகளைத் தேடிக் காண்பதே அவர்களுடைய நோக்கம்.

திறமையான கைத்தொழில் பெருக்கத்தைத் தேடும் முயற்சி வெளிநாட்டு வர்த்தகத்துடன் நேரடித் தொடர்புள்ளதாகும். வெளிநாட்டு வர்த்தகம் உள்நாட்டு உற்பத்தியை வெளிநாட்டுப் போட்டிக்கு உட்படுத்துவதன் மூலமும், நிறுதிட்டமான பொருளாதாரங்களை அடைய விரிவான சந்தைக்குப் போகும் வழிகளை வழங்குவதன் மூலமும் இலாபங்களைப்பெற நாடுகளை அனுமதிக்கின்றது. தேசிய மட்டத்தில், வர்த்தகம், கைத்தொழிலுக்கும் மற்றும் துறைகளுக்குமிடையேயும், கைத்தொழிலின் வெவ்வேறு கிளைகளுக்கிடையேயும், அதிக அளவில் கூட உற்பத்தியின் வெவ்வேறு கட்டங்களுக்கு இடையேயும் ஏதாவதொன்றில் தீவிரமாக ஈடுபட நாடுகளை அனுமதித்துள்ளது. மிக முக்கியமான உள்ளீடுகளை உற்பத்தி செய்யும் சக்தியற்ற நாடுகளுக்குத் தொழில் நுட்பவியல் உட்பட அவ்வுள்ளீடுகளை வர்த்தகம் வழங்கியுள்ளது. முறையே புதிய தொழில் நுட்ப முறைகளின் தோற்றம் சிறப்புத் தேர்ச்சி பெறும் முறையை உருவாக்கியுள்ளது. எனவே வர்த்தக முறையும் உருவாக்கப்பட்டுள்ளது. வர்த்தகத்தினால் ஏற்றுமதிகளுக்கான விரிவடைந்த கோரிக்கையும் தோன்றியுள்ளது. ஏற்றுமதிகளே தொழில் நுட்ப அபிவிருத்தியைத் தூண்ட முடியும். இவ்விதமாக, கைத்தொழில் பெருக்கத்துக்கான வழி சுமுகமாக்கப்படுகிறது.

1987ம் வருட உலக அபிவிருத்தி அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆராய்ச்சிக் கட்டுரை கைத்தொழில் பெருக்கத்துக்கும் வெளிநாட்டு வர்த்தகத்துக்குமிடையேயுள்ள மூன்று முக்கிய பிரச்சினைகளை ஆராய்கின்றது. அம் மூன்றும் வருமாறு:

★ கைத்தொழில் பெருக்கத்தின் வேகத்தையும் பயனுறுதியையும் குறிப்பாக, அம்முறையில் அரசாங்கத்தின் பங்காற்றலை நிர்ணயிக்கும் காரணிகள்;

★ வளர்முக நாடுகளில் வெவ்வேறு வர்த்தக உபாயங்கள் கைத்தொழில் பெருக்கத்தின் மீதும் பொருளாதார செயற்பாட்டின் மீதும் ஏற்படுத்தும் தாக்கம்;

★ வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தங்களிலிருந்து கற்கும் பாடங்கள்.

### கைத்தொழில் பெருக்கத்தில் உள்ள காரணிகள்

கைத்தொழில் பெருக்கத்துக்கு எந்தத் தனியொரு பாதையும் இருந்திருக்கவில்லை. அதில் தொழில் நுட்பவியல், சிறப்புத் தேர்ச்சி, வர்த்தகம் ஆகியவற்றின் பரஸ்பர செயற்பாடு சம்பந்தப்படுகிறது. இது பொருளாதாரங்களின் அமைப்புக்குள் மாற்றங்களை உண்டாக்குவதுடன், அதிக முதலீடுகளுக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் அடிகோலுகிறது. இந் நிகழ்வுப் போக்கின் இதய பாகத்தில், கைத்தொழில் பெருக்கத்தின் வேகம், பயனுறுதி ஆகிய இரண்

டையும் உருவாக்குவதில் அரசாங்கத்தின் பங்காற்றல் இருந்து வந்துள்ளது. கைத்தொழில் பெருக்கத்தின் வரலாற்றைப் பரந்த கோணத்திலிருந்து நோக்குமிடத்து, இந் நிகழ்வுப் போக்கை உருவாக்கியுள்ள ஐந்து காரணிகள் வெளிப்படுகின்றன.

ஆரம்ப நிலைமைகள் - பெரிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டுள்ள ஒரு நாடு நிறுதிட்டமான பொருளாதாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கைத்தொழில் இயந்திரசாலைகளை அமைக்க நல்ல நிலையில் உள்ளது. பல சந்தர்ப்பங்களில் நாடுகளுக்கிடையேயுள்ள தூரம் உள்நாட்டுக் கம்பெனிகளுக்கு இயற்கையான பாதுகாப்பு அளிப்பதால், மற்றவையெல்லாம் சமமாயிருப்பின், பரப்பு சனத்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் பெரிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டுள்ள ஒரு நாடு சிறிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டுள்ள நாட்டைவிட கைத்தொழில்களைப் பெருக்கும் முயற்சியை ஆரம்பிக்க முடியும். ஆனல் கைத்தொழில்களைப் பெருக்குவதற்குத் தேவையான காரணி பரிமாணம் மட்டுமல்ல. ஜப்பானும் பிரிட்டனும் இதை எடுத்துக்காட்டியுள்ளன. இயற்கை வளங்களின் வரப்பிரசாதம் வெளிநாட்டுத் தொழில் நுட்ப முறைகளை இறக்குமதி செய்ய ஒரு நாட்டுக்குப் போதிய நிதி வசதிகளை வழங்கலாம். அத்துடன், அதன் உயர் வருமான மட்டம் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களுக்கான பெரிய உள்நாட்டுச் சந்தையொன்றையும் ஆதரிக்கலாம்.

**உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள்**

பிரதானமாக விவசாயத்தையும் வியாபாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திலிருந்து கைத்தொழில் பொருளாதாரத்துக்கு மாறும் நடவடிக்கைக்கு, ஆரம்ப கட்டங்களிலேனும், தொழிலாளர் படையின் தேர்ச்சித் திறன்களின் அதிகரிப்பு தேவைப்பட்டுள்ளது: பொதுக்கல்விக்கு மேல் அவசியமாகும். ஆனல், இம் மாற்றத்துக்கு விஞ்ஞானத்தின் கரையைக் காணும் உயர் சாதனைகள் தேவையில்லை.

தொழில் நுட்பக்கல்விக்கு வழங்கப்பட்ட அரசாங்க ஆதரவு பிரெஞ்சு, ஜெர்மன் கைத்தொழில் பெருக்க நடவடிக்கைகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தது. பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்க நிதி உதவி வழங்குவதன் மூலம் அமெரிக்கா ஜெர்மன் முறையை மீறிவிட்டது. தனியார் கைத்தொழிலும் ஆய்வு கூடங்களைப் பராமரித்தன. இவை சில சமயங்களில் பொது மக்களின் ஆதரவைப் பெற்றன. ஜப்பானில் இன்று கைத்தொழில் ஆராய்ச்சி பெரும்பாலும் தனியார் கம்பெனிகளுக்குள்ளேயே நடத்துப்படுகிறது. ஆனல், கைத்தொழில்மய முயற்சிகளின் ஆரம்ப காலத்தில் அரசாங்கம் தொழில் நுட்ப மாற்றத்தை ஊக்குவிப்பதற்கு உதவி செய்தது. உதாரணமாக, செய்முறை விளக்கத்துக்கான தொழிற்சாலைகளை அரசாங்கம் நிறுவியது. இத்தொழிற்சாலைகள் பின்னர் தனியார் துறைக்கு விற்கப்பட்டன.

**வாகனப் போக்குவரத்தும் தகவல் போக்குவரத்தும்**

ஒன்றேடொன்று தொடர்புள்ள வாகனப் போக்குவரத்து நிலையங்களும் செய்திப் போக்குவரத்து நிலையங்களும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளை உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைத்தன. இதனல் ஏற்றுமதியாளர்கள் போட்டியிடுவது சுலபமாகியது. ஆனல், ஒன்றேடொன்று தொடர்புள்ள வாகனப் போக்குவரத்து நிலையங்களையும் செய்திப்போக்குவரத்து நிலையங்களையும் அமைப்பதற்கு மிக அதிகமான பணம்தேவை. கைத்தொழில் பெருக்க முயற்சியின் ஆரம்ப கட்டங்களில் இவை அதிக பணச் செலவை உண்டாக்கும். இவை அரசாங்கத்தின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவைக் கோருகின்றன.

ஓர் உறுதிவாய்ந்த நிறுவன முறையிலான பேரண்டப் பொருளாதார சூழல் - சந்தைகள் திறமையாக இயங்குவதற்கு அனுமதிக்கும் சட்டங்களும் நிறுவனங்களும் - சொத்துரிமைகள், நியமமாக்கிய நிறைகளும் அளவைகளும், ஆக்க உரிமைச் சட்டங்கள் ஆகிய இவையாவும் கைத்தொழில் பெருக்க முயற்சிகள் வேகமாகவும் திறமையாகவும் நடைபெறுவதற்கு ஊக்கமளிக்க உதவியுள்ளன. இத்தகைய சட்டங்களும் நிறுவனங்களும் நெடுங்கால முதலீடுகளையும் ஆபத்து ஏற்றலையும் ஊக்குவிக்க உதவுகின்றன. எனினும், நிறுவனங்களில் புதுமையான மாற்றங்கள் செய்யப்படுவதை அனுமதிக்க அவை போதிய அளவு வளைந்து கொடுக்கக் கூடியனவாக இருக்க வேண்டும்.

கைத்தொழில்களைப் பெருக்கும் முயற்சிக்கு, குறிப்பாக அதன் ஆரம்ப கட்டங்களில், இயந்திரங்களிலும் உள்ளமைப்புகளிலும் பெரும் முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும், உற்பத்தியில் தொழில் நுட்பப் புதுமைகள் ஒன்றிணைக்கப்பட்ட மிக முக்கியமான வழிகளில் ஒன்று, புதிய இயந்திரங்களில் முதலீடு செய்வதாகவே இருந்து வந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில் பின்பற்றப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் முதலீடு செய்வதற்குத் தேவையான உள்நாட்டுச் சேமிப்புகளுக்கும் வெளிநாட்டு நிதிகளுக்கும் ஊக்கமளித்தன.

அரசாங்கத்தின் பங்காற்றல் – கைத்தொழில்களைப் பெருக்

கும் முயற்சியின் பாதையில் சந்தைகளும் அரசாங்கமும் ஒன்றையொன்று நிறைவு செய்து கொள்கின்றன. விலை குறிப்பதிலும் முதலீடுகளை அலசி ஆராய்வதிலும் சந்தைகள் வினைத்திறனுடன் செயலாற்றிய போதிலும், அவை குறைக்கு இடம் வைக்காதிருப்பது அபூர்வம். ஒரு திறமையான பெறுபேற்றைப் பெற அரசாங்கம் சில சமயங்களில் தலையிடவேண்டும். முதலாவதாக அரசாங்கங்கள் பௌதிக, நிதி, அறிவுச் சொத்துக்களின் உபயோகம், உடைமை, கைமாற்றுதலின் நிபந்தனைகள் ஆகியவற்றை வரைவிலக்கணஞ் செய்வதற்காக விதிகளை அமைக்கவேண்டும். பொருளாதாரம் என்ன வகையினதாயிருந்த போதிலும், - அது தனியார் முயற்சிகளை ஆதரிப்பதாயிருந்தாலுஞ் சரி அல்லது அது அரசாங்கக் கட்டளைப்படி நடக்கும் பொருளாதாரமாக இருந்தாலுஞ் சரி – இந்த விதிகள் பொருளாதார நடவடிக்கைகளைத் தாக்குவன. இவ்விதிகள் எவ்வளவுக்கெவ்வளவு உறுதியானவையாகவும் நன்கு வரைவிலக்கணஞ் செய்யப்பட்டனவாகவும் நன்கு புரிந்து கொள்ளக் கூடியனவாகவும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு பொருளாதாரம் சுமுகமாக இயங்க முடியும். இந்த விதிகள் தெளிவற்றனவாயிருக்கும் போது, முற் கூற முடியாத வழிகளில் வியாக்கியானஞ் செய்யப்படும் போது, சிக்கல்களை ஏற்படுத்தும் அதிகார வர்க்கத்தினரால் அமுல் செய்யப்படும்போது, கைத்தொழில் நிறுவனத்தின் செலவுகள் அதிகரித்து விடுகின்றன. இதனால் கைத்தொழிலில் விசேட ஈடுபாடு காட்டுவதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஊக்கங் குறைகின்றது.

அனுபவம் எடுத்துக் காட்டியிருப்பது போல, கைத்தொழில்களைப் பெருக்கும் முயற்சியை இலகுவாக்குவதற்காகச் சில சேவைகளைப் பிரதானமாக அரசாங்கங்களே தொடர்ந்து வழங்கி வரவேண்டும்.

★ சகல அரசாங்கங்களும் கல்வியில் குறிப்பாக எழுத்தறிவிலும் எண்ணறிவிலும் - அடிப்படைத் தேர்ச்சித் திறன்களை வழங்குவதில் முதன்மையான பங்காற்றி வருகின்றன. இத் தேர்ச்சித் திறன்கள் நவீனகால கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் படைக்கு ஜீவாதாரமானவையாகும்.

★ கைத்தொழில், வாகனப் போக்குவரத்து, தகவல் போக்குவரத்து, மின்சாரம் ஆகிய முறைகளின் பௌதிக உள்ளமைப்புகளைப் பெரும்பாலான அரசாங்கங்கள் வழங்குகின்றன.

★ பெரும்பாலான அரசாங்கங்கள் பொருளியல் தகவல்களை வழங்குவதுடன், நிறைகள், அளவைகள், வேலையில் பாதுகாப்பு ஆகியன சம்பந்தமாக நியமங்களை ஏற்படுத்தி அமுல் செய்கின்றன.

★ கைத்தொழில் பொருளாதாரங்களில் உள்ள அரசாங்கங்கள் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளிக்கின்றன.

★ இவ்வேலைகளில் சிலவற்றை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்கள் பல சந்தர்ப்பங்களில் ஸ்தாபிக்கப்படுகின்றன.

அரசாங்கங்கள் தங்களுடைய பொருளாதாரங்களை நடத்துவதில் சற்றே மறைமுகமாகத் தலையிடுவதும் உண்டு. இந்த மறைமுகமான பங்காற்றல் கொள்கைச் சூழலை உண்டாக்குகின்றது. வர்த்தகக் கொள்கை, அரசிறை ஊக்குவிப்புகள், விலைக் கட்டுப்பாடுகள், முதலீட்டு ஒழுங்கு விதிகள், நிதி சார் கொள்கை, பேரண்டப் பொருளியல் கொள்கை ஆகியனவே அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடியனவாயுள்ள பிரதான கருவிகள். நேரடித் தலையீட்டை நியாயப்படுத்த மூலதனச் சந்தை இயங்கத் தவறி விட்ட சந்தர்ப்பங்கள், மற்றும் வெளிக் காரணங்கள் மிகப் பெரும்பாலும் எடுத்துக் காட்டப்படுகின்றன. தொழில் முயற்சியாளர்கள் போதிய பணத்தொகைகளைக் கடன் வாங்க முடியாதபோது அல்லது முதலீடுகள் செய்ய அவர்களை அனுமதிக்கும் சந்தர்ப்பச் செலவுகளில் கடன் வாங்கமுடியாதபோது மூலதனச் சந்தை இயங்கத் தவறிவிடும் சந்தர்ப்பங்கள் எழுகின்றன. ஒரு முதலீட்டின் நன்மையான பயன்களை முதலீட்டாளரே மீண்டும் பெற முடியாதபோது, வெளிக்காரணங்கள் எழுகின்றன. உதாரணமாக புதிய அல்லது பால பருவத்திலுள்ள கைத்தொழில்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆதரித்து வாதாட இரு கருதுகோள்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு விதமான தலையீடுகள் பொருளாதாரத்தின் மீது வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தும்.

உண்மையில், பெரும்பாலான விடயங்களில், பல சந்தர்ப்பங்களில் முக்கியமான பிரச்சினை, தலையிடுவதா என்பதல்ல; எவ்வாறு தலையிடுவது என்பதேயாகும். உதார்ணமாக், பால பருவத்திலுள்ள உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்க, இறக்குமதிகள் மீது கணியக் கட்டுப்பாடுகளை உபயோகிக்கலாம். ஆனால், இக் கட்டுப்பாடுகள் சமூகச் செலவுகளை ஒரு காப்புவரியை விட அதிகமாக உயர்த்திவிடும். ஏனென்றால், அவை உற்பத்திக்குதவாத நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதுடன், உற்பத்தியாளர்கள் கட்டுப்பாடுகளைத் தவிர்க்கவும் அடிகோலலாம். மறுபக்கத்தில், காப்புவரிகள் நுகர்வோருக்கு விலைகளை உயர்த்துகின்றன. பால பருவத்திலுள்ள கைத்தொழிலுக்கு மான்ய உதவிகள் வழங்கி

னால், அது விலைகளை உயர்த்தாமல் அதே உதவியை அளிக்கும். ஆனால், அவை அரசாங்கச் செலவுகளை உயர்த்துவதுடன் வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறைகளையும் அதிகரிக்கின்றன.

### வர்த்தகமும் கைத்தொழிலும் வளர்ச்சியும்

வளர்முக நாடுகளிலுள்ள பொருளியலறிஞர்களும் கொள்கை வகுப்போரும் உள்ளமைப்பை வழங்குவதிலும், சந்தையின் வினைத்திறனை விருத்தி செய்வதிலும், உறுதியான பேரண்டப் பொருளியல் கொள்கைகளைப் பராமரிப்பதிலும் அரசாங்கத்தின் பங்காற்றலை நெடுங்காலமாகவே ஒப்புக்கொண்டுள்ளனர்.

### வெளிப்புறமாகவும் உட்புறமாகவும் வழிப்படுத்தப்படும் கொள்கைகள்

வர்த்தகக் கொள்கைகளை, அவற்றின் தன்மையைப் பொறுத்து, வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் கொள்கைகள் என்றோ அல்லது உட்புறமாக வழிப்படுத்தப்படும் கொள்கைகள் என்றோ குறிப்பிடலாம். வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயம், உள்நாட்டுச் சந்தைக்கான உற்பத்திக்கும் ஏற்றுமதிகளுக்குமிடையே நடுநிலை வகிக்கும் ஊக்குவிப்புகளை வழங்குகின்றது. ஏனென்றால், சர்வதேச வர்த்தகத்துக்குத் திட்டமாக ஊக்கங் குறைக்கப்படுவதில்லை. இந்த அணுகுமுறை, சற்றே வழிதப்பச் செய்யும் விதத்தில் அமைந்திருந்த போதிலும் அடிக்கடி ஏற்றுமதிகளுக்கான ஊக்குவிப்பு எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில், வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயத்தின் இயல்பான தன்மை ஏற்றுமதிகளுக்கு ஆதரவாகப் பாகுபாடு காட்டுவதோ அல்லது இறக்குமதிப் பிரதியீட்டுக்கெதிராகப் பாரபட்சம் காட்டுவதோ அல்ல. மறுபக்கத்தில், உட்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயமானது, உள்நாட்டு உற்பத்திக்கு ஆதர

## சர்வதேச வர்த்தகச் சூழலும் வளர்முக நாடுகளும்

வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தங்களிலிருந்து நாம் கற்கும் பாடங்கள், சில குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் இந்த நிகழ்வுப்போக்கு சமாளிக்கத் தக்கதென எடுத்துக் காட்டும் அதே வேளையில், உலக வர்த்தகச் சூழல் சுதந்திரமாயிருந்தால், வர்த்தகத் தாராளமயத்திலிருந்து நன்மைகளை அதிகரிக்க முடியும். இத்தகைய ஒரு சூழ்நிலை வர்த்தகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வளர்முக நாடுகளுக்கு அரசியல் போட்டித் திறனையும் வழங்கும். ஆனால், சமீப ஆண்டுகளில் காப்பு வரிகளற்ற தடைகளின் உருவத்தில் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகள் மீண்டும் கைக்கொள்ளப்பட்டன. காப்பு வரிகளற்ற பல்வேறு கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட வட அமெரிக்காவினதும் ஐரோப்பிய சமூகத்தினதும் இறக்குமதிகளின் விகிதம் 1981 ம் ஆண்டிலிருந்து 1986 ம் ஆண்டுவரை 20 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் இறக்குமதிகளின் பெருத்த கன அளவுகளை உள்ளடக்குவதுடன் குறிப்பாக வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளையும் பாதிக்கின்றன. உடுதுணிகள், பாதணிகள் மீது விதிக்கப்பட்ட காப்பு வரிகளற்ற தடைகள் துவாரங்களுள்ளவையென நிரூபணமாகிவிட்டது. இதனால், இந்தத் தடைகளிலுள்ள ஓட்டைகள் அடைக்கப்பட்டுவரும் அதே சமயத்தில் சில வளர்முக நாடுகளால் கைத்தொழில் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுக்குத் தங்களுடைய ஏற்றுமதிகளை அதிகரிக்க முடிந்தது.

### கைத்தொழில் நாடுகளில் பாதுகாப்பின் செலவுகள்

பாதுகாப்பின் செலவுகளை அளவிட பல வழிகளுள்ளன. முகாமையாளர் வினைத்திறன், புதிய தொழில் நுட்ப முறைகளைப் பெறல், நிறுதிட்டப் பொருளாதாரங்கள், சேமிப்புகள், முதலீடுகள் ஆகியவற்றின் மீது போட்டியைக் கட்டுப்படுத்துவதன் எதிர்மறையான விளைவுகளின் காரணமாக, இம் முறைகள் பொதுவாகச் செலவுகளைக் குறைத்து மதிப்பிடுகின்றன.

** நுகர்வோருக்கு ஏற்படும் செலவுகள்:- அமெரிக்காவில் உடுதுணிகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பினால் 1984 ம் ஆண்டில் அமெரிக்க கம்பெனிகளுக்கு 805 கோடி டொலருக்கும் 1800 கோடி டொலருக்குமிடைப்பட்ட செலவும், உருக்குக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பினால் 703 கோடி டொலருக்கும் 2000, கோடி டொலருக்கும் இடைப்பட்ட செலவும், கார்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பினால் சுமார் 101 கோடி டொலர் செலவும் ஏற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது.

** சேம நலச்செலவுகள் - இந்தக் கருதுகோள் பொருள்களில் அதிகமானவற்றை இறக்குமதி செய்வதை விட உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதனால் முழுப்பொருளாதாரத்துக்கும் ஏற்படும் மேலதிகச் செலவை உள்ளடக்குகிறது. வழமையாக சேமநலச் செலவு- குறிப்பாகக் காப்புவரிகள் அல்லது கோட்டாக்கள் சம்பந்தமாக நுகர்வோர் செலவை விட பெருமளவு குறைவாகும். அப்படியிருந்தபோதிலும், நெய்த துணிகள், உடுதுணிகள் ஆகியன சம்பந்தமான மதிப்பீடுகள் ஐரோப்பிய சமூகத்திலும் அமெரிக்காவிலும் 104 கோடி டொலரிலிருந்து 606 கோடி டொலர் வரையும் செல்கின்றன; உருக்கு சம்பந்தமாக அமெரிக்காவில் சுமார் 200 கோடி டொலராயிருக்கிறது.

** ஒரு வேலையைப் பேணிக்காப்பதன் செலவு - ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட வேலையும் அடிக்கடி நுகர்வோருக்கு ஊழியரின் சம்பளத்துக்கு மேற்பட்ட செலவை உண்டாக்குவதில் போய் முடிகின்றது. உதாரணமாக, பிரிட்டனிலுள்ள கார்க் கைத்தொழிலில் பேணிக்காக்கப்படும் ஒவ்வொரு வேலையும் நுகர்வோருக்கு ஆண்டொன்றுக்கு 19,000 டொலருக்கும் 48,000 டொலருக்கும் இடைப்பட்ட செலவை உண்டாக்கியதாக மதிப்பிடப்படுகிறது. அமெரிக்காவில் இச்செலவு ஆண்டொன்றுக்கு 40,000 டொலருக்கும் 1,08,500 டொலருக்குமிடையே இருந்தது. இன்னொரு விதமாக நோக்கினால், பிரிட்டனில் கார் உற்பத்திக் கைத்தொழிலில் ஓர் ஊழியரைப் பேணிக்காப்பதனால் நுகர்வோருக்கு ஏற்படும் செலவு பிற நாடுகளில் சராசரிக் கைத்தொழில் சம்பளம் பெறும் நான்கு ஊழியருக்குச் சமமாயிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள கார்க் கைத்தொழிலில் இந்தச் சமச் செலவு ஆறு சாதாரண கைத்தொழில் ஊழியர்கள் பெறும் சம்பளமாயிருக்கும். வெளிநாட்டு உருக்கு உற்பத்தியாளர்கள் தாங்களாகவே வலிய விதித்துக் கொள்ளும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளால் ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட வேலைக்கும் அமெரிக்க நுகர்வோருக்கு 1,14,000 டொலர் செலவு ஏற்படுகிறது.

### வளர்முக நாடுகளுக்கு ஏற்படும் செலவுகள்

வளர்முக நாடுகள் தங்கள் சொந்த அதிக பாதுகாப்புள்ள கொள்கைச் சூழல்களிலிருந்து ஏற்படும் கனத்த செலவுகளைத் தாங்குகின்றன. ஆனால் அவை கைத்தொழில் நாடுகளிலுள்ள பாதுகாப்பினால் ஏற்படும் செலவுகளாலும் கஷ்டப்படுகின்றன.

பின்னதைப்பற்றிய ஆய்வுகள் ஒரு சிலவே இருக்கின்றன. கிடைக்கும் ஆய்வுகள், வளர்முக நாடுகள் சம்பந்தமான ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை மட்டுமே அளவிட முயல்கின்றன. இந்தச் சம்பாத்தியங்கள் வளர்முக நாடுகளை எதிர்நோக்கும் காப்புவரிகளிலும் காப்புவரிகளற்ற தடைகளிலும் ஏற்பட்ட குறைப்புகளிலிருந்து வரக்கூடியவையாகும். இவை கணிசமான ஏற்றுமதி இலாபங்களாக- ஆண்டொன்றுக்குப் பல கோடி டொலர் பெறுமதியுள்ளதாக- இருக்குமென்று உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் பொதுநலவாயசெயலகமும் நடத்திய ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. கொரியாக் குடியரசு போன்ற தனி நாடுகள் சம்பந்தமாக மிக விவரமான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. கொரியாவின் காபன் உருக்கு ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அமெரிக்காவுக்கு நடைபெற்ற விற்பனைகளை 33 சதவிகிதம் அல்லது 21 கோடி 10 இலட்சம் டொலர் பெறுமதியைக் குறைத்தன. ஆனால், கொரியா மற்ற நாடுகளுக்கு உயர்விலைகளில் அதிகரித்த அளவில் விற்றதன் மூலம் இதை ஈடு செய்யும் இலாபங்களைப் பெற்றது.

கைத்தொழில்நாடுகள், வளர்முக நாடுகள் ஆகிய இரண்டுக்கும் உற்பத்திச் செலவுகள் உயர்வாகவே உள்ளன. எனினும், உற்பத்திச் செலவுகள் வளர்முக நாடுகளுக்கே கனத்த சுமையாயிருக்கின்றன. கைத்தொழில் நாடுகளிலுள்ள பாதுகாப்புக் கட்டுக்கோப்புகள் மற்றும் கைத்தொழில் நாடுகளைவிட வளர்முக நாடுகளுக்கெதிராகவே அதிக பாகுபாடு காட்டுகின்றன.

### சர்வதேச சூழல்

கைத்தொழில் நாடுகளில் வேலையின்மை அதிகரித்திருப்பதாலும் வளர்ச்சியின் வேகம் குறைந்திருப்பதாலும் வளர்முக நாடுகளின் உற்பத்திப் பொருள்களிலிருந்து போட்டி அதிகரித்திருப்பதாலும், அந்நாடுகள் வளர்முக நாடுகளிலிருந்து வரும் உற்பத்திப் பொருள்களுக்கு எதிராகத் தடைகளை அதிகரிக்கக்கூடிய ஆபத்து உண்டு. இதனால் காப்புவரிகளற்ற அதிக பாகுபாடு காட்டும் தடைகள் மிகத் திறமையாக நிர்வகிக்கப்படலாம். இத்தகைய நடவடிக்கைகள் "காட்" (காப்புவரிகள், வர்த்தகம் பற்றிய பொது ஒப்பந்தம்) முறையின் ஒருமைப்பாட்டை மேலும் சீர்குலைத்து, வளர்முக நாடுகளிலிருந்து வரும் ஏற்றுமதிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். வளர்முக நாடுகளில் பல ஏற்கெனவே கனத்த கடன் சுமையில் தள்ளாடுகின்றன; எனவே அந்நாடுகளின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் குறைந்தால், உலகப் படுகடன் பிரச்சினைகள் மோசமாகும். இறக்குமதிகள் மீது தீர்வைகளை அதிகரிப்பதன் மூலம் வர்த்தகத்தைப் பாதுகாக்கும் செயல்கள் உலகில் நிதிகளின் வளர்ச்சியையும் ஓர் ஒழுங்கான வெளிநாட்டு நாணய மாற்றையும் மூலதனச்சந்தைகளையும் பராமரிப்பதையும் பாரதூரமாகப் பாதிக்கும். இந்த நிலைமைகள் வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் வர்த்தக உபாயங்களுடன் உலகெங்கும் ஏமாற்றத்தை உண்டாக்கும். இந்த உபாயங்கள் சமீப வருடங்களில் புதிதாகக் கைத்தொழில்களைப் பெருக்கும் நாடுகளுக்குப் பெருவெற்றியளித்துள்ளன.

கைத்தொழில் நாடுகள் தங்கள் வர்த்தகத்தைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிகள் மீது தீர்வைகளை அதிகரித்தால், மற்றும் இரண்டாவது சிறந்த வழிமுறைகளைத் தேடிக்காணும் ஆராய்ச்சியில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படும். இவற்றில், பாகுபாடு காட்டும் அடிப்படையில் மத்தியிலிருந்து திட்டமிடப்படும் பொருளாதாரங்களோடும் மற்றும் வளர்முக நாடுகளுடனும் வர்த்தகத்தை விரிவாக்க முயல்வதும் அடங்கும். ஆனால் இவ்விரு திசைகளில் ஒன்றில் வர்த்தகத்தைப் பெருமளவுக்கு விருத்திசெய்வதற்கான வாய்ப்புகள் உற்சாகமூட்டுவனவாயில்லை. இரண்டில் எதுவும் கைத்தொழில் சந்தைப் பொருளாதாரங்களுடனான வர்த்தகத்துக்குப் பதிலாக அமைய முடியாது.

வாகவும் வெளிநாட்டு வர்த்தகத்துக்கு எதிராகவும் வர்த்தக— கைத்தொழில் ஊக்குவிப்புகள் பாரபட்சம் காட்டும் ஒன்றாகும். இந்த அணுகுமுறை இறக்குமதிப் பிரதியீட்டு உபாயம் என அடிக்கடி குறிப்பிடப்படுகிறது.

உட்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயம் வழக்கமாகப் பகிரங்கமாகவும் அதிக அளவிலும் பாதுகாப்பு அளிப்பதொன்றாகும். இது ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியில் உபயோகிக்கப்படும் வெளிநாட்டு உள்ளீடுகளின் அடக்க விலைகளை உயர்த்துவதன் மூலம் ஏற்றுமதிப் பொருள்களைப் போட்டியிடும் சக்தியற்றனவாக்கி விடுகின்றது. மேலும், அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகள் அமுல் செய்யப்படும் போது பணவீக்கம் ஏற்படுவதனாலோ அல்லது நாணய மாற்றுவீதம் அதிகரிப்பதனாலோ உள்நாட்டு உள்ளீடுகளின் ஒப்பியல் ரீதியான அடக்க விலைகளும் அதிகரிக்கலாம். கைத்தொழில் ஊக்குவிப்புகள் விரிவான, விஸ்தாரமான அதிகார வர்க்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன.

வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் கொள்கைகள் அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகளுக்கு மேல் காப்புவரிகளை ஆதரிக்கின்றன. இந்தக் காப்புவரிகள் வழக்கமாக உற்பத்தி மானியங்கள், கட்டுப்பாடற்ற வர்த்தக விலைகளில் உள்ளீடுகளை வழங்குதல் உட்பட மற்றும் நடவடிக்கைகளால் எதிரீடு செய்யப்படுகின்றன. ஏற்றுமதிகளையும் இறக்குமதிப் பிரதியீடுகளையும் உற்பத்தி செய்யச் சம ஊக்குவிப்புகளைப் பராமரிக்கும் ஒரு மட்டத்தில் நாணய மாற்றுவீதத்தை வைத்திருக்கவே அரசாங்கங்கள் முயல்கின்றன. கூட்டுமொத்தப் பாதுகாப்பு உட்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயத்தைக் காட்டிலும் வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயத்தின் கீழ் குறைவாக உள்ளது; பாதுகாப்பின் ஆகக்கூடிய விகிதங்களுக்கும் ஆகக் குறைந்த விகிதங்களுக்குமிடையேயுள்ள பரப்பு குறுகலாயிருப்பதும் சம முக்கியத்துவமுடையதாகும்.

எந்தக் கொள்கை அதிக அளவிலான வெற்றியை வளர்த்துள்ளது? வங்கி அலுவலர்கள் 41 பொருளாதாரங்களைப்பற்றி நடத்திய பகுப்பாய்வொன்றில், 1963ம் வருடத்துக்கும் 1985ம் வருடத்துக்குமிடையேயுள்ள

காலத்தில் வர்த்தக உபாயங்களுக்கும் பொருளாதார செயற்பாட்டுக்குமுள்ள சம்பந்தம் ஆராயப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள், உட்புறமாக வழிப்படுத்தப்படும் பொருளாதாரங்களைவிட வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் பொருளாதாரங்கள் மிக நன்றாகச் செயற்பட்டுள்ளனவென்று எடுத்துக் காட்டுகின்றன.

வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் பொருளாதார வகையிலோ அல்லது உட்புறமாக வழிப்படுத்தப்படும் பொருளாதார வகையிலோ தெளிவாகச் சேராத சில பொருளாதாரங்கள் கலவன் பெறுபேறுகளைக் காட்டின. வர்த்தக திசை வழிப்படுத்தலுக்கும் பொருளாதார - கைத்தொழில் செயற்பாட்டுக்குமிடையே திட்டமாகப் பகுத்தறியத்தக்க எந்த உறவும் காணப்படவில்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால், வர்த்தக உபாயந் தவிர்ந்த பிறகாரணிகளே பொருளாதார செயற்பாட்டை உருவாக்குகின்றன.

**கொள்கைச் சீர்திருத்தங்கள் கற்பிக்கும் பாடங்கள்**

உட்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயங்களை விட வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயங்கள் மேலான பொருளாதார செயற்பாட்டுக்கு வழிசெய்கின்றனவென்றால், வளர்முக நாடுகளிலுள்ள கொள்கைக் கர்த்தாககள இத்தகைய உபாயங்களை அடைய, பொதுவாக ஏன் கொள்கைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் தயங்குகின்றனர்? இதற்கு ஒரு காரணம், வர்த்தகச் சீர்திருத்தத் துறையில் பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்து வருவதாகும். பொருளாதார ஆராய்ச்சி இப்பிரச்சினைகளுக்கு விடையளிக்க இப்பொழுது தான் ஆரம்பித்துள்ளது. இன்னொரு காரணம், பல வர்த்தகச் சீர்திருத்தங்களை அடியோடு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாகும். அப்பொழுது வர்த்தகச் சீர்திருத்தங்கள் அதிக செலவை உண்டாக்குவதுடன் வரையறுத்த நன்மைகளையே தருகின்றன என்பதும் புலப்பட்டது.

வெளிப்புறமாக வழிப்படுத்தலை நோக்கி மாறுவதென்றால், நிலைமாறுங்காலச் செலவுகளைத் தவிர்க்க முடியாதிருக்கிறது. வர்த்தகத் துறையைத் தாராளமாக்கும் நோக்கத்துடன் வர்த்தகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் அதே வேளை நிதிகள் பெருமளவில் இடம் பெயர்கின்றன. ஏனென்றால், விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கொப்ப, சில நடவடிக்கைகள் சுருங்குகின்றன; மற்றவை விரிவடைகின்றன. பொருளாதாரம் ஆரம்பத்திலேயே அதிக அளவில் திரிபுற்றுவிடுமாயின், தேவைப்படக் கூடிய மாற்றங்கள் மிகப் பெருமளவில் இருக்கலாம். கட்புலனும் ஒரு விளைவு, வேலையில்லாமை அதிகரிப்பதாகும். எனினும், இது வர்த்தகச் சீர்திருத்தங்களால் மட்டும் ஏற்படும் ஒரு விளைவு என்பதைவிட இது அதிகமாக மோசமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளாலேயே ஏற்படுகிறது என்பதை, வர்த்தகச் சீர்திருத்தங்கள் பற்றி அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தாராள வர்த்தக முறை பெரும்பாலும் பொருளாதார நெடுக்கடிகளையடுத்தே அமுலுக்கு வருகிறது. வழக்கமாக வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக் குறை, சென்மதி நிலுவைகளில் பற்றுக் குறை, பணவீக்கம் ஆகியன ஏற்படும் போதே வர்த்தகம் தாராளமயமாக்கப்படுகிறது. இத்தகைய நெருக்கடிகள் மாற்றங்களைச் செய்வதற்கான அரசியல் திடசித்தத்தை உண்டாக்கலாம் - இது வர்த்தகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய ஒரு முக்கியமான காரணமாக அமைகின்றது. ஆனல், நெருக்கடியான ஒரு சூழ் நிலையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் தொடர்ந்து நிலைகொள்ளா திருக்கலாம். எனவே, சீர்திருத்தங்கள் சிருஷ்டிக்கும் ஊக்குவிப்புகளுக்குப் பொருளாதார முகவர்கள் செவிசாய்ப்பதெனில், சீர்திருத்தம் சம்பந்தமான அரசாங்கத்தின் நெடுங்கால கடப்பாடு கணிசமானதாகவும் நம்பத்தகுந்ததாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஏற்றுமதிச் செயற்பாட்டுக்கும் நாணயமாற்று விகிதத்தின் மட்டத்துக்கும் உறுதிக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பதை அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது. இதற்கு மறுதலையாக, உள்நாட்டு விலைகளை ஸ்திரப்படுத்துவதற்காக நாணய மாற்று வீதத்தை உபயோகித்தால், வர்த்தகச் சீர்திருத்தம் தடைப்படுகிறது. வர்த்தகச் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர முயன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளில் – அர்ஜென்டினு, சிலி, உருக்குவே போன்ற தென்மண்டல நாடுகளில் – மூலதன உட்பாய்வுகள் நாணயமாற்று விகிதம் உயர்வதற்கு அடிகோலின.

**வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தத்தின் வடிவமைப்பு**

வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தத்தின் சமீப வரலாற்றை மீளாய்வு செய்யுமிடத்து, இத்தகைய முயற்சிகளின் வடிவமைப்பில் மூன்று அம்சங்கள் ஆகக் கூடிய முக்கியத்துவம் பெறுவதாகத் தோன்றுகிறது. அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகளிலிருந்து காப்பு வரிகளுக்குச் செல்வது முதலாவது அம்சம். இது உள்நாட்டு விலைகளை வெளிநாட்டு விலைகளுடன் இணைப்பதோடு, வெளிநாட்டு உள்ளீடுகளை அடைவதற்கான வாய்ப்பை அனுமதிக்கும் அதேசமயத்தில் போட்டியையும் அதிகரிக்கிறது. இரண்டாவது அம்சம், பாதுகாப்பு விகிதங்களிலுள்ள மாறுபாடுகளைக் குறுக்குவதும் அதே வேளை அதன் கூட்டுமொத்த மட்டத்தைக் குறைப்பதுமாகும். மூன்றாவது அம்சம், இறக்குமதிகள் மீதான

காப்புவரிகளின் விளைவுகளை எதிரீடு செய்வதற்காக ஏற்றுமதிகளை நேரடியாக ஊக்குவிப்பதாகும். ஏற்றுமதிகளை ஊக்கி, விருத்தி செய்வதற்கான விசேஷ நடவடிக்கைகளால் ஒரு நிரந்தர அந்தஸ்தைப் பெறுவதற்கு ஆபத்துண்டு. எனினும், இது நாணய மாற்று விகிதம் தொடர்பான அடிப்படை மாற்றங்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு அடிகோலுகின்றது. அவை காப்புவரிகள் வர்த்தகம் பற்றிய பொது ஒப்பந்த நிருவனத்தின் விதிகளை மீறி, அவை நீக்கப்படுவதை எதிர்க்கும் உள்நாட்டுக் குழுக்களைச் சிருஷ்டிப்பதுடன், வர்த்தகப் பங்காளிகளிடமிருந்து எதிரான தீர்வைகளை எதிர்நோக்கும் ஆபத்தையும் உண்டாக்குகின்றன..

உள்நாட்டு வழங்கல் ஏற்பாட்டைக் கட்டுப்படுத்தும் பல துறைகளில் கவனஞ் செலுத்தாமல், வர்த்தகச் சீர்திருத்தங்களால் மட்டும் வினைத்திறனுள்ள கைத்தொழில் பெருக்கத்துக்கும் விருத்தியுற்ற பொருளாதாரச் செயற்பாட்டுக்கும் அடிகோலிவிடமுடியாது. இவற்றினிடையே நான்கு துறைகள் மிக முக்கியமானவையாகும்.

★ விலைக் கட்டுப்பாடுகள் குறைப்பு

இத்தகைய கட்டுப்பாடுகள் வளர்முக நாடுகளில் சர்வ வியாபகமாயுள்ளன. வழக்கமாக இவற்றின் நோக்கம், ஏகபோக உரிமைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதும், உள்ளீடுகளின் விலைகள் அதிகரிக்காமல் கட்டுப்படுத்துவதன் மூலம் கைத்தொழிலுக்கு உதவுவதுமாகும். எனினும், அவை வழங்கலைக் கட்டுப்படுத்தி, ஒப்பியல் ரீதியாக விலைகளைத் திரிபுபடுத்தி, வினைத்திறனின்மையை உண்டாக்கி, கைத்தொழில் வளர்ச்சியைத் தடைப்படுத்துகின்றன.

முதலீட்டுக்கு அனுமதி வழங்கும் ஒழுங்கு விதிகள்

அரசாங்கம் முதலிடம் அளித்துள்ள திட்டங்களுக்கேற்பத் தனியார் முதலீடுகள் செய்யப்படும் முறையை உருவாக்குவதற்காகவே இந்த ஒழுங்கு விதிகள் அமுல் செய்யப்படுகின்றன. எனினும், அவை மோசமாக வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும், அவை விலைகள், ஊக்குவிப்புகளின் அமைப்பைத் திரிபுபடுத்தி, வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளுக்கு ஊக்கமளிக்காமல் அதைரியப்படுத்துகின்றன. அத்துடன், வெளிநாட்டுத் தனியார் முதலீடுகள் ஏதேனுமிருந்தால், அவை சமூகப் பிரதிபலனில்லாத நடவடிக்கைகளில் முதலீடு செய்யப்படுவதற்கும் ஊக்கமளிக்கின்றன.

★ நிதிச்சந்தை சீர்திருத்தங்கள்

வட்டிவிகிதமும் கைப்பெட்டி மீதான கட்டுப்பாடுகளும் சேமிப்புகளுக்கு ஊக்கத்தைக் குறைத்து, முதலீட்டு முறைகளைக் குழப்பி விடலாம். வர்த்தகச் சீர்திருத்தங்களால் சிருஷ்டிக்கப்படும் ஊக்குவிப்புகளுக்கேற்ப நிதிகள் ஒரு முயற்சியிலிருந்து மற்றொரு முயற்சிக்கு மாற்றப்படுவதை அனுமதிப்பதற்காக, சீர்திருத்தங்கள் அவசியமாகும்.

தொழிலாளர் சந்தை சீர்திருத்தங்கள்

இந்த ஒழுங்கு விதிகளில் சில விலைகளையும் தொழில் நுட்பவியல் தெரிவுகளையும் குழப்பி, வேலை வாய்ப்புகள் குறைவதற்கு அடிகோலுகின்றன. வர்த்தகச் சீர்திருத்தங்களில் தொழிலாளர் சந்தை வளைந்து கொடுக்கக்கூடியதாயிருப்பதும் ஒரு முக்கியமான பகுதியாகும்.

வர்த்தகச் சீர்திருத்தங்களும் உள்நாட்டுச் சந்தை சீர்திருத்தங்களும் ஒன்று சேர்ந்திருந்தால், நாடுகள் உட்புறமாக வழிப்படுத்தப்படும் வர்த்தக உபாயங்களிலிருந்து வெளிப்புறமாக வழிப்படுத்தப்படும் உபாயங்களுக்கு மாறுவதற்கும் வசதியாயிருக்கும். இதற்கு முன்பு, கைத்தொழில் பெருக்க முயற்சியினதும் வளர்ச்சிக்கான பௌதிக உள்ளமைப்பினதும் துணைப் பகுதிகள், கல்வி, சட்டக் காரணிகள், நிறுவனக் காரணிகள் ஆகியன இவ்வேலைக்குப் போதுமானவையாக இருக்க வேண்டியதவசியம். ஆனால், சர்வதேச வர்த்தகச் சூழ்நிலை இப்பொழுதுள்ளதை விட அதிக சுதந்திரமாயிருந்தால் மட்டுமே, வர்த்தகச் சீர்திருத்தங்களிலிருந்து நன்மைகளை அதிகரிக்க முடியும். அத்துடன், பாதுகாப்பு (காப்பு வரிகள்) குறைவாயிருப்பதுடன் மட்டுமன்றி, அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகளைவிட விலைத் திட்ட நடவடிக்கைகளையே அதிகமாகச் சார்ந்திருக்கவும் வேண்டும்.

---

(11 பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுமதிகளை மேம்படுத்தவும் இறக்குமதிகளை நியாயமானவையாக ஆக்கவும் எதிர்பார்க்கின்றன.

அமைப்பு, முகாமைச் சீர்திருத்தங்களுக்கேற்ப வெளிநாட்டுப் பொருளாதாரத் திட்டமிடல் திருத்தப்பட்டுவருகிறது. புதிய திட்டமிடற் கோட்பாடுகளுடன் பல்வேறு பிரிவுகளும் உற்பத்தியாளர்களும் பெற்றுக்கொள்ளப்படும் நாணயத்துக்கிசைவாக ஏற்றுமதி இலக்குகளை குறிப்பிட்டுக்கொள்வர். வெளிநாட்டு நாணயமாற்றைக் கடனாகப் பெறுவதற்கும் உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்புண்டு. தேசிய பொறுப்புகள் அரசாங்க ஒப்பந்தங்களின் மூலம் நிறைவேற்றப்படும். சீர்திருத்தங்கள் சரியான வழியில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. கூட்டு உற்பத்தி, நேரடித் தொடர்புகள், கூட்டு முயற்சிகள் என்பவை தொடர்பாக உற்பத்தியாளர்கள் கூடிய உற்சாகத்துடன் செயலாற்றுகின்றனர்.

மாணவர் பக்கம்

## பணத்தை பெறுமதியிறக்கம் செய்தல்

பணம் என்பது ஒரு செலாவணி ஊடகமாகும். அதாவது பணத்தின் மூலம் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் பரிமாற்றம் இடம் பெறுகிறது. ஒரு பொருளின் பெறுமதிக்கும் பணத்தின் பெறுமதிக்கும் இடையில் ஒரு வித்தியாசம் உண்டு. ஒரு பொருளுக்கு பாரம்பரிய பெறுமதியும் பாவனைப் பெறுமதியும் உண்டு. ஒரு பொருளை நேரடியாக நுகர முடியும்; அல்லது அதனை ஒரு உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றலை ஏற்படுத்த முடியும். ஆனால் பணத்துக்கு அத்தகைய பெறுமதிகள் எதுவுமில்லை. பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்யும் ஆற்றலைக் கொண்டே பணத்தின் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. பணத்தின் கொள்வனவுச்சக்தி மாற்றமடைவது என்பது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றமாகும். இது பண நிரம்பல் மற்றும் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் நிரம்பல் போன்றவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் செய்யும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் பணத்தைக் கொண்டே தீர்க்கப்படுகின்றன. சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு நாட்டினதும் பணத்தின் பெறுமதியைக் கணிப்பதற்கென செலவாணி விகிதம் ஒன்றுண்டு. உதாரணமாக, ஒரு அமெரிக்க டொலர் இலங்கை நாணயத்தில் ரூபா 30 அளவில் இருக்கிறது. இங்கிலாந்தின் ஸ்டேர்லிங் பவுண் ஒன்று ரூ. 45 அளவில் இருக்கிறது. பணத்தின் சர்வதேச பரிமாற்றப் பெறுமதி என்பது பொருளாதாரத்தின் ஆற்றலைப் பொறுத்த ஒரு விஷயமாகும். அனைத்து நாடுகளதும் பணத்துக்கு சர்வதேச ரீதியில் கேள்வி இருப்பதில்லை. அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண், யப்பானிய யென், ஜேர்மனிய டொயிஷ் மார்க், பிரான்சின் பிராங் என்பன பொதுவாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயங்களாகும். சர்வதேச வர்த்தகத்தின் பெரும் பகுதி இந்த நாணயங்களுக் கூடாகவே நடைபெறுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் பாவனையில் இருக்கும் வளர்ச்சி கண்ட நாடுகளில் ஏற்றுமதி பெறுமதி இறக்குமதி பெறுமதியை விடவும் அதிகமாகும். இவ்வேற்றுமதிகளில் பெருமளவு வளர்முக நாடுகளுக்கே செல்கின்றன. இவ்விதம் மூன்றும் உலக நாடுகளுக்கு பொருட்களை பாரிய அளவில் விற்பனை செய்வதன் மூலம் வளர்ச்சி கண்ட நாடுகளின் பொருளாதார ஆற்றல் பெருகியுள்ளது. மேலும், இந்நாடுகளின் இறக்குமதிப் பெறுமதி குறைத்திருப்பதும் ஓர் அனுகூலமாக இருக்கிறது.

மூன்றாவது மண்டல நாடுகளைப் பொறுத்த வரையில் அந்நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு நெகிழ்ச்சித் தன்மையுள்ள ஒரு கேள்வியே நிலவுகிறது. இப்பொருட்களுக்கான விலைகளும் உறுதியானவையாக இருப்பதில்லை. இதன் காரணமாக ஏற்றுமதிகள் மூலம் கிட்டும் வருமானம் குறைவாகவே இருக்கிறது. அதே வேளையில் இந்நாடுகள் பெருமளவில் இறக்குமதிகளில் தங்கியிருப்பதால் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் பெருமளவில் இடம் பெறுகின்றன. இதன் விளைவாக, ஏற்றுமதிகளுக்கான கொடுப்பனவுகளை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு இறக்குமதிப் பெறுவனவுகள் போதியதாய் இல்லாதிருப்பதனால் அன்னியச் செலாவணி உழைப்பு குறைகிறது. மேலும், மூன்றாவது மண்டல நாடுகளுக்குத் தேவையான கடனுதவிகளுக்கான ஊற்றுக்கண்களாகவும் வளர்ச்சியடைந்த நாடுகள் இருக்கின்றன. இதன் காரணமாக இந்த வளர்ச்சி கண்ட நாடுகளின் பணம் முக்கிய இடத்தைப் பெறும் அதே வேளையில் வளர்முக நாடுகளின் பணம் சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் குறைந்து காணப்படுகின்றது. ஒரு நாட்டின் பணம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெறவேண்டுமென்றால் அன்னியச் செலாவணிச் சம்பாத்தியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். ஏற்றுமதி வருமானங்களைப் பெருக்கிக்கொள்ளும் விஷயத்தில் வளர்முக நாடுகள் இயற்கை அல்லது செயற்கை தடங்கல்களை எதிர்நோக்குகின்றன. நெகிழத்தக்க கேள்வி நிலவும் முதனிலைப் பண்டங்களின் ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்துக்கொள்ள முடியாது. வளர்ச்சியடைந்த நாடுகளில் விற்பனை ஏகபோகம் காணப்படுகின்றது.

இதனால் வளர்முக நாடுகள் தங்களுடைய ஏற்றுமதிகளுக்கு நல்ல விலைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருக்கின்றன. ஏற்றுமதிகளைப் பெருக்கி சந்தைகளைப் பன்முகப்படுத்திக் கொள்வதில் வளர்முக நாடுகள் பல முட்டுக்கட்டைகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றன. வளர்முக நாடுகளின் பணத்துக்கு சரியான பெறுமதி கிடைக்காதிருப்பதும் இதனாலேயேயாகும். இதன் விளைவாக செலாவணி விகிதத்தை பெறுமதியிறக்கம் செய்ய வேண்டியிருக்கிறது. வள்ர்முக நாடுகளின் பணத்தின் வெளிப் பெறுமதி அல்லது செலாவணி விகிதம் அந்நாடுகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளிலேயே தங்கியிருக்கின்றது.

பணத்தை பெறுமதியிறக்கம் செய்வதன் விளைவு என்னவெனில், பெறுமதியிறக்கம் நடைபெறும் நாட்டின் பணத்தில் அதிக அளவு வெளிநாடுகளின் பணத்துக்கு செலுத்த

வேண்டியிருப்பதாகும். உதாரணமாக, டொலரின் பெறுமதி 30 ரூபாவாக இருக்கும்பொழுது 10% பெறுமதியிறக்கம் செய்தால் ஒரு டொலரின் பெறுமதி 33 ரூபாவாக உயரும். உண்மையில் அப்பொழுது நிகழ்வதென்னவெனில் நாம் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தொகை உயர்வதாகும். மறுபுறத்தில், ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் மேலே உயரும். இறக்குமதிகளை கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்த வரையில், பணத்தை பெறுமதியிறக்கம் செய்வது அந்நாடுகளுக்கு ஓரளவுக்கு அனுகூலமானதாக இருக்கக் கூடும். அந்நாடுகள் பெருமளவில் கைத்தொழில் பொருட்களையே ஏற்றுமதி செய்கின்றன. இப்பொருட்களின் உற்பத்திக்கு தேவையான உள்ளீட்டுப் பொருட்களில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்படுபவை அல்ல. பணப் பெறுமதியிறக்கத்தினால் ஏற்றுமதிப் பொருட்கள் மலிவடைவதனால் வெளிநாட்டுச் சந்தைகளில் கேள்வி உயரும்; இதன் விளைவாக ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரிக்கும்; வெளிநாட்டுச் செலாவணி சேமிக்கப்படும். இதனையும் கூட ஓர் எல்லைக்குள்ளேயே செய்ய முடியும். மற்ற நாடுகளும் எதிர்விளைவுகள் காட்டத் தொடங்குவதே இதற்கு காரணமாகும்.

வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் இதன் மூலம் வெற்றிகரமான விளைவுகளைப் பெற்றுக்கொள்வது கடினமாகும். பிரதம விளைபொருள்களே இந்நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களாகும். இப்பொருட்களுக்கான சந்தைகளை வெளிநாடுகளில் இலகுவில் பெருக்கிக்கொள்ள முடியாது. மேலும், இந்நாடுகள் கைத்தொழில் அல்லது விவசாய பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டுமானால் அதற்கான உள்ளீடுகளை இறக்குமதி மூலமே பெற வேண்டியிருக்கிறது. எனவே பணத்தை பெறுமதியிறக்கம் செய்யும் போது உள்ளீட்டுப் பொருட்களின் விலையதிகரித்து அதன் விளைவாக, உற்பத்தி செய்யப்படும் பொருட்களினது விலைகள் உயரும். அப்படி நேரும் போது வெளிநாட்டு சந்தைகளை வென்றெடுப்பது சிரமம். அது மட்டுமல்லாது இந்நாடுகள் பெருமளவிலான நுகர் பொருட்களை இறக்குமதி செய்கின்றன. பணப் பெறுமதியிறக்கம் மூலமாக இப்பொருட்களின் விலை உயர்ந்தாலும், இப்பொருட்களுக்கு நெகிழ்ச்சியற்ற கேள்வி நிலவி வருவதால் கேள்வியில் எந்த வீழ்ச்சியும் ஏற்படாது. இதன் காரணமாக வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை குறைத்துக் கொள்ள முடியாது. மறுபுறத்தில், இப்பொருட்களின் உள்நாட்டு விலைகள் சார்புரீதியில் உயர்வாக இருப்பதனால் வெளிநாட்டில் மட்டுமன்றி உள்நாட்டிலும் எமது பணம் பெறுமதியிறக்கம் அடைவதற்கான தூண்டுதல் உருவாகின்றது.

பணத்தின் பெறுமதியிறக்கமானது வாழ்க்கைச் செலவு மீதும் மோசமான தாக்கத்தைக் கொண்டு வருகின்றது. பொருட்களின் விலை உயர்வதனால் நாட்டு மக்களின் மெய்வருமானம் குறைவடைகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பொதுவாக பணச் சம்பளங்கள் அதிகரிக்கப்படுகின்றன. ஆனால், பணப் பெறுமதியிறக்கத்தின் விளைவாக ஏற்பட்ட பணவீக்க விகிதத்துக்கேற்ற விதத்தில் சம்பளங்கள் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்க முடியாது. இதனால் சம்பளம் பெறுபவர்களின் வாழ்க்கைத்தரம் சீர்குலைந்து அவர்கள் நெருக்குதல்களுக்குள்ளாகின்றனர். வளர்முக நாடுகளில் 50% க்கும் அதிகமானோர் தமது சீவனோபாயத்துக்கு விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். சம்பள அதிகரிப்புக்களினால் இக்குழுவினருக்கு எவ்வித நன்மைகளும் கிட்டுவதில்லை. எனவே இவர்களே மிகக் கூடுதலான துன்பங்களுக்கு ஆளாகின்றனர். சம்பள அதிகரிப்பொன்று ஏற்பட்டாலும் விவசாய உற்பத்திகளுக்கு நல்ல விலைகள் கிடைக்காது போகலாம்.

இதன்படி பார்க்கும் போது, பணப் பெறுமதியிறக்கம் மூலம் நாட்டின் அபிவிருத்திப் படிமுறையில் வெற்றிகரமான தாக்கங்களை கொண்டுவர வேண்டுமானால் சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுதல் அவசியமாகும்.

பிரதம விளைபொருட்களின் ஏற்றுமதி படிப்படியாக குறைவடைதல் வேண்டும்; அவ்வாறில்லாவிடில், பணப் பெறுமதியிறக்கம் மூலம் ஏற்றுமதியாளர்கள் அதைரியப் படுத்தப்படல் வேண்டும். அதே நேரத்தில் ஏற்றுமதித் துறையில் போதிய ஊக்குவிப்புக்களை அளித்து தொழில் முயற்சியாளர்களையும், வர்த்தகர்களையும் இத்துறைக்குள் ஈர்த்தெடுக்க வேண்டும். சர்வதேச சந்தையில் அவர்களுக்கு நல்லதொரு இடம் கிடைக்க வேண்டும். குறிப்பாக, புதிய ஏற்றுமதித் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் அபாய ஏதுக்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய பொருத்தமான சூழலொன்றை நாட்டுக்குள் ஏற்படுத்த வேண்டும்.

பணத்தின் பெறுமதியிறக்கமானது, தொழில்முயற்சியாளர்களை கணிசமான அளவுக்கு உள்நாட்டு கைத்தொழில்களின்பால் ஈர்ப்பதற்கு உடந்தையாயிருத்தல் வேண்டும். எனினும், பணப் பெறுமதியிறக்கம் மூலம் இந் நிபந்தனைகள் யாவும் நன்மை தரக்கூடிய வகையில் செயற்படுமா என்பது சந்தேகத்துக்குரியதே. இந்நிபந்தனைகள் பிரதிகூலமான விதத்தில் செயற்படுவதே பல சந்தர்ப்பங்களில் நிகழ்வதாகும்.

தலைமைத் தபால் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

# பொருளியல் நோக்கு

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிட்டட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.